QA3
M96
115875

T.D.R.C. 728

R.R. 16-4-1896

AN ANALYSIS

OF

# BISHOP PEARSON'S EXPOSITION OF THE CREED.

---

வேதசாஸ்திரியாராகிய

பியர்சன் அத்தியட்சரவர்கள் இயற்றின

## விசுவாசப் பிரமாணத்துக்குப் பொருள்விளக்கம்.

OFFICE OF THE REGISTRAR
2 DEC. 96
MADRAS.
728

"பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டும்." யூதா. 3.

MADRAS:

PUBLISHED BY THE MADRAS DIOCESAN COMMITTEE OF THE SOCIETY FOR PROMOTING CHRISTIAN KNOWLEDGE, AND SOLD AT THEIR DEPOSITORIES, VEPERY AND MASULIPATAM.

1896.

OFFICE OF ... 2- DEC. 96 MADRAS
169
4-1896
169/128
115915

# AN ANALYSIS
OF
# BISHOP PEARSON'S EXPOSITION OF THE CREED.

---

வேதசாஸ்திரியாராகிய

பியர்சன் அத்தியட்சரவர்கள் இயற்றின

# விசுவாசப் பிரமாணத்துக்குப் பொருளடக்கம்.

---

"பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை
ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக
நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டும்." யூதா. 3. வச

---

MADRAS:
PUBLISHED BY THE MADRAS DIOCESAN COMMITTEE
OF THE SOCIETY FOR PROMOTING CHRISTIAN KNOWLEDGE,
AND SOLD AT THEIR DEPOSITORIES,
**VEPERY** AND **MASULIPATAM.**

1896.

AN ANALYSIS OF
BISHOP PEARSON'S EXPOSITION OF THE CREED.

வேதசாஸ்திரியாராகிய

பியர்சன் அத்தியட்சரவர்கள் இயற்றின

# விசுவாசப் பிரமாணத்துக்குப்

## பொருளடக்கம்.

## I. உபதேசம்.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள
பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

விசுவாசிக்கிறேன் என்ற வார்த்தை தமிழ் விசுவாசப்பிரமாணத்தில் நாலுதரம்மாத்திரம் வந்தாலும், அது ஒவ்வொரு உபதேசத்தோடும் ஒவ்வொரு உபதேசத்தின் ஒவ்வொரு உறுப்போடும் சேர்க்கப்படவேண்டியது. இப்படிப்பார்க்கில் விசுவாசிக்கிறேன் என்ற சொல் இருபத்துநாலுவிசை தோன்றும். விசுவாசிக்கிறேன் என்பதைப்பற்றி மூன்று காரியங்களைக் கவனிப்போம்.

I. விசுவாசிக்கிறது இன்னது.

II. விசுவாசத்தை அறிக்கையிடுவது இன்னது.

III. விசுவாசத்தை அறிக்கையிடவேண்டிய முகாந்தரம்.

I. விசுவாசத்தின் தன்மை.

விசுவாசிக்கிறது இன்னது என்று அறியும்பொருட்டு விசுவாசம் இன்னதென்று அறியவேண்டும்.

விசுவாசமென்றாலும் நம்பிக்கையென்றாலும் ஒரே பொருளை விளக்கிய வார்த்தைகளாம்.

1. விசுவாசமாவதென்ன? நம்பப்படத்தக்கதை உண்மையென்று அங்கீகாரம்பண்ணுவதே விசுவாசம்.

2. யாதொரு காரியத்தைப் புத்தியினாலே அறிந்து ஏற்றுக்கொள்வதே அங்கீகாரம்.

கவனிப்பு.—விசுவாசமெல்லாம் அங்கீகாரமாயினும், அங்கீகாரமெல்லாம் விசுவாசமாகாது.

(1) சுபாவ அறிவு. ஐம்புலன்களுக்கும் புத்திக்கும் விஷயமாகிற காரியங்கள் சுபாவ அறிவைப்பற்றியது.

(2) அருத்தாபத்தி.

க. எளிதாய் விளங்காத காரியங்களின் உண்மையை எளிதாய் விளங்கிய காரியங்களோடே ஒத்துப்பார்த்து அவற்றிற்குரிய சம்மந்தங்களை அறிதல் கல்விக்குரிய விவேகமான அருத்தாபத்தி பிரமாணமாயிருக்கிறது.

உ. காரியங்களை ஒன்றோடொன்று ஒத்துப்பார்க்கும்போது அவற்றின் உண்மை பிரத்தியட்சமாய் விளங்காமல் அனுமானமாய்த் தோன்றுமானால் அவைகள் அபிப்பிராயத்துக்குரிய காரியங்களாம்.

(3) விசுவாசமானது, விளங்கப்பட்ட அத்தாட்சியினால் அல்லது சாட்சியின் பிரமாணத்தினால்மாத்திரம் அங்கீகாரத்துக்கு உரியவைகள். அவ்வித அங்கீகாரமே விசுவாசம் அல்லது நம்பிக்கையெண்ணப்படும்.

3. விசுவாசமானது சாட்சியின் நம்பிக்கைக்குத் தக்கதாக வித்தியாசமாயிருக்கும்.

(1) சாட்சியத்தின் நம்பிக்கை, சாட்சியின் நம்பிக்கைக்குத் தக்கதாய் வித்தியாசமாயிருக்கும். இது,

க. அவனுடைய அறிவுக்கும்,

உ. அவனுடைய உண்மைக்குத் தக்கதாகவும் இருக்கும்.

(2) சாட்சிகள் இருவகைப்படும்.

க. மனிதசாட்சி.—ஆகவே மனிதனைப்பற்றின விசுவாசமானது மனிதர் சொல்லும் வாக்குமூலத்தின்பேரில் நம்பப்படத்தக்கதை உண்மையென்று அங்கீகரிப்பதேயாம். இது எப்போதும் தவறாததாய் இருக்கமாட்டாது.



உ. தேவசாட்சி.—ஆகவே தேவன் அருளிய சாட்சியின் பேரில் காரியத்தைச் சத்தியமென்று அங்கீகாரம் பண்ணுவதே தேவ வாக்கைப்பற்றின விசுவாசம். இது எப்போதும் தவறாததாய் இருக்கும்.

(3) தேவசாட்சி அருள் வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இது நேராயும் மூலியமாயும் கொடுக்கப்படும்.

க. நேராய்.—தேவன் நேராய் மனிதருக்குத் தமது சித்தத்தை வெளிப்படுத்துவதாம். ஆபிரகாம், மோசே, தீர்க்கதரிசிகள்.

உ. மூலமாய்.—தீர்க்கதரிசிகளுக்குத் தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்தி, அவர்கள் மூலமாய் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதாம். இஸ்ரவேலர், ஆதிக்கிறிஸ்தவர்கள்.

(4) ஆகவே தேவனைப்பற்றின விசுவாசமானது, தேவன் நேராயும் மூலியமாயும் வெளிப்படுத்தியிருக்கிற அவருடைய சாட்சியை அங்கீகரிப்பதேயாம். இது குறைவற்ற சிறந்த விசுவாசமாயிருக்கிறது.

க. ஆகவே 2 பேது. 1. 21-ல் சொல்லியபடி வேதத்தி
லுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளுடைய
தாய் இராததால் தீர்க்கதரிசிகள் தங்கள் உரைத்த தீர்க்கதரிசனங்
களுக்கு அவர்கள் ஆக்கியோன்கள் அல்ல என்றறியவேண்டியது;
ஏனெனில் அவர்கள் சொன்ன பொருள் தேவனுடையது.

உ. மோசேயும் இஸ்ரவேலரும் திவ்விய அதிகாரத்தின்
பேரில் அதே உபதேசத்தை அங்கீகாரம் செய்தார்கள். ஆனால்
அவர்கள் அங்கீகாரம் பண்ணின விதத்துக்கும் நாம் அங்கீகாரம்
பண்ணின விதத்துக்கும் வித்தியாசமுண்டு. ஆகவே,

ங. மோசே தேவனுக்கு எப்படி இருந்தானோ, அப்படியே
அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்கு இருந்தார்கள். யூதர் மோசேக்கு
எப்படி இருந்தார்களோ, அப்படியே அப்போஸ்தலரால் கூணப்
பட்ட சபையார் அப்போஸ்தலருக்கு இருந்தார்கள். யூதர்கள்
பழைய ஏற்பாட்டுக்கு இருந்தபடியே, கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்
டுக்கு இருக்கிறார்கள்.

1. யூதர், மோசேயின் கையில் தேவனுடைய வல்லமையைக் கண்டு, அவனுடைய நாவில் தேவசத்தியம் இருந்ததென்று விசுவாசித்தார்கள்.

2. ஆதிக்கிறிஸ்தவர்கள், அப்படியே அப்போஸ்தலர் செய்த அற்புதங்களைக் கண்டு, அவர்கள் மூலமாய் அருளப்பட்ட திருவாக்கை விசுவாசித்தார்கள்.

3. யூதர்கள், மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதிவைத்தவைகளை விசுவாசித்தார்கள்.

4. கிறிஸ்தவர்கள் மோசேயும் தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் எழுதிவைத்தவைகளை விசுவாசிக்கிறார்கள்.

ரு. ஆகவே தேவனுடைய சாட்சியினால் உண்மையென்று விளங்கி, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் எழுதிவைத்த வேதாகமங்களினால் அருளப்பட்ட சத்தியங்களை அங்கீகாரம்பண்ணுவதே கிறிஸ்தவர்களுக்குரிய விசுவாசம்.

II. விசுவாசத்தை அறிக்கையிடுவது இன்னது.

1. விசுவாசம் மனதைப்பற்றினது. அது பிறருக்குத் தோன்றாது. ஆதலால்,

2. திருச்சபை உண்டாகிறதற்கு அதை வெளியரங்கமாய் அறிக்கையிடவேண்டியது அவசியம்.

3. விசுவாசமும் அறிக்கையும் இரட்சிப்புக்குரியதாயிருக்கிறது. (ரோ. 10. 9, 10, மத். 10. 32.)

III. விசுவாசத்தை அறிக்கையிடவேண்டிய முகாந்தரம்.

1. தேவன் அப்படிச் செய்யக் கட்டளையிட்டிருக்கிறார். அதால் அவர் மகிமைப்படவும் செய்கிறார். (1 பேது. 3. 15.)

2. அப்படிச் செய்வதினால் இரட்சிப்புண்டாகும் என்ற வாக்குத்தத்தமுண்டு. (ரோ. 10. 9.)

3. மற்றவர்களுடைய ப[illegible]பினைக்கும் நன்மைக்கும் ஏதுவுண்டு.

4. தேவனுடைய மகிமைக்காக அப்படிச் செய்யவேண்டிய[illegible]க்கிறது.

5. இதனால் சத்தியத்துக்குச் சாட்சி பகர்ந்து வேதத்தைக் குறித்து நாம் வெட்கப்படுகிறவர்கள் அல்லவென்று திருஷ்டாந்தப்படுத்துகிறோம். (லூக். 9. 26.)

---

## தேவனை விசுவாசிக்கிறேன்.

தேவனுடைய சாட்சியின்பேரில் விசுவாசமானது நிலைநிற்கிறதால் தேவன் உண்டு என்பது அதில் தொக்கி நிற்கிறது.

I. தேவன் என்ற வார்த்தையின் கருத்து.

II. தேவன் என்பதில் அடங்கிய பொருள்.



I. தேவன் என்பதின் கருத்து.

1. தேவன் என்னும் பேர்.—வேதத்தில் வழங்கும் தியாஸ் என்னும் கிரேக்க வார்த்தைக்கு ஒத்திருக்கிறது. சில வித்துவான்கள் அந்தக் கிரேக்கு வார்த்தை அசைவு என்னும் அர்த்தங்கொள்ளும் தியோ என்ற வினைச்சொல்லிலிருந்து உண்டானது என்கிறார்கள்.

சமஸ்கிருதத்தில் "தேவன்" என்பது திவ் என்றாகும்.

அதின் அர்த்தம் ஜோதி, பிரகாசம்.

தெய்வம் என்கிற வார்த்தை தமிழில் வழி என்று அர்த்தமாம்.

2. பராபரன் என்பது.

(1) ஜீவனை உண்டுபண்ணும் சக்தியாகிய பரம் என்பதையும், ஜெகத்தை உண்டுபண்ணும் சக்தியாகிய அபரம் என்பதையும் குறிக்கும் என்றும்,

(2) ஆதியும் அந்தமுமாயிருக்கிறவர் பராபரன் என்றும், [illegible] என்னும் பிரகிருதிக்கு மேலாக இருக்கிறவர் என்றும் சொல்லப்பட்டிருந்தும், ஆனால் பராபரம் என்ற வார்த்தை பல விகற்பமான அர்த்தங்கொள்ளும். சைவசமய சம்பிரதாய பதமாயிருப்பதால் அந்த வார்த்தையை வேத புஸ்தகத்தில் வழங்காமல் விட்டுவிட்டார்கள்.

3. கடவுள்.—இது இங்கிலீஷில் (God) காட் என்று வழங்கிவருகிறது. அந்த வார்த்தைக்கு [illegible]மை என்று அர்த்தம். சிலர் அது கடந்துநின்று எல்லாவற்றையும் தமக்குள் அடக்கிக்கொண்டிருக்கிறவர் என்று தாற்பரியப்படுத்துவார்கள். ரிக் வேதத்தில் பிரமத்துக்கு க (யார்) என்ற வினா பேரிடப்பட்டிருக்கிறது. இது கடவுள் என்ற பதத்துக்கு மூலமாயிருக்கலாம்.

4. பகவன் என்பது குணா[illegible]தையுடையவர் என்றர்த்தம்.

5. எல், எலோயீம், அல்லா என்னும் பதங்கள் எபிரெயு அரபி முதலிய செமிய பாஷைகளில் விளங்கும். யேகோவா என்பது எபிரெயுவில் தேவனுக்கு இடப்பட்ட காரணப்பெயர்.

6. பிரமம் என்பது வேதாந்தங்களில் விரிவு என்று அர்த்தம் கொள்ளும். வேதத்தில் விளங்கும் பிரமத்துக்கு சப்தபிரமம் என்றும், பரத்தில் விளங்கும் பிரமத்துக்கு [illegible]பிரமம் என்றும் பேர்.

7. பதி என்பது ஆண்டவர் [illegible] அர்த்தங்கொள்ளும். இது ஆகமசாஸ்திரங்களில் வழங்கும். விசுவாசப்பிரமாணத்தில் தேவன் என்கிற மொழி சகல வஸ்துக்களுக்கும் ஆதிகாரணராகிய ஒன்றான மெய்த்தேவனையே குறிக்கும்.

## II. தேவன் என்பதில் அடங்கிய பொருள்.

1. தேவனைப்பற்றிய கருத்து.

(1) அவர் அவசியமாகச் சுயம்புவாய் இருக்கவேண்டியவர்.

(2) அவர் ஆதிகாரணராய் இருக்கவேண்டியவர்.

(3) மேலான ஆதீனமுடையவராய் இருக்கவேண்டியவர்.

2. தேவன் உண்டு.

தேவன் உண்டென்கிற அறிவு இருவகைப்படும். புறத்தறிவு, அகத்தறிவு.

(1) புறத்தறிவு.

க. அனுமானப் பிரமாணத்தின்படி காரணமில்லாமல் காரியமில்லை. காரியமானது காரணமுண்டென்று காண்பிக்கிறது. காணப்பட்ட உலகமாகிய காரியம், அதை உண்டாக்கின காரண கர்த்தாவைக் காட்டுகிறது.

உ. ஒருக்காலும் காரியமாய் மாறாமல் பிரத்தியேகமாய் நின்று உபகாரணங்களையும் காரியங்களையும் உண்டாக்கக்கூடிய வரே மூலகாரணராயிருக்கக்கூடியது.

ஒன்று தன்னைத்தானுண்டாக்க ஒரே நேரத்திலிருக்கவும் இல்லாதிருக்கவும் வேண்டியது. அது கூடாதகாரியம். ஆதலால் மாறுதல் நடந்தால் அதை நடப்பிக்கிறது நாம் இருக்கவேண்டும்.

ங. உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் யாதொரு காரியத்தையாவது, நோக்கத்தையாவது நிறைவேற்றும்படி உண்டாக்கப்பட்டிருக்கிறபடியாலும், அதன்படியே காரியங்கள் நடந்தேறப்பட்டு வருகிறபடியினாலும், சராசரமனைத்தையும் தாம்கொண்டிருக்கிற நோக்கத்தின்படி நடத்துகிற ஆதிகாரணர் கடவுள் உண்டென்று விளங்குகிறது.

ச. உலகிலுள்ள மனிதர் யாவரும் தெய்வம் உண்டு என்ற உண்மையைப்பற்றிச் சம்மந்த முள்ளவர்களாய்ச் சாட்சி பகருகிறார்கள்.

ரு. தீர்க்கதரிசனம். மனிதருடைய புத்திக்கு எட்டாத எதிர்கால காரியங்களை, பின்நடப்பதில் முன்னறிவிப்பது தேவன் உண்டென்பதற்கு திருஷ்டாந்தமாயிருக்கிறது.

சு. அற்புதம். மனிதருடைய வல்லமைக்கு மேலாகச் செய்யப்படுகிற அற்புத கிரியைகளும் தேவன் உண்டென்று விளக்குகிறது.



(2) அகத்தறிவு.

மனச்சாட்சியினால் தேவன் உண்டென்று அறிகிறோம்.

### போதனை.

1. தெய்விய விசுவாசத்துக்கு இந்தச் சத்தியமானது மூலமும், ஆதாரமுமாயிருக்கிறது என்றறியலாம்.

2. நம்முடைய வணக்கத்துக்குரியவர் ஒருவர் இருக்கிறார் என்று அறியலாம்.

## III. அவர் ஏகத்துவமுடையவர்.

1. அதின் அர்த்தம்.

ஒரே தேவனை விசுவாசிக்கிறேன் என்பதில் அடங்கியவைகளாவன. இந்த உபதேசமானது,

(1) நாஸ்திகத்துக்கு எதிரிடை.

(2) நேகோகூஷரவாதத்துக்கும் விக்கிரகாராதனைக்கும் எதிரிடை.

சாம்பும் சுயாதீனமுமுள்ள இரண்டு பிரத்தியேக தேவர்களிருந்தால், ஒருவருடைய நோக்கத்தை ஒருவர் தடுப்பார். கலகமும் விரோதமு முண்டாகும்.

2. இந்த உபதேசம் சத்தியம் என்பதை.

(1) தெய்வீகதன்மையினால் அறியலாம்.

க. மூலகாரணர் ஒருவரே இருக்கக்கூடியது.

உ. பூரணதன்மையுள்ளவர் ஒருவரே இருக்கக்கூடியது.

(2) தெய்வீக ஆளுகையினால் அறியலாம். மற்றபடி ஓயாத குழப்பங்களுண்டாகலாம்.

(3) ஆகவே ஒரே தேவன்மாத்திரமே இருக்கக்கூடியது.

### இந்த உபதேசத்தினால் நாம் கற்றுக்கொள்ளும் போதனை.

1. சகல பரிபூரண இலட்சணங்களையுடைய மகா பொருளே தேவன் என்று நம்பிப் பற்றிக்கொள்ளவும்.

2. தெய்வீகத்துக்குரிய கனத்தையும் மகிமையையும் அவருக்கே செலுத்தவும் ஒரே தேவன் உண்டு என்று விசுவாசிக்கவேண்டும்.

## சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

---

சர்வவல்லமை என்ற பதம் பின்வரும் இரண்டு கிரேக்க வார்த்தைகளின் மொழிபெயர்ப்பாயிருக்கிறது.

I. παντοκράτωρ சர்வ ஆதிக்கம் என்பதைக் குறிக்கும்.

II. παντοδύναμος என்பது சர்வசக்தியைக் குறிக்கும்.

I. சர்வ ஆதிக்கம்.

1. தமது இஷ்டப்படி வேண்டியதைப் படைக்க வல்லவர்.

2. தாம் படைத்த எல்லாவற்றையும் தமக்குச் சொந்தமாக உடைத்தாயிருக்கிற ஆதிக்கமுடையவர்.

(1) அவர் படைக்கப்பட்டவைகளுக்கெல்லாம் மூலமாயிருக்கிறார்.

(2) சகல சிருஷ்டிகளின்பேரில் ஆதிக்கமுள்ளவர்.

(3) சகல சிருஷ்டிகளின்பேரில் சர்வ ஆதிக்கமுள்ளவர்.

(4) சகல சிருஷ்டிகளின்பேரில் என்றென்றைக்கும் சர்வ ஆதிக்கமுள்ளவர்.

3. தமக்குரியவைகளைத் தமது சித்தத்தின்படி ஆண்டு நடத்தும் வல்லமையுடையவர்.

(1) [illegible]டைய பிரயோசனத்துக்காகவும்,

(2) [illegible]டைய மகிமைக்காகவும் அப்படி நடத்துகிறார். ஆகவே தேவன் சராசரமனைத்துக்கும் ஆதியும் அந்தமுமான காரணராயிருக்கிறார்.

### போதனை.

1. அவருக்கு பயபக்தியோடே கீழ்ப்படிந்து நடந்துவரவேண்டும்.

2. பொறுமையுடன் அவர் சித்தத்துக்கு இணங்கி நடக்கவேண்டும்.

3. அவருக்கு நன்றியறிதலுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும்.



II. சர்வ சக்தி παντοδύναμος.

1. சர்வ வல்லவர் என்ற சொல் எபிரெயு பாஷையில் சேனைகளின் கர்த்தர் என்றர்த்தம்கொள்ளும் சபேயோத் என்றும், தற்பரன் அல்லது சுயம்பு என்றர்த்தம்கொள்ளும் சத்தாய் என்றும் வரும்.

சபேயோத் என்பது ஆதிக்கத்தையும்; சத்தாய் என்பது அதிகாரத்தையும் குறிக்கும். ரபீமார் அந்த வார்த்தை பூரணத்தைக் குறிக்கும் என்பார்கள்.

சிலர் அது சங்காரத்தைக் குறிக்கும் என்பார்கள்.

2. இந்தச் சம்பூரணத்துக்கு ஊற்று அவ[illegible]டத்திலேயே இருக்கிறது.

3. இந்தக் கருத்து, ஆறும் உபதேசத்தில் விரித்துக் காட்டப்பட்டிருக்கிறது. அதைப்பார்க்க.

παντοδύναμος என்ற பதம் சகலத்தையும் கொள்ளத்தக்கவர். சகலத்தையும் காக்கத்தக்கவர் என்றர்த்தம்கொள்ளும் என்று சிலசபைப் பிதாக்கள் அர்த்தப்படுத்தினதுண்டு.

---

## பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

---

பிதா என்ற பேர் தேவனுக்குரியதென்பதை அஞ்ஞானிகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

பிதா தன்மைக்கு ஆதாரம், சிருஷ்டிப்பு.

I. தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தபடியால், அவர் பொதுவாக எல்லா சிருஷ்டிகளுக்கும் பிதாவாயிருக்கிறார்.

II. அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தமது ஏகசுதனாக அநாதியாய் ஜெனிப்பித்ததினாலே விசேஷமாய்ப் பிதா என்னப்படுகிறார்.

I. தேவன் எல்லா சிருஷ்டிகளுக்கும் பிதா.

1. அஃறிணைப் பொருள்களுக்கு.
பொதுவாக எல்லாக்காரியங்களுக்கும். (யோபு. 38. 28.)

2. உயர்திணைப் பொருள்களுக்கு.

(1) தேவதூதர். (யோபு. 38. 7.)

(2) மனிதர். (மல்கி. 2. 10.)

3. ஆதரிப்பினாலும் பராமரிப்பினாலும்.

4. மனிதர் இழந்துபோன நன்மைகளை மறுபடியும் அவர்களுக்கு அருளிச்செய்து அவர்களை நித்திய நிர்ப்பந்தத்திலிருந்து விடுதலையாக்கி, அவர்களுக்கு மாறாத இன்பத்தை அளிக்கிறபடியாலும்.

5. மனிதர்களை மறுபிறப்பினால் சுத்தம்பண்ணித் தமக்குப் பிள்ளைகளாக்கி, பிள்ளைகளுக்குரிய சலாக்கியங்களை அவர்களுக்கு அளிக்கிறபடியினாலும்.

6. தேவன் தம்முடைய கிருபையினால் எவர்களைத் திருச்சபையில் சேர்க்கிறாரோ, அவர்களுக்குப் புத்திர சுவிகாரத்தை அருளி அவர்களைத் தமக்குச் சுவிகாரத்தின் பிள்ளைகளாக்குவதினாலும்.

7. விசுவாசிகளை உயிரோடே எழுப்பி, அவர்கள் சரீரங்களை அவர்கள் ஆத்துமாக்களோடே இணைத்து, நித்திய ஜீவனை அருளி மகிமைப்படுத்துவதினாலும் பிதாவாயிருக்கிறார்.

போதனை.

1. நாம் பிள்ளைப்பத்தியாய் அவருக்குப் பயந்து கீழ்ப்படிந்து வணக்கத்தைச் செலுத்தவேண்டும்.

2. நாம் நிச்சயத்தோடே நமது விண்ணப்பங்களைத் தைரியமாகச் செய்து, மனதார அவருக்குத் துதி செலுத்தவேண்டும்.

3. துன்பத்தில் தேவன் பிதாவாகத் தண்டிக்கிறார் என்று உணர்ந்து, அதைப் பொறுமையாய்ச் சகிக்கவேண்டும்.

4. பிதா எவ்வித குணமுள்ளவராயிருக்கிறாரோ பிள்ளைகள் என்னப்படுகிற நாமும் அவ்விதமான குணமுள்ளவர்களாயிருந்து, அவருடைய நன்மை சுபாவத்தையும் பரிசுத்தத்தையும் பின்பற்றவேண்டும்.

II. தேவன் விசேஷமாய்க் *கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குப் பிதாவாயிருக்கிறார்.

1. தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு விசேஷித்த வண்ணம் பிதாவாயிருக்கிறார் என்பதே விசுவாசப்பிரமாணத்தின் மூலகருத்தாயிருக்கிறது.

(1) திருச்சபைப் பிதாக்கள் அப்படியே வியாக்கியானம் செய்திருக்கிறார்கள்.

(2) விசுவாசப் பிரமாணத்தின் சரித்திரத்தைப் பார்க்கையில் அது ஞானஸ்நான சட்டத்துக்குச் சரியான வாய்பாடாயிருக்கிறது.

(3) விசுவாசப்பிரமாணத்தில் பிதா என்பது குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் வித்தியாசமாக திரித்துவத்தில் முதல்வருக்குச் சொல்லப்படுகிறது.



2. கிறிஸ்துவின் மனுஷீகத்தின்படி தேவன் அவருக்குப் பிதாவாயிருக்கிறார்.

(1) கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரால் ஜெனிப்பிக்கப்பட்டதினாலும்,

(2.) அவர் இஸ்ரவேலருக்கு ராஜாவாக அனுப்பப்பட்டதினாலும்,

(3) மரித்தோரிலிருந்து எழும்பினதில் குமாரன் என்று சாட்சியிடப்பட்டிருப்பதினாலுமே.

3. கிறிஸ்துவின் தெய்வீகத்தில் தேவன் அவருக்குப் பிதாவாயிருக்கிறார். பிதா தேவனாயிருப்பதுபோல குமாரனும் அப்படியே தேவனாயிருக்கிறார்.

(1) தேவனுடைய பிதா தன்மை ஏகமானது; எனெனில்,

க. ஜெனிப்பிப்புக்குத் துவக்கமும் முடிவுமில்லை.

உ. குமாரன் பிதாவோடே ஒத்த தன்மையுடையவராயிராமல் ஒரே தன்மையுடையவரா யிருக்கிறார்.

(2) பிதா தன்மை ஏகமாயிருப்பதால் பிதா திரித்துவத்தில் முதல்வராயிருக்கிறார்: காலத்தில் முந்தினதினாலுமல்ல, தன்மையில் மேன்மை என்பதினாலும் அல்ல; முறைமை அல்லது வரிசையில் முதல்வராய் இருக்கிறார். பிதாவிடத்தில் இயற்கையாயிருந்த தேவ தன்மையும் இலட்சணங்களும் பிதாவால் குமாரனுக்கு அறுதியில் கையளிக்கப்பட்டது. ஆகவே,

க. யோவா. 14. 28; 5. 19, 26, 30–ம் *வாக்கியங்களில் நம்முடைய இரட்சகருடைய அபகர்ஷத்தைக் குறித்துச் சொல்லியது, அவருடைய தெய்வீகத்துக்கடுத்ததாகத் தாற்பரியப்படுத்தப்படவதுண்டு.

உ. பிதாவானவரின் விசேஷித்த மகிமையைப் பார்க்கையில் அவருக்குக் குமாரனிருந்த முகாந்தரத்தால் அவர் தேவனாயிருக்கவில்லை. கிறிஸ்துவானவருக்குப் பிதா இருப்பதால் அவர் தேவனும் குமாரனுமாயிருக்கிறார்.

ங. கிறிஸ்துவானவர் பிதாவினால் அனுப்பப்படுகிறவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிதா அனுப்பப்படுகிறவர் அல்ல.

* சிலர் இவ்வாக்கியங்கள் அவருடைய மனுஷீகத்தைத் தழுவி நிற்கின்றன என்பார்கள்.

ச. திரித்துவரு[illegible] பார்க்கில் பிதா, குமாரன், பரிசுத்தஆவி.

(3) பிதாவின் ஏக தன்மையைப்பற்[illegible] பிதாவுக்கும் குமாரனுக்குமிருக்கிற சம்பந்தத்தை விளக்க திருச்சபை[illegible] பிதாக்கள் பிதாவைக்குறித்து மூலம், காரணம், அடி, அஸ்திபாரம், [illegible]ன்ற வார்த்தைகளைக்கொண்டு உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சாட்சியங்களினால்.

க. பிதா, குமாரன் என்பதில் வித்தியாசம் விளங்குகிறது.

உ. இந்த வித்தியாசம் குமாரன் பிதாவிலிருந்து தேவதன்மையைப் பெற்றுக்கொண்டார் என்பதில் விளங்குகிறது.

ங. சபையின் பிதாக்களில் சிலர் இதால் தப்பான சித்தாந்தத்தை உண்டுபண்ணினார்கள். அதாவது,

பிதாவானவர் குமாரனிடத்திலிருந்து தமது தன்மையைப் பெற்றுக்கொள்ளாமல் தம்மிடத்திலிருந்தே பெற்றுக்கொண்டார் என்றார்கள். அது மதியீனமும் நேர் விரோதமுமாயிருக்கிறது.

கவனிப்பு.—தேவன் தாமாயிருக்கிறவர். அவர் தாமே தமக்கு மூலமல்ல, குமாரன் பிதாவினாலே யிருக்கிறார்.

(4) ஆகவே பிதா என்பதில் தேவன் அநாதிகாலத்திலே யிருந்து தமது தன்மையைக் குமாரனுக்குக் கையளித்தார் என்பதைக் குறிக்கும்.

இதினால் தேவன் என்று வேதத்தில் அடிக்கடி வருவது பிதாவை மாத்திரம் குறிக்கும்.

### போதனை.

1. நாம் தேவனுக்குச் செலுத்தும் ஆராதனையில் பல தேவர்கள் உண்டென்கிற அவிசுவாசத்தில் மயங்காதிருக்கவேண்டியது.

2. ஒரே ஆவியால் ஏவப்பட்டு, ஒரே மத்தியஸ்தரின் வழியாய்ப் பிதாவினிடத்தில் சேர்ந்து, கிருபையைப் பெற்று, இரட்சிப்பை யடைய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

## வானத்தையும் பூமியையும் படைத்தவர்.

இந்த வார்த்தைகள் அதிபூர்வ விசுவாசப்பிரமாணத்தில் இல்லை. பிந்தி அவைகள் கிரேக்கு, லத்தீன் விசுவாசப்பிரமாணங்களில் சேர்க்கப்பட்டன.



I. சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள்.

II. சிருஷ்டித்த தொழில்.

III. சிருஷ்டித்த கர்த்தர்.

### I. சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள்.

வானமும் பூமியும்.—இது சராசரமனைத்தையும் குறிக்கும். நீசேயின் விசுவாசப்பிரமாணத்தில் காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளும் என்று சொல்லியிருக்கிறது.

1. வானமும் பூமியும்.—சமஸ்தம் என்பதற்கு எபிரெயருக்குள் வார்த்தையுமில்லை. கிரேக்கருக்குள்ளும் அப்படிப்பட்ட வார்த்தை இல்லை.

ஆனால் அவர்களுக்குள் எழும்பின பிதாக்கோரு என்பவன், ஒழுங்கு, அழகு என்றர்த்தம்கொள்ளும் காஸ்மாஸ் என்ற வார்த்தையை உலகத்தைச் சுட்டிக்காட்டும்படி உண்டுபண்ணினான்.

2. சிருஷ்டிப்பின் சரியான உபதேசம்.

தேவனைத்தவிர, தேவனும் உண்டுபண்ணப்படாதது ஒன்றுமில்லை. ஆகவே,

(1) உண்டுபண்ணப்படாதது தேவன்.

(2) தேவனல்லாதது எல்லாம் உண்டுபண்ணப்பட்டது.

3. சிருஷ்டிப்பைப்பற்றிய கள்ள உபதேசம்.

எகிப்தியர், கிரேக்கர், இந்துக்களுக்குள்ளிருந்த சில ஞானிகள் உலகம் நித்தியமுள்ளதென்றும், அது தேவனுடைய ஒரு கூறு என்றும் சாதித்தார்கள். இந்த அபிப்பிராயம் அபத்தம். அது அவர்கள் சொல்லும் நியாயங்களுக்குப் பொருந்தாமையாயிருக்கிறது. அந்த நியாயங்களாவன.

(1) உண்டாக்கப்பட்டது அழிவுக்குரியது.
உண்டாக்கப்படாதது அழிவுக்குரியதல்ல.

### உத்தரவு.

க. இது மட்டான அனுபோகத்தினால் கட்டப்பட்ட அனுமானம்.

உ. அது வேத சத்தியத்துக்கு விரோதம்.

(2) சமஸ்தம் என்பது தேவனையும் அடக்கும்; அதாவது உலகமும் கடவுளும் ஒன்று. இந்தக் கொள்கைக்கு அத்துவைதம் என்று பேர்.

### உத்தரவு. இ[illegible]ல்.

க. ஒன்று தானேத் தன்னை உண்டாக்கிக்கொண்டது என்று சொல்வதாய் இருக்கும். காரணத்தையும் காரியத்தையும் ஒன்றாக்குகிறது, மதியீனமாம்.

உ. மேலும், அது சமஸ்தம் என்பதில் தேவனும் அடக்கம் என்ற பொய்யான சாதனத்தின்பேரில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அது ஒப்புக்கொள்ளப்படத்தக்கதல்ல.

(3) இப்போது நமக்குமுன்பாகப் பிரத்தியட்சமாய் உண்டாகி அழிந்துபோகிற வஸ்துக்களினால் உலகம் உண்டான விதத்தை நாம் நிச்சயிக்கக்கூடாது.

### உத்தரவு.

க. உலகத்தின் சில பாகங்களிலிருக்கிறபடி உலக முழுமையிலும் நாம் பார்க்கிறதில்லை என்பதைக் காட்டுகிறது.

உ. மேலும் இந்தச் சாதனம் மேற்படி சித்தாந்தத்துக்கு இடம்கொடாது.

(4) ஒன்றுமில்லாமையிலிருந்து யாதொன்றும் கடவுளாலும் உண்டாக்கப்படக்கூடாது. இவர்கள் ஆதிபூதங்கள், நித்தியம் என்பார்கள். அவர்களுக்குப் பேர் துவைதர்.

### உத்தரவு.

க. ஒன்றுமில்லாமை என்பது துணைக்காரணத்தை மாத்திரம் குறிக்குமென்றால் அவர்கள் சொல்லியது அபத்தம்.

உ. ஒன்றுமில்லாமையென்பது எவ்வளவேனும் காரணமின்றி, அதாவது துணைக்காரணமும் நிமித்தகாரணமும் இல்லாமலென்றால், எப்போதும் அவர்கள் சொல்லியது சத்தியமல்ல.

## II. சிருஷ்டித்த தொழில்.

1. சிருஷ்டித்தலைப்பற்றியும்.
2. சிருஷ்டிகளைப்பற்றியும்,
3. சிருஷ்டித்த காலத்தைப்பற்றியும் பார்ப்போமாக.

1. சிருஷ்டித்தலைப்பற்றி.—அதாவது துணைக்காரணமின்றி வானத்தையும் பூமியையும் உண்டாக்கினதைக் குறிக்கும்.

(1) சிருஷ்டித்தல் என்பதற்குரிய எபிரெயு, கிரேக்கு பாஷைகளின் மூலபதங்கள் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கினதைக் குறியாது.



(2) அதின் சரியான உபதேசத்தை வேதவாக்கியங்களினால் அறியலாம்.

க. மூலபாஷைகளின் வார்த்தைகள். "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவர்" என்பதைக் குறிக்கும். (ரோ. 4. 17.)

உ. உலகம் உண்டாக்கப்பட்ட காரியமாயிருப்பதாலும் அறியலாம்.

(3) ஆகவே பிரகிருதி நித்தியமென்பது அபத்தம்.

க. அது தேவனுடைய நன்மைச் சுபாவத்துக்கும் சர்வசக்திக்கும் எதிரிடையாயிருக்கிறது.

உ. கிறிஸ்துமார்க்கத்தின் வெளிச்சத்தையடைந்த நியோப்ளேத்தோனியரும் அதைத் தள்ளியிருக்கிறார்கள்.

(4) ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றும் உண்டாக்கக்கூடாதென்பதும் அபத்தம். ஏனென்றால்,

க. விபட்சத்தார் சொல்லும் சமாதானம் அதற்கு இடம் கொடுக்கிறதில்லை. திருஷ்டாந்தமாக வித்தைத்தேர்ச்சி, இயற்கையின் வளர்ச்சி.

உ. அந்தச் சாதனத்தினால் சித்தாந்தத்தை ஸ்திரப்படுத்த ஏலாது.

சிருஷ்டியின் பெலவீனத்தைக்கொண்டு சிருஷ்டிகரும் பெலவீனமுள்ளவர் என்றும், இயற்கையில் சிலபாகத்தைக்கொண்டு உலகமுழுமையும் அப்படியே இருக்கும் என்றும் சாதிப்பது யுத்தியல்ல.

(5) சிருஷ்டிகள், இரண்டுவகையாய்ச் சிருஷ்டிகருக்குச் சம்மந்தப்பட்டிருக்கிறது.

க. துணைக்காரணங்கள் இல்லாமல் உண்டாக்கப்பட்டவகையில்; வானம், பூமி, அரூப பொருட்கள், சூட்சம சரீரங்கள், வானவர் கூட்டம், ஆத்துமாக்கள், பஞ்சபூதியங்கள்.

உ. துணைக்காரணங்களைக்கொண்டு உண்டாக்கினவகையில்; புல், விருட்சங்கள், மச்சங்கள், பறவைகள், மிருகங்கள், மனிதசரீரம்.

2. சிருஷ்டிகர்.

(1) அவருடைய நன்மைச் சுபாவத்தினால் அசைவுண்டானது.

க. அது புறத்துக் காரணங்களினாலல்ல.

உ. அது அவர் உள்ளத்தில் தானேயுண்டானது.

(2) அப்படி அவசியமே அவருடைய சித்தத்தின்படி தீர்மானிக்கச் சுயாதீனமுள்ளவராயிருந்தார்.

க. அவர் மற்றவர்களுக்கு நன்மை செய்ய கடமையுள்ளவராய் இருக்கவில்லை,

உ. அப்படி நன்மைசெய்ய கட்டாயப்படுத்துவாருமில்லை.

௩. சிறந்த நன்மை உண்டாகும் என்றதினாலுமல்ல.

(3) அவர் திருவுள்ளத்தில் தானாய் உண்டான அந்த அவசியம் உறுதிப்பட்டுத் தீர்மானம்பெறவே, அவர் வல்லமை விளங்கச் சகலமும் உண்டானது.

3. உலகம் உண்டாக்கப்பட்ட காலம்.

(1) உலகம் அநித்தியமுள்ளது.

(2) மனிதகுடியிருப்பான உலகம் மிகவும் அநித்தியமுள்ளது.

க. அசீரியர், சீனர், இந்துக்கள் உலகமுண்டானதற்குச் சொல்லும் நீண்ட கணக்குகள் போந்த திருஷ்டாந்தத்தோடே ரூபிக்கப்படத்தக்கவைகள் அல்ல.

உ. பல தேசத்தாருடைய மூலத்தையும் அவர்கள் பாஷைகளையும், கல்விகளையும், சாஸ்திரங்களையும், தொழில்களையும் சரித்திரங்களையும் விசாரித்தறியும்போது சத்தியவேத கணக்கே சரியென விளங்கும். இதுவரையும் 135 தலைமுறையாகியிருக்கிறது.

III. சராசரங்களைத்தையும் சிருஷ்டித்தவர்.

1. அதை உண்டுபண்ணின கடவுள் ஒருவரே.

(1) சிருஷ்டிகளுக்குள் பேதங்களில்லை என்பதைக் கவனிக்கையில் சிருஷ்டிகர் இருவர் என்று எண்ணுவதற்கு இடமில்லை.

(2) மெனிக்கேயருடைய கொள்கையின் அபத்தம்.

க. நன்மையும் தீமையும் வெவ்வேறான காரியங்கள். நன்மையைச் சிருஷ்டித்தவர் நல்ல தேவன் என்றும், பாவத்தைச் சிருஷ்டித்தவர் துஷ்டதேவன் என்றும் சாதித்தார்கள். ஆனால் நன்மையின் அபாவம் தீமை.

சிருஷ்டிகளுடைய குறைவினாலும் பற்றுதலினாலும் தீமை யுண்டாகிறது.

நன்மை செய்கிறவரும் தீமைக்கு வரவேண்டிய துன்பத்தைக் கட்டளையிடுகிறவரும் ஒருவரே.



உ. எடுத்துக் காட்டப்படும் சாதனம் அபத்தமானதால், ஒருவருக்கொருவர் எதிராளியாயிருக்கிற இரண்டு தேவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படும் சாத்தியமும் அபத்தமாம்.

2. பிதாவாகிய தேவன் படைத்தார் என்பதற்குரிய நியாயம்.

(1) குனோஸ்திகர் இராசதம் தாமதம் என்ற தீய குணங்களையுடைய தேவன் உலகத்தை உண்டாக்கி, பழைய ஏற்பாட்டை அருளினான் என்றும்,

சாத்துவீகக் குணத்தையுடைய தேவன் புதிய ஏற்பாட்டை அருளினான் என்றும் போதித்தார்கள்.

(2) ஆரியானர் கிறிஸ்து ஆதி சிருஷ்டியென்றும், அவரால் சகலமும் உண்டாயிற்றென்றும் சாதித்தார்கள்.

க. மேற்சொல்லிய கொள்கைகள் சிருஷ்டியாகிய கிரியையும் சிருஷ்டிகர்த்தாவையும் ஏகமாக்குகிறது.

உ. கடவுள் சர்வத்தையும் நன்மையாகச் செய்தார் என்ற சத்தியவேத சாட்சியை விரோதிக்கிறது.

(3) இந்துதேச வேதாந்திகள் சிருஷ்டி கிரியைகளைச் செய்யாதிருக்கிற பிரமம் குணாதீதராயிருக்கிறார் என்றும், பிரமம் பிரகிருதியோடே சிருஷ்டிக்கும்படி பற்றுதலாகும்போது திரிமூர்த்திகளாய்ப் பிரகாசித்துத் திரிகுணங்களுக்கும் உரியவராகி, முத்தொழில்களையும் நடப்பித்துவருகிறார் என்றும் சொல்லுகிறார்கள். இதினால் நன்மைக்கும் தீமைக்கும் உரியவராயிருக்கிற பிரமம் நன்மைக்கும் தீமைக்கும் காரணர் என்று விளங்குகிறது.

(4) திரியேகத்துவத்திலுள்ள மூவருக்கும் பொதுவாயிருக்கிற தத்துவ இலட்சணங்கள் சம்மந்தமுறையினால் திரித்துவத்தில் முதலவராயிருக்கிற பிதாவுக்கே உரியதாகையால், சிருஷ்டி தொழில் பிதாவுக்கே உரியதென்று விசுவாசப்பிரமாணத்தில் காட்டியிருககிறது.

(5) பிரகிருதியினால் உலகத்தை உண்டுபண்ணின துஷ்ட தேவதையின் வல்லமையிலிருந்து மனிதனை மீட்டு ரட்சிக்க தேவசுதனாகிய கிறிஸ்து வெளிப்பட்டார் என்ற தப்பிதமான கொள்கையைக் கண்டிக்கும்படி, சர்வத்தையும் படைத்தவர் தேவசுதனாகிய கிறிஸ்துவின் பிதாவென்று உறுதிப்படுத்த சிருஷ்டிப்பு பிதாவின் செயல் என்று கண்டிருக்கிறது.

### இந்த உபதேசத்தினால் நாம் கற்றுக்கொள்ளும் போதனை.

1. காணப்படுகிற பொருள்களினால், காணப்படாத கடவுளின் உண்மையை அறிந்து அவருக்கு மகிமையைச் செலுத்தவும்.

2. கடவுளின் மட்டற்ற வல்லமையை உணர்ந்து நாம் நம்மைத் தாழ்த்தவும்.

3. மன உற்சாகமாய் அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும்.

4. அவர் நமக்கு உதவிசெய்ய வல்லமையும் சித்தமுமுடையவராயிருப்பதால் அதால் ஆறுதலடையவுமே.

## 2. உபதேசம்.

### அவருடைய ஒரே குமாரனாயிருக்கிற நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்.

திரித்துவத்தில் முதல்வரானவரை விசுவாசிக்கிறேனென்று அறிக்கையிட்டபின்பு, இரண்டாவதானவரை விசுவாசிக்கிறேன் என்று அறிக்கையிடவேண்டியதால் அவரைக்குறித்து அடுத்துச் சொல்லியிருக்கிறது.

இந்த உபதேசத்தில்.

I. அவருடைய தன்மை.

II. அவருடைய ஆதிக்கம்.

III. அவருடைய நாமங்கள் அடங்கியிருக்கின்றன.

பூர்வ யூதர் மேசியா, தேவனுடைய ஒரே குமாரன், தேவகுமாரன் என்பதை நன்றாய் அறிந்திருந்தார்கள். (யோவா. 1. 50.)

I. இயேசுகிறிஸ்துவானவருடைய குமாரத்துவம்.

II. அவர் தேவனுடைய ஒரேகுமாரன்.

I. இயேசுகிறிஸ்துவானவருடைய குமாரத்துவம்.

1. பொதுவாய்.

(1) பரிசுத்த ஆவியானவரால் கன்னிமரியாளிடத்தில் பிறந்ததினால். (லூக். 1. 35.)

(2) மேசியாவாக அனுப்பப்பட்டதினால். (சங். 72. 6; யோவா. 10. 34, 36.)



(3) உயிர்த்தெழுந்ததினால். (அப். 13. 33.)

(4) சகலத்துக்கும் சுதந்தரவாளியாயிருப்பதினால். (எபி. 1. 3-5.)

2. விசேஷித்த வகையாய், அதாவது அவர் கன்னிமரியாளிடத்தில் பிறப்பதற்குமுன்னே தேவகுமாரனாயிருந்தார்.

(1) இயேசுகிறிஸ்துவானவர் மனிதனாகப் பிறப்பதற்கு முன்னிருந்தார்.

(2) அவர் சிருஷ்டிக்கப்படாமல் தேவனாயிருந்தார்.

(3) அவர் தேவதன்மையைப் பிதாவிலிருந்து அடைந்திருக்கிறார்.

(4) அவர் அப்படி தேவதன்மையை அடைந்தது சரியான ஜெனிப்பிப்பு.

(5) இந்தத் தேவதன்மை கிறிஸ்துவுக்கு அளிக்கப்பட்டபடி மற்ற ஒருவருக்கும் அளிக்கப்படாதபடியால், அவர் ஒருவரே பிதாவினுடைய ஒரேபேறான குமாரனாயிருக்கிறார்.

(6) அவர் கன்னிமரியாளிடத்தில் பிறக்கிறதற்கு முன்னே இருந்தார்.

க. அது உள்ளபடியான சங்கதி. இதை நியாய இலக்கணப்படி பார்ப்போம்.

**பூர்வ சாதனம்.**—உள்ளபடி பரலோகத்திலிருந்தவரே, பரலோகத்திலிருந்து இறங்கினார். அவர் அதற்குமுன்னே தமது பிதாவினால் ஜெனிப்பிக்கப்பட்டவர். அவர் கன்னிகையிடத்தில் உற்பவிக்கும் முன்னே இருந்தார். அதற்குரிய மூன்று அனுமானங்களாவன.

முதலாவது, அவர் உற்பவித்ததற்கும் பரமேறினதற்கும் இடையில் கன்னிகையிடத்தில் பெற்றுக்கொண்ட உருவத்தைவிட வேறே தத்துவத்தை அவர் பெற்றுக்கொள்ளவில்லை.

இரண்டாவது, கன்னிகையிடத்தில் பிறந்தவர் முதலாவது பூமியிலிருந்தார்.

மூன்றாவது, பரலோகத்திலிருந்தவர் உள்ளபடியே இருந்தார்.

**உத்தர சாதனம்.**—பரலோகத்திலிருந்த இயேசுகிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கினார். அவர் அதற்குமுன்னே பிதாவினால் ஜெனிப்பிக்கப்பட்டவராயிருந்து மறுபடியும் பரலோகத்துக்கு எழுந்தருளினார் என்பது யோவா. 6. 62-ல் ரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர் மூந்தியும் பரலோகத்துக்குப் போனார் என்று சோசினியன் எண்ணினது சுவிசேஷங்களில் காட்டப்படவில்லை. அப்படி ஏற

வதினால் ஒரு மோக்ஷம் நிறைவேற எதுவில்லாததால் பிரயோசனமுமில்லை. மேலும் இது அவருடைய ஆசாரியப் பணிவிடைக்கு எதிரிடையாகவுமிருக்கிறது.

உ. அவர் வெகுகாலத்துக்கு முன்னேயிருந்தார்.

அவர் யோவானுக்கு முன்னிருந்தார். (யோவா. 1. 15.)

அவன்தான் முந்திவந்தவன் என்றும், அவர் தன்னைவிட மேன்மையுள்ளவர் என்றும், இதற்கு மூகாந்தரமாக அவர் தனக்கு முன்னிருந்தவர் என்றும் சொல்லியிருக்கிறான்.

அவர் ஆபிரகாமுக்கு முன்னிருந்தவர் (யோவா. 5. 58.). சோசினியர் "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னே" என்பது புறஜாதியார் அழைக்கப்படுவதையும் "நான் இருக்கிறேன்" என்பது நான் தேவனுடைய முன்னறிவிலிருந்தேன் என்பதையும் குறிக்கும் என்று பிதற்றினார்கள்.

௩. அவர் சிருஷ்டிப்புக்கு முந்தி இருந்தார்.

முந்தின உலகத்தின் முடிவிலிருந்து இருந்தார்.

**பூர்வ சாதனம்.**—ஜலப்பிரளயத்துக்கு முன்னிருந்தார். கன்னிமரியாளிடத்தில் உற்பவிக்கும்முன் இருந்தார்.

**உத்தர சாதனம்.**—இயேசுகிறிஸ்து ஜலப்பிரளயத்துக்கு முன்னிருந்தார் என்பது 1 பேது. 3. 18–20–ல் குறிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வாக்கியத்தின்பேரில் நாம் கவனிக்கவேண்டியது.

முதலாவது, கிறிஸ்துவானவர் தாம் உயிரோடே எழுப்பப்பட்ட ஆவியினால் அதாவது திவ்விய ஆவியால் பிரசங்கித்தார்.

இரண்டாவது, அவர் கீழ்ப்படியாதவர்களுக்குப் பிரசங்கித்தார்.

மூன்றாவது, அவர்கள் நோவா பேழையை உண்டாக்கின காலத்தில் கீழ்ப்படியாமையைக் காட்டினவர்கள். ஆகவே அவர் ஜலப்பிரளயத்துக்கு முன்னிருந்தார்.

௪. அவர் முதல் உலகம் ஆரம்பமாகிறதற்கு முந்தியிருந்தார். அவர் அதைச் சிருஷ்டித்தார். (எபி. 1. 2; 11. 3.)

சோசினியர் இதை இரண்டு வகையாய்ப் புரட்டுகிறார்கள்.

முதலாவது, தேவகுமாரன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று சொல்லியது ஆட்சேபிக்கக்கூடாதபடி சிருஷ்டிப்பைக் குறிக்குமென்றால், தேவகுமாரன் அப்படிச் செய்தார் என்பதை அது குறியாது என்றும்,

இரண்டாவது, அப்படி அது தேவனைக்குறிக்குமென்பது ஆட்சேபிக்கக்கூடாத சத்தியம் என்றால், அப்போது சிருஷ்டிப்பென்பது



உருவக அலங்காரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதைக் குறிக்கும் என்றும் சாதிக்கிறார்கள்.

சிருஷ்டிப்பு ஆட்சேபிக்கக் கூடாதவண்ணமாய் உள்ளபடியே கிறிஸ்துவின் கிரியையாயிருக்கிறது.

**பூர்வ சாதனம்.**—எபி. 1. 8–12–ல் சொல்லப்பட்டிருக்கிறவர் உலகத்தைச் சிருஷ்டித்தார். இங்கே சொல்லப்பட்டிருக்கிற உலக சிருஷ்டிப்பு, உருவக அலங்காரமுள்ளதல்ல.

**உத்தர சாதனம்.**—ஆனால் எபி. 1. 8–12–ல் சொல்லப்பட்டிருக்கிறவர் இயேசுகிறிஸ்துவே. மேலும் கிறிஸ்து தேவகுமாரன் என்று ஆட்சேபிக்கக் கூடாதவண்ணம் தெளிவாய்க் காட்டியிருக்கிறது.

சிருஷ்டிப்பு உருவக அலங்காரமாய்க் காட்டப்படவில்லையென்பது கொலோ. 1. 15–17–ல் பிரத்தியட்சமாய் விளங்குகிறது. காணப்படுகிறவைகள் காணப்படாதவைகளும், ௱.

சிருஷ்டிப்பானது; உருவக சிருஷ்டிப்பென்றும், உள்ளபடியான சிருஷ்டிப்பென்றும் இருவகைப்படும்.

உருவகம், மனிதனைப்பற்றியது.

சிருஷ்டிப்புக்குக் கிறிஸ்துவே நிமித்தகாரணரும், முதற்காரணருமாயிருக்கிறார் என்று மேற்படி வாக்கியங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது.

௫. உலகத்துக்கு முந்தியிருந்தார். யோவா. 1. 1–3–ல் சொல்லப்பட்டவர், உலக சிருஷ்டிப்புக்கு முன்னிருந்தார். வார்த்தையானவர்,

உலகம் உண்டாகி இருந்தபோது, சிருஷ்டிக்கப்படவில்லை. தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தபோது வார்த்தையானவர் அவரோடு இருந்தார். அவர் தேவனாய் இருந்தார்.

இந்த உபதேசம் பழைய ஏற்பாட்டில் காட்டப்பட்டிருக்கிறது. (ஆதி. 1. 3. சங். 33. 6. எபி. 11. 3.)

பூர்வ யூதர் தேவன் என்று சொல்லப்பட்ட இடத்தில் வார்த்தை (மெம்றா) என்ற பெயரை வழங்கினார்கள். எலினிஸ்தரான யூதர் லோகாஸ் என்ற பதத்தை மெம்றாவுக்குப் பதிலாக உபயோகித்தார்கள். ஆகவே யோவான்காலத்திலிருந்த யூதர்கள் லோகாஸ் என்ற பதத்தை நன்றாய் அறிந்திருந்தார்கள்.

௬. ஆகவே கிறிஸ்துவானவர், பரிசுத்த ஆவியினாலே உற்பவிக்கிறதற்குமுன்னே இருந்தார் என்பது நிச்சயம். இது தற்கால சோசினியரைப்போல கிறிஸ்துவானவருடைய முன்னிருப்பை மறு

தலித்த பொதினியருடைய கொள்கையையும் நிராகரிக்கிறதாயிருக்கிறது.

(7) இப்படி முன்னிருந்த அவர் உண்டாக்கப்பட்டவரல்ல, தேவனாயிருந்தார்.

க. அவர் சகலத்தையும் சிருஷ்டித்ததால், அது ரூபகாரப்படுகிறது.

௨. **பூர்வ சாதனம்.** — தேவனுடைய ரூபமாயும் அவருக்குச் சமமாயுமிருந்து, தம்மை வஞ்சித்துக்கொள்ளாமலும், தேவனுக்குக் குறைவை உண்டுபண்ணாமலுமிருக்கிறவர் தேவனாக இருக்கவேண்டும்.

**உத்தர சாதனம்.**—இயேசுகிறிஸ்து தேவனுடைய ரூபமாயும், அவருக்குச் சமமாயுமிருந்து தம்மை வஞ்சித்துக்கொள்ளாமலும் தேவனுக்குக் குறைவை உண்டுபண்ணாமலுமிருந்தார். அது பிலி. 2. 6, 7-ல் ரூபிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வாக்கியத்தினால் மூன்று திருஷ்டாந்தங்களைப் பார்க்கிறோம்.

முதலாவது, அவர் மனிதனானபோது அடிமையின் ரூபம் எடுத்தார். அவருடைய தொழில், அவருடைய பாடுகள் மரணத்தையும் மாத்திரம் பற்றினதாயிராமல் அவர் மனிததன்மையைத் தரித்துக் கொண்டதையும் குறிக்கும். "அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கினார், தம்மைத்தாமே தாழ்த்தினார்" என்பது அதைக் காட்டுகிறது. இந்த வியாக்கியானம் சரியென சங். 40. 6. எபி. 10. 5-ல் ரூபகாரப்படுகிறது.

இரண்டாவது, அவர் அடிமையின் ரூபத்தை எடுப்பதற்கு முன்னமே தேவனுடைய சாயலாயிருந்தார். முன்னிருப்பவர், தாம் இன்னொரு உருவத்தை அணிகையில், அப்படி அந்த உருவத்தை அணியுமுன் இருக்கவேண்டியதே.

இயேசுவானவர் தேவனுடைய ரூபமாயிருந்து தேவனுக்கு ஒப்பாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை.

அவர் அடிமையின் ரூபத்தை எடுத்தார்.

வெறுமையாக்குவதே அதற்குமுந்தி நிறைவுள்ளதாயிருந்ததைக் குறிக்கும். இங்கே கிறிஸ்துவுக்கு இருந்த நிறைவு தேவ நிறைவாம். அது அவர் அடிமையின் ரூபம் எடுத்ததற்கு முந்தினது.

மூன்றாவது, அவர் மனித தன்மையுடையவராயிருந்ததுபோல தேவ தன்மையுடையவராயுமிருந்தார்.

அவர் தேவனுக்கு ஒத்த தன்மையாயிராமல் தேவனோடே ஒரே தன்மையுள்ளவராயிருந்தார்.



தேவனுடைய ரூபம் என்பது மனிதருடைய ரூபம் என்பதற்கு ஒப்புவமையாயிருக்கிறது. அது நிலையான தன்மையைக் காட்டுகிறது.

௩. அல்பா ஒமேகா, முந்தினவரும் பிந்தினவரும் என்று சொல்லப்படுகிறவர் தேவனாயிருக்கவேண்டும். (ஏசா. 41. 4; 44. 6; 48. 12.)

இயேசுகிறிஸ்துவானவர் அப்படியே அழைக்கப்பட்டிருக்கிறார். (வெளி. 1. 11; 22. 13.)

௪. ஏசாயா தன் தரிசனத்தில் யாருடைய மகிமையை கண்டானோ அவர் தேவனாயிருக்கவேண்டும். (ஏசா. 6. 1-3.) ஏசாயா கண்ட அந்த மகிமையையுடையவர் இயேசுகிறிஸ்து (யோவா. 12. 36-41.)

௫. வேதத்தில் தெளிவாகத் தேவன் என்று சொல்லப்பட்டவர் தேவனாயிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து அப்படியே சொல்லப்பட்டிருக்கிறார்.

தேவதன்மை ஒன்றே ஒன்று. மேலான தேவன் ஒருவரே.

சோசினியர் கீழ்த்தரமான தேவர்கள் உண்டு, அவர்களில் ஒருவர் இயேசுகிறிஸ்து என்கிறார்கள்.

அதற்கு அவர்கள் சொல்லும் நியாயம்.

தேவன் என்கிற வார்த்தை ஒரு தாட்டாந்தத்துக்கு எழுவாய்ப் பொருளாயிருந்தால் வேத சட்டத்தின்படி அதுகிறிஸ்துவைக் குறிக்கமாட்டாது.

தேவன் என்கிற வார்த்தை பயனிலையாகக் கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லப்படுகையில் அது சுட்டுச்சொல்லைத் தழுவாது நிற்கும்.

ஆகவே அது மேலான தெய்வத்தைக் குறியாது என்பார்கள்.

**உத்தரவு.**—தேவன் என்கிற வார்த்தை ஒரு தாட்டாந்தத்துக்கு எழுவாய்ப்பொருளாயிருக்கையிலும் அது கிறிஸ்துவைக் குறிக்கும். (1 தீமோ. 3. 16. அப். 20. 28.)

இரட்சணியம் பிதாவுக்கும் குமாரனுக்கும் உரியதென்று சொல்லியபோதும், சுய இரத்தத்தினாலே மீட்டுக்கொள்வது குமாரனையே குறிக்கும்.

கிறிஸ்து தேவன் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். (ரோ. 9. 5. 1 யோவா. 5. 20. யோவா. 20. 28.)

தேவன் என்கிற வார்த்தையோடே சுட்டுச்சொல் வாராதிருக்கில் அதோடே உரிச்சொல் சேர்ந்து வரும். திருஷ்டாந்தமாக, அவர் சர்வத்துக்கும் மேலான தேவன் என்றும், தோத்திரிக்கப்படத்தக்க தேவன் என்றும் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கையில்,

ஈ. இயேசுகிறிஸ்து தேவனாயிருக்கிறார் என்று அறியலாம். ஆரியுவின் கொள்கை இதால் நிராகரிக்கப்படுகிறது.

(8) அவர் தேவதன்மையைப் பிதாவிலிருந்து அடைந்திருக்கிறார்.

க. இப்படி அடைதலுக்கு ரூபகாரம்.

நியாயத்தின்படி பார்க்கில் மேலான ஒரே தெய்வீக தன்மை மாத்திரம் இருக்கக்கூடியது. பிதா [illegible]மாய்த் தேவனாய் இருக்கிறார். இயேசுகிறிஸ்து [illegible] என்று ரூபித்திருக்கிறோம். ஆனாலும் அவர் [illegible], ஆகவே அளிப்பினால் அவர் தேவனாயிருக்கிறார்.

வேதாகம சாட்சி. (யோவா. 5. 26; 18. 19.)

அதால் உண்டாகிய பயன்.

ஓர்வகையில் பிதா, குமாரனுக்குச் சமமானவர் வேறுவகையில் அவர் குமாரனுக்குப் பெரியவர். (யோவா. 14. 28; 7. 29.)

நீசேயின் பிரமாணத்தில் தெய்வத்தில் தெய்வமும், ஜோதியில் ஜோதியும் என்று சொல்லியிருக்கிறது.

உ. அடைந்த விதம்.

தேவ சுபாவம் முழுவதுமாய்க் குமாரனுக்கு அளிக்கப்பட்டது. ஆகையால் குமாரன் பிதாவுக்கு ஒத்ததன்மையாக அல்ல அவரோடே ஒரே தன்மையாக இருக்கிறார். (யோவா. 10. 30.)

(9) அவர் அப்படி தேவதன்மையை அடைந்ததே சரியான ஜெனிப்பிப்பு.

மகம்மது இதை மறுத்து, சங். 2. 7ஐ புரட்டி நீ என் தீர்க்கதரிசி, இன்று நான் உன்னைப் படிப்பித்தேன் என்று அர்த்தப்படுத்தினான். ஆனால் பூர்வீக யூதர்களும் நவீன யூதர்களும் அந்த வாக்கியத்தை நீர் என் குமாரன், இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேன் என்பதே சரியென ஒப்புக்கொண்டு, அது மேசியாவைக் குறிக்கும் என்று பூர்வீக யூதரும், தாவீதைக் குறிக்குமென்று நவீன யூதரும் அர்த்தப்படுத்துகிறார்கள்.

பிதாவானவர் தம்முடைய திவ்விய சுபாவத்தைக் குமாரனுக்கு அளித்ததே ஜெனிப்பித்தல்.

குமாரன் பிதாவின் தன்மையையும் சாயலையும் முற்றும் உடையவராயிருக்கிறார். பிதாவைப்போல குமாரனும் அனாதியாய் இருக்கிறபடியால், அவருடைய குமாரத்துவம் அனாதி ஜெனிப்பித்தல் என்னப்படுகிறது.



(10) இந்தத் தேவதன்மை கிறிஸ்துவுக்கு அளிக்கப்பட்டபடி மற்றொருவருக்கும் அளிக்கப்படாதபடியால் அவர் ஒருவரே பிதாவினுடைய ஒரேபேறான குமாரனாய் இருக்கிறார். இதைக் குறித்து பின்வருகிற பிரிவில் காட்டியிருக்கிறது:

ஈ. அவர் தேவனுடைய ஒரே குமாரன்.

115315

1. "ஒரே பேறான" என்பதற்கு அர்த்தம்.

(1) பிதாவானவரால் ஜெனிப்பிக்கப்பட்டதைமாத்திரம் குறியாது. அல்லது மிகவும் அன்பானவர் என்பதைமாத்திரம் குறியாது. இது சாத்தியத்தைச் சாதனத்துக்கு முந்தி வைப்பது.

(2) இன்னொருவரால் கூடாதவண்ணமாய் பிதாவானவர் ஜெனிப்பித்ததையும், குமாரன் ஜெனிப்பிக்கப்பட்டதையும், ஜெனிப்பிக்கப்பட்ட வகையையும் காட்டுகிறது.

2. அது இயேசுகிறிஸ்துவுக்கே செல்லத்தக்கது.

(1) இதைப்பற்றிச் சில ஆட்சேபனைகள் சொல்லப்படலாம்.

க. இயேசுகிறிஸ்துவையல்லாமல் தேவனுக்கு வேறே குமாரரும் உண்டே, ஆதலால் கிறிஸ்துவுக்குமாத்திரம் தேவசுபாவம் அளிக்கப்படவில்லை. அல்லது அப்படி அளிக்கப்படுதல் குமாரத்துவத்துக்குத் தீராத அவசியமில்லையென்பார்கள்.

உ. தேவதன்மை இன்னொருவகையாய் அளிக்கப்படுவதும் உண்டே. ஆதலால் பரிசுத்த ஆவியானவர் தேவகுமாரனாய் இருக்கவேண்டும். அல்லது அவ்வகையான அளிப்பு குமாரத்துவத்துக்கு அவசியமில்லையென்பார்கள்.

(2) இந்த ஆட்சேபனைக்கு உத்தரவு.

க. மற்றவர்கள் குமாரராயிருப்பது மறுபிறப்பினாலும், புத்திர சுவிகாரத்தினாலும், அதாவது தேவதன்மையல்ல, தேவகிருபை அவர்களுக்கு அளிக்கப்படுவதாலும் குமாரர் என்னப்படுகிறார்கள்.

ஆகவே பேலிக்ஸ், எலிபாந்துஸ் என்பவர்கள் கிறிஸ்து மனிதனாய்ச் சுவிகாரப் புத்திரனாகத் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டார் என்று போதித்த கொள்கை நிராகரிக்கப்படுகிறது.

உ. தேவசுபாவம் பரிசுத்த ஆவியானவருக்கு அளிக்கப்பட்டது.

ஆனால் அது அளிக்கப்பட்ட வகை வேறே. ஜெனிப்பிப்பினாலே அல்ல, புறப்படுதலினால் அளிக்கப்பட்டது.

ஆகவே பரிசுத்த ஆவியானவர் ஜெனிப்பிக்கப்பட்டார் என்று ஒருக்காலும் சொல்லப்படவில்லை.

ஏவாளும் சேத்தும் ஆதாமிலிருந்து உண்டானவர்கள். அவர்கள் உண்டானவகை வித்தியாசமானது.

**இந்த உபதேசத்தினால் நாம் கற்றுக்கொள்ளும் போதனை.**

கிறிஸ்துவானவர் தேவனுடைய குமாரனென்று நாம் விசுவாசிக்க வேண்டும்.

1. அவர் நம்முடைய மத்தியஸ்தரும் மீட்பருமாக நமக்கு உண்டுபண்ணியிருக்கிற உத்தரவாத புண்ணியபலத்தை உறுதியாய் நம்பவும், அவர் இரட்சிப்பை அங்கீகாரம் பண்ணவும்வேண்டும்.

2. அவருக்குரிய கனத்தையும் மகிமையையும் அவருக்குச் செலுத்தவேண்டும்.

3. தேவனுடைய உன்னத அன்பை உணர்ந்து நன்றியறிதலுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

---

## நம்முடைய நாதர்.

கிறிஸ்துவானவர் தேவகுமாரனாய் இருக்கிறபடியால் பாத்தியதையின்படி சகலத்துக்கும் சுதந்தரவாளியாக ஆதிக்கமுடையவராய் இருக்கிறார்.

I. நாதர் என்பதின் அர்த்தம். நாதர், கர்த்தர், நாயன், ஆண்டவர் எல்லாம் ஒரே அர்த்தத்தைக் கொடுக்கும்.

II. நாதர் என்பது கிறிஸ்துவுக்கு எவ்விதமாய் உரித்தானது.

III. அவர் யாருக்கு கர்த்தாவாயிருக்கிறார்.

**I. நாதர் என்பதின் அர்த்தம்.**

வேதாகமத்தை ஆராய்வதினால் அதை அறியலாம்.

1. அது உலக ஆதிக்கத்தைக் குறிக்கலாம். ஆனால் அந்த அர்த்தமாய் விசுவாசப்பிரமாணத்தில் வராது.

2. அந்த வார்த்தை எபிரெயுமூலத்தில் மேலான கடவுளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

திரியேகனைக் * குறிக்கும். ஏலோகிம், ஆதிகாரணனைக் குறிக்கும்.

சத்தாய், தற்பரனைக் குறிக்கும்.

யேகோவா (ஆண்டவர் என்று அர்த்தம் கொள்ளும்.) அடோனாய் என்ற எபிரெயு பதங்கள், கர்த்தா என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.



கர்த்தா என்பது, கிரேக்கில் கூரியாஸ் என வழங்குகிறது.

3. எபிரெயு வார்த்தையானது மேசியாவைக் குறிக்கும் என்று பூர்வ ரபிமார் ஒப்புக்கொண்டார்கள்.

புதிய ஏற்பாட்டினால் அது துலங்குகிறது. (ஏசா. 8. 13, 14ஐ ரோ. 9. 33க்கும் ஓசி. 1. 7ஐ அப். 4. 12க்கும் ஒத்துப்பார்க்க.)

**II. நாதர் என்கிற பேர் கிறிஸ்துவுக்கு எவ்விதமாய் உரியது.**

1. இயல்பாய் அவர் தேவன். ஆனதால் திவ்விய தன்மையின்படி அந்தப்பேர் அவருக்கு உண்டு.

2. அருளப்பட்டதில். மனித தன்மையில் அது அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (அப். 2. 36. எபி. 2. 7, 8.)

(1) அருளப்பட்ட ஆதிக்கத்துக்குரிய தொழில்.

க. நியாயத்தீர்ப்பின் அதிகாரம். (யோவா. 5. 27.)

உ. பாவமன்னிப்பின் அதிகாரம். (மத். 9. 2, 6.)

ங. பழைய பிரமாணங்களை மாற்றி, புதிய பிரமாணத்தை உண்டுபண்ணும் அதிகாரம் அவருக்கு அருளப்பட்டது. (மத். 12. 6, 8.)

(2) அருளப்பட்ட இந்த ஆதிக்கத்தின் காலம்.

க. ஒருவாறு அவர் உலகத்திலிருந்தபோது. (யோவா. 13. 3.)

உ. அவர் மரணத்தினிமித்தமாக பின்பு பூரணமாய் அருளப்பட்டது. (மத். 28. 18. பிலி. 2. 8–11. எபே. 1. 20–22.)

ங. அது நிலை நிற்கும் காலம்.

ஒருபாகம் நின்றுபோம். (சங். 110. 1. 1 கொரி. 15. 25–28.)

அது கிறிஸ்துவின் மத்தியஸ்தத் தொழிலுக்கு உரியது.

ஒருபாகம் நித்தியமாய் நிலைத்திருக்கும்.

அவர் தேவதன்மையோடே ஐக்கியமாயிருப்பதாலும் அவர் பாடுகளுக்குப் பயனாகவும் அப்படி நிலைத்திருக்கும். (எசே. 34. 23, 24. 2 சாமு. 7. 16.)

**III. அவர் யாருக்கு நாதராயிருக்கிறார்.**

1. பொதுவாக.

இயல்பான சுதந்தர பாத்தியதையினாலும், அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தினாலும் சகலருக்கும் சகல காரியங்களுக்கும் நாதராய் இருக்கிறார். (1 கொரி. 15. 27. எபி. 1. 6. சங். 2. 8.)

2. விசேஷமாக எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும்.

(1) ஜெயத்தினாலும், கிரயத்தினாலும், மீட்டுக்கொண்டதினாலும்.

(2) நாம் பெற்றிருக்கிற ஆசீர்வாதங்களையும், நாம் மோட்சத்தில் அடையப்போகிற பரம பாக்கியங்களையும் தருவதினாலும்.

(3) நாம் ஞானஸ்நானத்தில் நம்மை முற்றும் அவருக்குக் கையளித்ததினால் நாம் அவருக்கு அடியாரும் அவர் நமக்குக் கர்த்தாவுமாயிருக்கிறதினாலுமே.

**இந்த உபதேசத்தினால் நாம் கற்றுக்கொள்ளும் போதனை.**

1. நம்முடைய சொந்த நிலைமையை அறிந்து, நாம் நம்முடையவர்கள் அல்ல என்று உணர்ந்து, நாம் பிழைத்தாலும் மரித்தாலும் கர்த்தருடையவர்களாயிருக்கவேண்டும்.

2. தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் அவர் நித்தியஜீவனை அளிக்கிறபடியால், அவருடைய சித்தத்துக்குக் கீழ் அமைந்து நடக்கவேண்டும்.

3. நமக்குரிய அதிகாரத்தை நேராய்க் கைக்கொண்டு அதைச் சீராய் நடப்பிக்கவேண்டும்.

4. எல்லாத் துன்பங்களிலும் அவருடைய ஆதரவையும் ஆறுதலையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

## இயேசுகிறிஸ்து.

இயேசு, கிறிஸ்து என்ற இரண்டு பெயர்களும், மத்தியஸ்தராக மனுடவதாரம் செய்த நம்முடைய ஆண்டவருக்குரியவைகள். இயேசு என்பது அவருடைய சிறப்புப் பெயர். இந்தப் பெயர் அவர் பூலோகத்திலிருந்தபோது அவருக்கு வழங்கினது, கிறிஸ்து என்பது அவருடைய பட்டப்பெயர். அவர் பரமேறினபின்பு இரண்டு பெயர்களும் அவருடைய குருத்துவத்தொழிலை விளக்கும் காரணப்பெயர்களாய் வழங்கப்பட்டன.

I. மனிதனாகிய இயேசுவின் பெயரைப்பற்றியும்.

II. மனிதனாகிய இயேசுவுக்கு மத்தியஸ்தராக அவருக்கு இருந்த உத்தியோகத்தையும் கனத்தையும்பற்றியும் பார்ப்போம்.

### I. மனிதனாகிய இயேசுவின் பெயர்.

விருத்தசேதனம் செய்யும்போது பெயரிடுவது யூதருடைய வழக்கமாயிருந்தது.



1. பெயரைப்பற்றிப் பார்ப்போம்.

(1) அது வேதத்தில் பார்க்கிறபடி சாதாரணப் பெயராயிருந்தது. (கொலோ. 4. 11. அப். 13. 6.)

(2) இயேசு என்பது யோசுவா என்ற பெயருக்குச் சரி. (அப். 7. 45. எபி. 4. 8.)

ஓசியா என்ற பேர் யோசுவா என்று மாற்றப்பட்டது. முந்தினதற்கு இரட்சகன் என்றும், பிந்தினதற்கு தேவ இரட்சகன் என்றும் அர்த்தம்.

(3) இயேசு என்பதற்கு இரட்சகர் என்றர்த்தம். (லூக். 1. 21.)

௧. காபிரியேலின் வார்த்தைகள், (மத். 1. 21.) அவர் இரட்சகர் என்றும், இரட்சணியத்தை உண்டுபண்ணுவார் என்றும் காட்டுகிறது.

௨. அவர் திவ்விய இரட்சகர். அதால் அவருக்கு இம்மானுவேல் என்ற பேர் தரிக்கப்பட்டது. அதின் அர்த்தம் தேவன் நம்மோடிருக்கிறார். மேலும் பாவங்களை நீக்கி இரட்சிப்பது தேவனுக்குரியது.

2. அந்தப் பெயர், இரட்சகர் என்றர்த்தமாய்;

(1) பொதுவாக.

௧. அஞ்ஞான தேவர்களையும்,

௨. அதிகாரிகளையும், ஆபத்துகளினின்று விலக்கி இரட்சிப்பவர்களையும்,

௩. வேதத்தில் நியாயாதிபதிகளையும் குறிக்கும்.

(2) விசேஷித்தவகையாக அது இயேசுவுக்கே உரியது. ஏனெனில்,

௧. அவர் இரட்சணிய வழிவகையைத் தெளிவாய் அறிவித்திருக்கிறார்.

௨. தமது புண்ணியத்தினாலே,

1. பாவத்துக்கு வரவேண்டிய தண்டனையினின்று பாவிகளை விடுவித்தும்.
2. சத்துருக்களைத் தேவனோடே ஒப்புரவாக்கியும்.
3. அடிமைகளாய் இருந்தவர்களைச் சிறையிலிருந்து மீட்டும் இரட்சணியத்தைச் சம்பாதித்துமிருக்கிறார்.

௩. அந்த இரட்சணியத்தை நமக்குப் பலிக்கச் செய்திருக்

(3) பழைய ஏற்பாட்டில் இரட்சகராக எண்ணப்பட்டவர்கள் அவருக்கு முன்னடையாளங்களாயிருந்தார்கள்.

க. அவர்கள் இஸ்ரவேலரைக் கானானுக்கு நடத்தினார்கள்.

உ. மோசே அதைச் செய்யக்கூடாதிருந்தது. இங்கே மோசே என்பது மோசேயினால் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் குறிக்கும்.

"நியாயப்பிரமாணம் மோசேயினால் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின."

ங. மோசேயல்ல, யோசுவாவே மெய்யான விருத்தசேதனமுள்ளவனாயிருந்தான்.

ச. யோசுவா, மோசேயின் ஊழியக்காரனாகவும், அவனுக்குப் பின்வந்த அதிகாரியாகவும், இஸ்ரவேலருக்கு நியாயாதிபதியாயும் அதிபதியாயுமிருந்து கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருந்தான். அவன்,

1. யோர்தான் நதிக்கரையில் தன் உத்தியோகத்தைத் துவக்கினான்.
2. பன்னிரண்டு கற்களை எடுக்கும்படி பன்னிரண்டு மனிதரைத் தெரிந்துகொண்டான்.
3. அவன் ராகாப்பு என்ற வேசியை இரட்சித்தான்.
4. சூரியனுடைய ஓட்டத்தைத் தாமதிக்கும்படி நிறுத்தினான்.
5. அமலேக்கியரை முறியடித்துக் கானானியரை ஜெயித்தான்.

## இந்த உபதேசத்தினால் நாம் கற்றுக்கொள்ளும் போதனை.

1. இயேசுவாலே உண்டுபண்ணப்பட்ட இரட்சிப்பையல்லாமல் வேறே இரட்சிப்பில்லை.

2. அவர் நமக்கு இரட்சகராய் இருக்கிறார் என்ற ஆனந்தக் களிப்புண்டாகிறது.

3. அவரை இரட்சகர் என்று அங்கீகரிக்கிறவர்கள் அவரில் உன்னத அன்பு வைக்கவேண்டும்.

4. நம்மை முற்றிலும் அவருக்கே கையளித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.



## II. மனிதனாகிய கிறிஸ்துவுக்கு மத்தியஸ்தராக இருந்த உத்தியோகத்தையும் கனத்தையும் பற்றிப் பார்ப்போம்.

இதில்,

1. கிறிஸ்து என்பதற்கு அர்த்தம்.
2. யூதர்கள் மேசியா வருவார் என்று எதிர்நோக்கி இருந்த முகாந்தரங்கள்.
3. யூதருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா வந்தாயிற்று.
4. நம்முடைய இயேசுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா.
5. இயேசு மேசியாவாயிருக்கும்படி எவ்விதமாய், என்னத்தினாலே அபிஷேகம் பண்ணப்பட்டார் என்ற காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

1. கிறிஸ்து என்பதற்கு அர்த்தம்.

(1) கிறிஸ்து என்பது கிரேக்க வார்த்தை. மேசியா என்பது எபிரெய வார்த்தை. இந்த இரண்டுக்கும் அபிஷேகிக்கப்பட்டவர் என்றர்த்தம். (யோவா 4. 25; 9. 42.)

க. கிரந்த கிரேக்குப் பாஷையில் அந்த வார்த்தை அபிஷேகம் என்பதைக் குறிக்கும்.

உ. கிரேக்குப் பழைய ஏற்பாட்டில் பொதுப்பட அந்த வார்த்தை அபிஷேகிக்கப்பட்ட ஆளைக் குறிக்கும்.

(2) அபிஷேகித்தலின் நோக்கம்.

க. நியாயப்பிரமாணத்தின் காலத்தில் அபிஷேகத்தினால் பண்டங்களும் வஸ்துக்களும் மனிதரும் தேவகாரியத்துக்கென்றும் தேவஊழியத்துக்கென்றும் பிரித்துவைக்கப்பட்டதுண்டு.

உ. இயேசுவைப்பற்றிய விஷயத்தில் நியாயப்பிரமாணத்தின் காலத்தில் அபிஷேகிக்கப்பட்டு முன்னடையாளங்களாக இருந்தவைகள், பொருளாக இருந்த கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிறவைகளாயிருந்தன.

2. யூதர்கள் மேசியா வருவாரென்று எதிர்நோக்கியிருந்த முகாந்தரங்கள்.

(1) அவர்கள் எதிர்நோக்கின சங்கதி.

க. சுவிசேஷங்களைப் பார்க்கையில் மேசியா அந்தக் காலத்தில் வருவார் என்ற எண்ணம் யூதர்களுக்குள்ளிருந்தது. (லூக். 3. 15. யோவா 7. 27, 31, 40, 41.)

உ. தற்காலம் யூதருக்குள் மேசியா வருவார் என்பது அவர்கள் எதிர்நோக்கிய விசுவாச சங்கதியாயிருக்கிறது.

(2) யூதர்கள் எதிர்நோக்கிக்கொண்டிருந்ததற்கு ஆதாரம்.

க. மேசியா வருவார் என்பது வேதவாக்கியங்களில் ரூபிக்கப்பட்டிருக்கிறது. (ஆதி. 21. 12. உபா. 18. 18, அப். 3. 22; 7. 37. கலா. 3. 16.)

உ. மேசியா என்ற பதத்துக்கு ஆதாரம்.

1. வேதத்தில் ஒரு இடத்தில் தவிர (தானி. 9. 26.), மற்ற இடங்களில் வேறே ஆளையும் குறிக்கலாம். கிரேக்கைத் திருப்புதலில் அது கிறிஸ்மா என்று திருப்பியிருக்கிறது.
2. ஆனால் அந்த வார்த்தை கல்தேய திருப்புதலிலும் வியாக்கியானத்திலும் 70 தரங்களுக்குமேல் வருகிறது. அவைகள் ஓய்வுநாள் தோறும் ஜெப ஆலயங்களில் வாசிக்கப்பட்டுவந்தன. ஆகவே மேசியா வருவார் என்ற எண்ணம் பொதுப்பட யூதர்களுக்குள் இருந்தது.
3. யூதர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா வந்தாயிற்று.

(1) ஆதி. 49. 10-ஐப் பார்க்கையில் செங்கோல் யூதாவை விட்டு அப்புறப்பட்டுப் போயிற்று. ஆகவே ஷீலோ வந்தாயிற்று என்று அறியலாம். ஷீலோ என்பது மேசியாவைக் குறிக்கும்.

க. பூர்வீக யூதர் அப்படியே அர்த்தப்படுத்தினார்கள்.

உ. அப்படியே வேதாகமத்தில் விஸ்தரிக்கப்பட்டும் உறுதிபடுத்தப்பட்டும் இருக்கிறது. (ஏசா. 11. 10. மீகா. 4. 1.)

(2) மல். 3. 1. ஆகா. 2. 6. 9-ல் இரண்டாம் தேவாலயம் நிலைநிற்கையில் மேசியா வரவேண்டியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஆலயம் இப்போது இல்லை. அழிக்கப்பட்டுப் போயிற்று. ஆகவே மேசியா வந்தாயிற்று. இந்தத் தீர்க்கதரிசனங்கள் மேசியாவைக் குறிக்கும்.



க. பூர்வ யூதர்கள் அப்படியே ஒப்புக்கொண்டார்கள்.

உ. இந்த வாக்கியங்களுக்கு வேறே அர்த்தம் சொல்ல ஏதுவில்லை.

1. உடன்படிக்கையின் தூதனானவர் சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் என்ற இலட்சணம் மேசியாவுக்கே உரியதாயிருக்கின்றது.
2. மற்றப்படி இரண்டாம் தேவாலயம் முந்தினதைவிட மேன்மையுள்ளதாய் இருக்கமாட்டாது. ஏனென்றால் இரண்டாம் ஆலயத்திலே ஊரீம் தும்மீம், கிருபாசனப்பெட்டி, பரம அக்கினி, செக்கினா, தீர்க்கதரிசன ஆவி ஆகிய இவைகள் இல்லை.

ங. ஆனால் மேசியா அந்த ஆலயத்துக்கு வந்திருந்தால் அது முந்தினதைவிட மிகவும் மாட்சிமை பொருந்தினதாய் இருந்தது. அவரே நிழலாட்டங்களா யிருந்தவைகளுக்குப் பொருளானவர்.

1. அவர் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தின ஊரீம், தும்மீமாயிருக்கிறார்.
2. அவர் மெய்யான கிருபாசனமாயிருக்கிறார். (ரோ. 3. 25.)
3. அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பதில், வானத்திலிருந்துவந்த மெய்யான அக்கினியாயிருக்கிறார்.
4. அவர் நம்மிடத்தில் கூடாரம் போட்டபடியால் மெய்யான செக்கினாவாயிருக்கிறார். (யோவா. 1. 14.)

5. அவர் பரிசுத்த ஆவியை அளவில்லாமல் பெற்றுக்கொண்டார்.

4. நம்முடைய இயேசுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா.

(1) மேசியா வருவாரென்று முன்னுரைக்கப்பட்ட காலத்தில் இயேசுவானவர் பிறந்தார்.

(2) மேசியாவைப்பற்றிய எல்லாத் தீர்க்கதரிசனங்களும் இயேசுவானவரில் நிறைவேறின.

க. அவர் குடும்பம், கோத்திரம், தாவீதின் குமாரன் என்பது.

1. முன்னுரைக்கப்பட்டது. (ஏசா. 11. 1, 2, 10.) அப்படி யூதரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. (மாற். 12. 35, மத். 22. 42.)

2. நிறைவேறினது. (மத். 12. 23. லூக். 18. 38. வெளி. 5. 5; 22. 16.)

உ. மேசியாவின் பிறப்பிடம்.

1. தீர்க்கதரிசனம். (மீகா. 5. 2. மத். 2. 5, 6.)

2. நிறைவேறுதல். (லூக். 2. 5.)

ங. பிறப்பின் வகை.

1. தீர்க்கதரிசனம். (ஏசா. 7. 14.)

2. நிறைவேறுதல். (மத். 1. 22.)

(3) மேசியா போதிப்பதும், செய்வதும், பாடுகளை அனுபவிப்பதும், அப்படிப் பாடுகளை அனுபவிப்பதில் அவருக்குக் கிடைக்கும் பலன் இன்னவையென்று முன்னுரைக்கப்பட்டபடியே இயேசுவானவரும் போதித்தார், செய்தார், பாடுகளை அனுபவித்தார், பலனையும் பெற்றுக்கொண்டார்.

க. போதிப்பு.

1. மேசியா போதிப்பாரென்று முன்னுரைக்கப்பட்டது. (உபா. 18. 18. ஏசா. 42. 1, 4.)

2. இயேசு போதித்தார்.

a. அவர் தேவனுடைய பூரணசித்தத்தை வெளிப்படுத்தினார்.



b. மோசே, தீர்க்கதரிசிகள், வேதபாரகரைப் போலல்ல மிகுந்த அதிகாரத்தோடு பூரணவகையாய் வெளிப்படுத்தினார்.

c. அடையாளங்கள், நிழலாட்டங்களைக் கொண்டல்ல, வெகு தெளிவாய் வெளிப்படுத்தினார்.

d. யூதருக்குமாத்திரமல்ல சகலருக்கும் பொதுவாக வெளிப்படுத்தினார்.

உ. செய்கை.

1. மேசியா அற்புதங்களைச் செய்வார் என்று முன்னுரைக்கப்பட்டது. (முக். 11. 4 5.)

2. இயேசுவானவரும் அற்புதங்களைச் செய்தார். (யோவா. 7. 31; 3. 2.)

a. தமக்கு முந்திவந்தவர்கள் எல்லாரையும்விட அதிகமான அற்புதங்களைச் செய்தார்.

b. அருளப்பட்ட வல்லமையினால் அல்ல, சுயவல்லமையினால் அப்படிச் செய்தார்.

c. அற்புதங்களைச் செய்ய மற்றவர்களுக்கு வல்லமைகளைக் கொடுத்தார். (லூக். 10. 19. மத். 10. 8.)

ங. பாடுகள்.

1. மேசியா பாடுகளை அனுபவிப்பார் என்று முன்னுரைக்கப்பட்டது.

a. நிந்தைகள். (ஏசா. 53. 2, 3.)

b. மரணம். (ஏசா. 53. 12.)

2. இயேசுவானவரும் பாடுகளை அனுபவித்தார்.

a. நிந்தைகள். (பிலி. 2. 7. மத். 8. 20. மாற். 6. 3.)

b. மரணம்.

அது பொதுப்பட்ட கொரேமும் ஈங்கிலையுமான மரணம்.

குறிப்பாக.

முப்பது வெள்ளிக்காசுக்காக காட்டிக் கொடுக்கப்படுவார். (சகரி. 11. 12.)

நிறைவேறுதல். (மத். 26. 15.)

குத்தப்படுவார். (ஏசா. 53. 5. சகரி. 12. 10. சங். 22. 16.)

நிறைவேறுதல். (யோவா. 20. 25.)

பரியாசம் பண்ணப்படுவார். (சங். 22. 7.)

நிறைவேறுதல். (மத். 27. 39, 43.)

தேவனால் கைவிடப்படுவார். (சங். 22. 1.)

நிறைவேறுதல். (மத். 27. 46.)

அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவார். (ஏசா. 53. 12.)

நிறைவேறுதல். ([illegible])

தாகத்துக்குக் காடியைக் கொடுப்பார்கள். (சங். 69. 21.)

நிறைவேறுதல். (யோவா. 19. 28; மத். 27. 34.)

உடையின்பேரில் சீட்டுப்போடுவார்கள். (சங். 22. 18.)

நிறைவேறுதல். (யோவா. 19. 23, 24.)

வாதிக்கப்படுவார். (ஏசா. 53. 7, 8.)

நிறைவேறுதல். (லூக். 24. 46.)

ச. அவர் பாடுகளை அநுபவித்ததில் அவருக்குக் கிடைத்த பலன்.

1. மேசியா மரித்து அடக்கம்பண்ணப்பட்டு (ஏசா. 53. 9.), மறுபடியும் உயிரோடு எழும்பி (ஓசி. 6. 2; 11. 1.) பரலோகத்துக்கு எழுந்தருளுவார் என்று முன்னுரைக்கப்பட்டது.

2. இயேசுவானவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு (மாற். 15. 43.) மறுபடியும் உயிரோடு எழுந்து பரலோகத்துக்கு எழுந்தருளினார். (அப். 2. 36.). இது எல்லாச் சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

(4) மேசியாவுக்குச் சகலரும் கீழ்ப்படியவேண்டும் என்று முன்னுரைக்கப்பட்டது. இயேசுவானவரைப்பற்றி எங்கும் பிரசங்கிக்கப்பட்டு யாவரும் அவரை அங்கீகரித்திருக்கிறார்கள். அவர் தேவனாக இராவிடில் அப்படி நடப்பது கூடாதகாரியம். ஆகவே இயேசு மேசியாவாயிருக்கிறார்.



க. மேசியாவுக்கு யாவரும் கீழ்ப்படியவேண்டுமென்று முன்னுரைக்கப்பட்டது. (சங். 2. 8; 72. 11. ஏசா. 2. 2; 11. 10. மல். 1. 11.)

உ. இயேசுவைப்பற்றிய உபதேசம் எங்கும் பிரசங்கிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

1. யூதர்களால்; எபிரெயர், எலினிஸ்தர்.
2. புறசாதியாரால்; புரோசலேத்துகள், அஞ்ஞானிகள்.
3. அதினால் உண்டான பயன்.
   a. யூதருடைய சன்மார்க்கப் பிரமாணம் யாவராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.
   b. அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள், சன்னதங்கள் எங்கும் தள்ளப்பட்டன.

ஈ. இயேசுவானவர் கிறிஸ்துவாயிராவிட்டால் இதெல்லாம் நடக்கக்கூடியதல்ல. நடந்திருக்கிற காரியத்தின் மேன்மையைப் பார்க்கில், அது தெய்வீக காரணத்தால் உண்டானதாயிருக்கிறது மனுஷீககாரணம் அதற்குப் போதாது.

1. போதிக்கப்பட்ட உபதேசத்தின் தன்மை.
   a. அந்த உபதேசம் மற்றெல்லா மதங்களின் உபதேசங்களும் பொய்யென்றும், தானே சத்தியமுள்ளதென்றும் சாதித்தது.
   b. அதின் கட்டளைகள் மனித சுபாவத்துக்கு இன்பமானவைகள் அல்ல.
   c. அது இம்மைக்குரிய பிரயோசனங்களைக் கொடாமல் மறுமைக்குரிய பலன்களை நாடும்படி போதித்தது.
   d. தேவபக்தியாய் ஜீவனம்பண்ண விரும்புகிறவர்கள், துன்பப்பட்டு, பகைக்கப்பட்டு, ஆஸ்திகளை இழந்து வேதனைக்குள்ளாவார்களென்று போதித்தது.
2. போதித்தவர்களுடைய நிலைமை.
   a. இயேசு நாசரேத்தூரில் உள்ளவர், கலிலேயாவிலுள்ள ஒரு தச்சன்.
   b. அப்போஸ்தலர் கல்வியில்லாத செம்படவர்.

3. அவர்கள் போதித்த வகை.

a. இலக்கண விதிகளோடும் இலக்கிய நடையோடும் இனிதான பாட்டுமுறைமையாயும் போதிக்கவில்லை,

b. அவர்கள் கண்டதையும் கேட்டதையும் யாவரும் அறிந்து உணர, உள்ள சத்தியத்தை விளம்பினார்கள். (1 கொரி. 2. 4.)

5. இயேசுவானவர் மேசியாவாயிருக்கும்படி எவ்விதமாய் என்னத்தினாலே அபிஷேகம் பண்ணப்பட்டார்.

(1) என்னத்திற்காக அபிஷேகம் பண்ணப்பட்டார்.

க. மேசியா அபிஷேகம் பண்ணப்பட்ட நோக்கத்தை.

யூத ஜனங்களும் அவர்கள் இராச்சியபாரமும் முன்னடையாளமாயிருந்ததைக்கொண்டு ரூபிக்கலாம்.

யூதர் தேவனுடைய ஜனங்களுக்கும், அவர்கள் இராச்சியபாரம் மேசியாவின் ஆளுகைக்கும் நிழலாட்டமாய் இருந்தது. இந்த இராச்சியபாரம் மூன்று வெவ்வேறான தொழிலை உடையதாய் இருந்தது. அதாவது இராச உத்தியோகம், ஆசாரிய உத்தியோகம், தீர்க்கதரிசி உத்தியோகம். ஒவ்வொரு உத்தியோகத்துக்கும் பிரத்தியேகமானபேர் அபிஷேகிக்கப்பட்டார்கள்.

இராசாக்கள். (1 சாமு. 15. 1; 16. 27.)

ஆசாரியர். (லேவி. 4. 3. யாத். 40. 15.)

தீர்க்கதரிசிகள். (1 இரா. 19. 16.)

இந்த மூவகை உத்தியோகங்களும் மேசியாவில் அமைந்திருக்கவேண்டியது.

2. மேசியாவினால் உண்டுபண்ணப்பட்ட இரட்சணிய தன்மையைப்பார்க்கில்.

a. ஆசாரியராக பாவ நிலைமையிலிருந்து மீட்டு இரட்சிக்கவும்.

b. தீர்க்கதரிசியாக தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தவும்.

c. ராஜாவாக நித்திய ஜீவனைக்கொடுக்கவும் அவசியமாயிருந்தது.



உ. இயேசுவும் மேசியாவாக அபிஷேகம் பண்ணப்பட்

1. தீர்க்கதரிசியாக.

a. அந்த உத்தியோகத்துக்கு ஆயத்தம். பிறப்பில் (லூக். 1. 35.). ஞானஸ்நானத்தில். (லூக். 3. 22.)

b. அந்த உத்தியோகத்துக்குரிய அதிகாரம். யோவான்ஸ்நானன் சாட்சி (யோவா. 1. 34; 3. 26; 5. 33; 10. 41.) அவர் செய்த அற்புதங்களினால் விளங்கிய சாட்சி. (யோவா. 10. 37, 38; 5. 36.)

c. அந்த உத்தியோகத்தை நடப்பித்தல், இதில் தம்முடைய உபதேசத்தை பிரபலப்படுத்தல். (யோவா. 1. 18.)

அந்த உபதேசத்தை உறுதிப்படுத்தல். தமது ஜீவியத்தினாலும் (1 பேது. 2. 22.), கிரியையினாலும் (யோவா. 3. 2.), மரணத்தினாலும் (1 தீமோ. 6. 13.), உயிர்த்தெழுதலினாலும் உறுதிப்படுத்தினார்.

d. அந்த உபதேசம் நிலைபெற்றிருக்கும்படி ஸ்தாபித்தல் அடங்கியிருக்கிறது. இதற்கென்று அவர் வெளியரங்க சபையை ஏற்படுத்தி, பற்பல ஊழியக்காரரை நியமித்திருக்கிறார். (எபே. 4. 8; 11. 12.)

2. ஆசாரியராக.

அவருக்கு முன்னடையாளமாயிருந்த ஆரோனுடைய வரிசையின்படி ஆசாரியராயிராமல், தேவனுடைய முதற்பேறான குமாரனாயிருக்கிறபடியால், இயல்பாய்ச் சுதந்தரமுறைமையான பாத்தியதைப்படி மெல்கிசேதேக்கின் வண்ணமான ஆசாரியராயிருக்கிறார்.

ஆசாரியராக அவருடைய தொழில்.

a. பூமியில் பலிசெலுத்துதல். (எபி. 8. 3; 10. 5.)

b. மகா பரிசுத்த ஸ்தலமாகிய பரலோகத்தில் வேண்டிக்கொள்ளுதல். (எபி. 7. 25.)

c. ஆசீர்வதித்தல். (ஆதி. 14. 19, 20.)

3. இராசாவாக.

a. அதின் உண்மை.

(க) இயேசு இராசாவாயிருக்கிறார் என்பதை காபிரியேல் என்னும் தேவதூதன் அறிவித்தான். (ஏசா. 9. 7. லூக். 1. 32, 33.)

(உ) இயேசுவானவரே அப்படி ஒப்புக்கொண்டார். (மத். 21. 4, 5. யோவா. 18. 37.)

(ங) அவர் பரலோகத்துக்கு ஏறிச்சென்று, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தபோது பட்டஞ்சூட்டப்பட்டார். (எபே. 1. 21, 22.)

b. இராசாவாக அவர் நடப்பிக்கும் தொழில்.

(க) தமது சொந்த ஜனங்களை ஆளுகிறார். அவர்களுக்குப் பிரமாணத்தைக்கொடுத்து, அதைக் கைக்கொள்ள கிருபை யளிக்கிறார். எல்லாச் சத்துருக்களின் கைக்கும் அவர்களைக் காத்து ஆதரிக்கிறார். மறுமையில் தமது ராஜரீக தயாளத்தின்படியே அவர்களுக்குப் பலன் அளிப்பார்.

(உ) சத்துருக்களை அழித்தல்.

யூதர், ரோமர் முதலானவர்கள், பாவம், சாத்தான், மரணம்.

(2) அவர் எவ்விதமாய், எதினாலே அபிஷேகம் பண்ணப்பட்டார்.

க. திவ்விய பரிமளதைலம் பண்ணப்படுகிற விதத்தை யூதர்கள் மறந்துபோனதால், அந்த எண்ணெயால், அபிஷேகம்பண்ணப்படுவது நின்றுபோயிற்று. ஆகையால் இயேசுவானவர் மேசியாவின் பணிவிடைகளை நிறைவேற்ற எவ்விதமாய் அபிஷேகம்பண்ணப்பட்டார் என்று விசாரிக்கவேண்டியது.

1. அபிஷேகதைலம், அது ஆனந்ததைலம். (சங். 45. 7.) அது தேவனுடைய பரிசுத்தஆவியைக்குறிக்கும். (அப். 10. 37.)

2. இயேசு எப்போது அபிஷேகம் பண்ணப்பட்டார்.

a. அவர் மனுஷவதாரத்தில். (லூக். 1. 35.)

b. அவர் ஞானஸ்நானம் பெற்றபோது. (மத். 3. 16.)

c. இயேசுவானவர் இரண்டுதரம் அபிஷேகம்பண்ணப்பட்டார்.



தாவீது ராஜன் பெத்லகேமிலும் எபிரோனிலும் அபிஷேகம் பெற்றதில் அவருக்கு முன்னடையாளமாயிருந்தான்.

d. முன்னடையாளங்களின் கருத்தும் நோக்கமும் இயேசு பரிசுத்தஆவியானவரால் அபிஷேகம் பெற்றபோது பூரணமாய் நிறைவேறினது.

3. அபிஷேகத்தைப்பற்றிச் சில காரியங்களைப் பார்ப்போம்.

a. ஒலிவ எண்ணெயானது மிகவும் சாரமுள்ளது. அதால் தேவனும் மனிதரும் கனப்படுத்தப்படுகிறார்கள். கிறிஸ்துவாலும் தேவனுக்கு மகிமையும் மனிதருக்கு மேன்மையு முண்டாயிற்று.

b. அது சுத்தமுள்ளதும் சுத்திகரிக்கிறதுமாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் பரிசுத்தர், அவர் மனிதரைச் சுத்திகரிக்கிறவருமாயிருக்கிறார். (எபி. 7. 26; 10. 11, 14.)

c. அந்தத் தைலம் கந்தவர்க்கங்களால் கலந்து இருந்தது. கிறிஸ்துவானவரும் அப்படியே விளங்கிறார். (யோவா. 1. 14, 16; எபே. 5. 2.)

d. அந்தத் தைலம் சிரசில் ஊற்றப்பட்டது. கிறிஸ்துவும் அப்படியே சிரசாயிருக்கிறார். (கொலோ. 1. 18; 2. 10.)

e. ராஜாக்களும் ஆசாரியர்களும் அதால் அபிஷேகம் பெற்றார்கள். கிறிஸ்துவானவரும் அபிஷேகிக்கப்பட்டார். (லூக். 1. 35. மத். 3. 16.)

இந்த உபதேசத்தை நாம் விசுவாசிக்கவேண்டிய தேதேனில்,

1. இயேசுவானவர் மேசியாவாக இராமற்போனால் அவர் நம்முடைய இரட்சகராக இருக்கக்கூடாது.

2. நம்முடைய குணம் நடக்கை சீர்பட இயேசுவே மேசியாவென்று விசுவாசிக்கவேண்டியது.

3. அவருடைய உத்தியோகங்கள் நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கு அவசியமாயிருப்பதால் விசுவாசிக்கவேண்டியது.

4. இந்தச் சத்தியத்தை விசுவாசிப்பதினால் இயேசுவின் நன்மாதிரியைப் பின்பற்றி நல்வழியில் நடக்க ஏதுவுண்டு.

# 3. உபதேசம்.

## அவர் பரிசுத்தஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்.

இந்த உபதேசத்தில் அவருடைய உற்பவிப்பும், பிறப்பும் சொல்லப்பட்டிருக்கிறது.

I. உற்பவித்துப் பிறந்தது யார்.

II. அவர் யாருடைய வல்லமை, அல்லது செயலால் உற்பவித்துப் பிறந்தார்.

III. அவர் யாரிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்.

**I. உற்பவித்துப் பிறந்தது யார்?**

1. அவர் என்பது முந்தின பிரமாணத்தில் சொல்லப்பட்ட தேவனுடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே.

(1) தேவதன்மையுடைய வார்த்தையானவர். தெய்வீகத்தோடே மனுஷீகத்தைச் சேர்த்துக்கொண்டார்.

தேவ சுபாவம் மனித சுபாவமாய் விகாரப்படக் கூடாது.

(2) மனுஷீகம் பிதாவோடும் குமாரனோடுமல்ல, குமாரனோடுமாத்திரம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஆகவே பெற்றிரிபாசியர், பிதாவானவர் மனுடாவதாரம்செய்து சிலுவையில் அறையப்பட்டார் என்ற கொள்கை நிராகரிக்கப்படுகிறது.

2. வார்த்தையானவர் மெய்யான மனிதனாகப் பிறந்தார்.

(1) அப்படிப் பிறப்பார் என்று ஏவாளுக்கும் (ஆதி. 3. 15.), ஆபிரகாமுக்கும் (ஆதி. 22. 18. கலா. 3. 16.), தாவீதுக்கும் (2 சாமு. 7. 12, 16. ரோம. 10. 1, 3.) வாக்களிக்கப்பட்டது.

(2) அவர் புசித்துப் பானம்பண்ணி வளர்ந்து பசிதாகம், சுகதுக்க முதலானவைகளுக்கு உள்ளானவரானபடியால் மெய்யான மனிதனாயிருந்தார். ஆகவே அவர் மாயாதோற்றமாயிருந்தார் என்ற தோசித்தியர் கொள்கை இதால் நிராகரிக்கப்படுகிறது.

(3) அவருக்கு மனிதருக்குரிய ஆத்துமாவும் இருந்தது, அவருக்கு ஆத்துமாவுக்குரிய ஞானவளர்த்தி. (லூக். 2. 52.)
உணர்ச்சி. (மத். 26. 38.)
சித்தம் லூக். 22. 42; உண்டு.



ஆகவே கிறிஸ்துவானவருக்கு மனுஷ ஆத்துமா இல்லையென்று சாதித்த ஆரியரின் தப்பெண்ணமும், கிறிஸ்துவின் தேவதன்மையும் மனிததன்மையும் ரேகித்து ஒருமைப்பட்டுக் கலந்துபோயிற்று என்று சாதித்த அப்பாலிநேரியுவின் தப்பறையும் இதால் கண்டிக்கப்படுகிறது.

3. மனுடாவதார உபதேசம்.

(1) தேவதன்மையும் மனிததன்மையும் பிரத்தியேகமாய்க் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. அப்படியல்லவென்றால்.

௧. இரண்டு தன்மைகளும் ஒன்றோடொன்று கலந்திருக்க வேண்டியிருக்கும்.

௨. அல்லது விகாரப்பட்டிருக்கவேண்டும்.

௩. தெய்வீகம் மனுஷீகத்தோடே கலந்துபோவது தேவமகத்துவத்துக்குரியதல்ல.

௪. தேவ சுபாவம், மனித சுபாவமாய் விகாரப்படவும் கூடாது.

ஆகவே மனிததன்மை தெய்வீகதன்மையோடே கலந்துபோயிற்றென்று போதித்த ஐத்திக்குவின் தப்பறை இதால் கண்டிக்கப்படுகிறது.

(2) இரண்டு தன்மைகளும் வார்த்தையானவருக்குள் பொருந்தியிருக்கிறது. ஆகவே அவர் ஒருவராயிருக்கிறார்.

இதால் நெஸ்தொரியுவின் கொள்கை நிராகரிக்கப்படுகிறது.

**II. அவர் யாருடைய செயலால் உற்பவித்தார்.**

பரிசுத்த ஆவியானவரின் தன்மை தொழிலைப்பற்றி எட்டாம் பிரமாணத்தில் பார்க்கலாம். இங்கே அவருடைய செயலைக்குறித்துப் பார்ப்போமாக.

1. இயேசு மற்ற மனுக்கள் பிறந்த பிரகாரமாய்ப் பிறக்கவில்லை. தாயின் செயலால் உண்டாக்கப்படக்கூடியவருமல்ல.

2. அவர் அற்புதவகையாய் உற்பவித்தார்.

(1) பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்து உற்பவிப்பதற்கு நிமித்தகாரணராயிருந்தார். தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை.

பரிசுத்த ஆவியானவர் இயேசுவை உற்பவிக்கப் பண்ணினதில் அவருக்குத் தம்முடைய சுபாவத்தைக் கொடுக்காததால் அவருக்குப் பிதாவல்ல.

(2) கன்னிமரியாள் அதற்குக் காரணமாயிருந்தாள். இயேசுவின் சரீரம் கன்னிமரியாள் உதிரத்தில் உருவானது.

இயேசுகிறிஸ்து பரிசுத்த அவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்று நாம் விசுவாசிக்கவேண்டிய தேதெனில்.

1. இயேசுவானவர் மனிததன்மையில் பரிசுத்தராய்த் தேவதன்மையோடே சேர்க்கப்படவும், பாவத்தினின்று நம்மை மீட்டு இரட்சிக்கவும்.

2. தேவகிருபையை விளக்கவும்.

3. நாம் பரிசுத்தராகிறது யாராலே என்று சற்றறியவ

## III. இயேசுவானவர் யாரிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்.

1. அவள் பேர் மரியாள். இது யூதருக்குள் சாதாரணப் பேராயிருந்தது. அந்தப் பேர் பழைய ஏற்பாட்டில் மிரியாம் என்று வழங்கப்பட்டது.

அந்தப் பேருக்கு மூலம் இன்னதென்று பலர் பலவகையாய்ச் சொல்வதுண்டு.

(1) கிருபை.

(2) இராச்சியம்.

(3) கடல் நக்ஷத்திரம் அல்லது கடலின் கசப்புத்துளி.

(4) கசப்பு.

(5) உன்னதம்.

(6) கலகம் என்றர்த்தங்கொள்ளும் மூலங்களிலிருந்து வந்திருக்கலாம் என்பார்கள்.

2. அவள் நிலைமை கன்னிகை.

(1) மேசியா ஒரு கன்னிகையிடத்தில் பிறக்கவேண்டியது. ஸ்திரீயின் வித்து (ஆதி. 3. 15.) ஸ்திரீயானவள் புருஷனைச் சூழ்ந்துகொள்ளுவாள். (எரே. 31. 22.)

ஒரு கன்னி கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். (ஏசா. 7. 14.)

ஒரு கன்னிகை ஒரு குமாரனைப் பெறும்பரியந்தம் யூதருடைய இராச்சியம் நிலைநிற்கும் என்பது மேற்படி வாக்கியத்தின் பொருள். யூதர்கள் கன்னிகை என்பது வாலிப ஸ்திரீ என்றர்த்தப்படுத்தி அந்த வாக்குத்தத்தம் எசேக்கியாவில் நிறைவேறினது என்பார்கள். ஆனால் ஆகாஸ் எருசலேமில் பதினாறுவருஷம் அரசாண்



டான். எசேக்கியா இருபத்தைந்து வயதாயிருக்கையில் தன் தகப்பனாகிய ஆகாசுக்குப்பின் சிங்காசனம் ஏறினதால், அது எசேக்கியாவைக் குறியாது. அந்த வாக்கியம் கிறிஸ்துவைக் குறிக்கமாட்டாது என்று அவர்கள் சொல்வதுமுண்டு. ஆனால் பூர்வீக ரபிமார் அது மேசியாவைக் குறிக்குமென்று சொன்னார்கள்.

(2) மரியாள் இயேசுவைப் பெற்றபோது கன்னிகையாயிருந்தாள். சுவிசேஷகர் எல்லாரும் அதைக்குறித்து சாட்சியிட்டிருக்கிறார்கள்.

(3) அவள் எப்போதும் கன்னிகையாயிருந்தாள் என்பது திருச்சபையாருடைய எண்ணம். (எசே. 44. 2.)

மூதற்பேறான குமாரனைப் பெறுமட்டும் அவளை அறியாதிருந்தான். இயேசுவானவர் பிறந்தபின்பு யோசேப்பு அவளோடே வாழ்ந்திருப்பான் என்று சிலர் சொல்வார்கள்.

"மட்டும்" என்கிற வார்த்தை எப்போதும் இந்த அர்த்தம் கொள்ளாது. திருஷ்: (ஆதி. 28. 15. 1 சாமு. 15. 35. 2 சாமு. 6. 8.)

க. கர்த்தருடைய சகோதரர் என்பது. (யோவா. 2. 12. மத். 12. 46.)

அவருடைய தாயின் சகோதரிகளுடைய பிள்ளைகளாயிருக்கலாம், அல்லது யோசேப்பின் முந்தின மனைவியின் பிள்ளைகளாயிருக்கலாம்.

உ. மரியாளின் குமாரர். (மத். 13. 55; 27. 56.)

யோவா. 19. 25ஐ மத். 27. 56. மாற். 15. 40ஓடே ஒத்துப்பார்க்கையில் யோசேப்பின் மனைவி மரியாளும், கிலெயோப்பாவின் மனைவி மரியாளும் இருந்ததாகக் காணலாம்.

ங. அவளுக்குப் பிள்ளைகளிருந்தால் இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டபோது, அவளை யோவான் கையில் ஒப்புக்கொடுப்பாரா?

3. அவள் செய்கை, கன்னிமரியாள் அவரைப் பெற்றாள்.

(1) அவள் கர்ப்பவதியானாள்.

(2) பிள்ளை அவள் கர்ப்பத்தில் உருவாகி முற்றினது.

(3) பிள்ளையைப் பெற்றாள்.

இயேசுவானவர் கன்னிமரியாளிடத்தில் பிறந்தார் என்று நாம் விசுவாசிக்கவேண்டிய தேதெனில்.

1. இயேசுவானவருடைய தாயாருக்குரிய தகுந்த கனத்தைமாத்திரம் செய்யவும்.

2. நம்முடைய இரட்சகர் ஸ்திரீயினிடத்தில் பிறந்து சரியான மனிததன்மையுடையவராயிருக்கிறார் என்றும், கன்னிகையினிடத்திற் பிறந்து பாவமில்லாத நிர்மலராய் இருக்கிறார் என்றும், தாவீதின் சந்ததியான கன்னிகையாகிய ஸ்திரீயினிடத்தில் பிறந்து; மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தங்கள், தீர்க்கதரிசனங்கள் எல்லாம் அவரில் நிறைவேறியிருக்கிறதென்றும் விசுவாசிக்கவுமே.

## 4. உபதேசம்.

### பொந்தியுப்பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம்பண்ணப்பட்டார்.

பாடுபட்டார் என்பது அவர் சிலுவையிலறையப்பட்ட வருத்தங்களைமாத்திரம் குறியாது.

மரித்தார் என்பதில் அவர் சிலுவையில் அறையப்பட்டபோதிலும் மரிக்காமலுமிருக்கலாமே. ஆதலால் அவருடைய ஜீவன் பிரிந்தது என்று காட்ட மரித்தார் என்று சொல்லியிருக்கிறது.

### "பொந்தியுப்பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டார்."

I. பாடுபட்டவர் இன்னார் என்பதையும்.

II. அவர் பாடுபட்ட காலம் இன்னதென்பதையும்.

1. பாடுபட்டவர் யார்? எப்படி அதாவது எந்தத் தன்மையில் பாடுபட்டார், என்ன பாடுகளைப் பட்டார் என்று பார்க்கவேண்டும்.

1. பாடுபட்டவர் யார்?

(1) உத்தியோகத்தில் மேசியாவானவர்

க. மேசியா பாடுபடவேண்டியதாயிருந்தது. அது ஏசா. 53. அதி. கொண்டு ரூபிக்கப்படுகிறது. அந்தத் தீர்க்கதரிசனம் மேசியாவைக் குறிக்குமென்று பூர்வ ரபிமார் சொன்னார்கள். ஆனால் யூதர் அது யூதஜனங்களைக் குறிக்குமென்றும், இரண்டு மேசியாவைக் குறிக்குமென்றும் அர்த்தப்படுத்துகிறார்கள்.



வேதத்தில் ஒரே மேசியாவைப்பற்றிமாத்திரம் சொல்லியிருக்கிறது. அவர் பாடுபட்டு வெற்றி சிறக்கவேண்டும் என்ற உண்மையான விசுவாசத்தை அது பலப்படுத்துகிறது.

உ. இயேசு பாடுபட்டார், இது எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்படும் காரியம். அவர் ஏன் பாடுபடவேண்டும் என்ற ஆட்சேபனை சொல்லப்படுவதுண்டு.

ங. இந்தப் பாடுகள் அவர் மேசியா என்பதற்குக் குறிப்பாக முன்னுரைக்கப்பட்டிருந்தது. ஆதிசபை அந்தச் சத்தியத்தை ஒப்புக்கொண்டார்கள் (அப். 4. 27, 28.). பாவநிவர்த்தியின் சிறந்த நாளில் செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாக்களுக்கு முன்னடையாளமாயிருந்தன.

அவர் பாடுபடவேண்டும் என்பது பிதாவுக்கும் குமாரனுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையின் தீர்மானமாயிருந்தது. (ஏசா. 53. எபி. 10. 7.)

தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டது (அப். 26. 22.). பஸ்கா, வெண்கல சர்ப்பம் முதலானவைகள் அதற்கு நிழலாட்டமாயிருந்தன.

யூதருடைய எல்லாப் பலிகளும் விசேஷமாய்ப் பாவநிவர்த்தியின் சிறந்தநாள் பலிகளும் முன்னடையாளமாயிருந்தன.

முன்னுரைக்கப்பட்ட பாடுகளை எல்லாம் இயேசுவானவர் அநுபவித்தார் (லூக். 18. 31; 22. 22; 24. 25; அப். 3. 18.)

(2) தன்மையில் இயேசு.

அவர் தேவனுடைய ஒரேபேறான குமாரன்.

2. எப்படி, அதாவது எந்தத் தன்மையில் பாடுபட்டார்.

(1) அவருடைய தெய்வீக தன்மையிலல்ல.

(2) மனிததன்மையில், சரீரத்திலும் ஆத்துமத்திலும் பாடுபட்டார்.

கிறிஸ்துவுக்கு ஆத்துமா இல்லை, அவருடைய தேவதன்மை பாடுபட்டது என்று போதித்த அப்பாலிநெரியுவின் கொள்கை இதால் கண்டிக்கப்படுகிறது.

(3) அப்படியானால் தேவன் பாடுபட்டார் என்பதின் கருத்தென்ன?

க. தெய்வீகமும் மனுஷீகமும் தேவகுமாரனில் ஐக்கியப்பட்டு அவர் ஏகமாயிருக்கிறார். தேவ இலட்சணங்கள் மனுஷீகத்

துக்கும், மனுஷ இலட்சணங்கள் தெய்வீகத்துக்கும் சம்மந்த இலட்சணமாகச் சொல்லப்படும்.

உ. கிறிஸ்து தேவனும் மனுஷனுமாயிருக்கிறபடியால் தேவன் மனிதன் என்றும், மனிதன் தேவன் என்றும் அவர் ஒருவருக்கே சொல்லலாம்.

௩. ஆதலால் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து தமது தேவ தன்மையிலல்ல, மனித தன்மையிலே பாடுபட்டார் என்றறிய வேண்டும்.

3. என்ன பாடுகளைப் பட்டார்.

பொந்தியுப்பிலாத்துவின் காலத்திலும், அவர் சிலுவையில் அறையப்படுமுன்னும் பட்டபாடுகளென்ன?

(1) சரீரத்தில் உள்ளாகப் பெலவீனங்களையும், புறம்பாக சத்துருக்களின் மூர்க்கங்களையும் அநுபவித்தார்.

(2) ஆத்துமாவில்.

க. எதிர்காலத்தில் பயத்தையும், நிகழ்காலத்தில் வியாகுலத்தையும் அநுபவித்தார்.

உ. பாடுகளின் அளவு மத். 26. 38, 39. மாற். 14, 33. பார். அந்தப் பாடுகளுக்குக் காரணம்.

மனிதருடைய சுபாவத்தைப்பற்றி அவருக்கு இருந்த பூரண அறிவு;

தெய்வீக சித்தத்துக்குப் பூரணமாய் அடங்கினது.

தமது சகோதரராகிய மனிதர்பேரில் அவர் வைத்த அன்பு.

அவர்கள் பாவங்களுக்காக அவருக்கு இருந்த துயரம். தேவ கோபம்.

**கிறிஸ்துவானவர் பாடுபடவேண்டிய அவசியம் என்ன?**

1. அவர் எதார்த்தமாய் மனுஷீகத்தில் வெளிப்பட்டார் என்ற சத்தியத்தை விளக்க.

2. மனுஷருடைய மீட்புக்காகவும், அவர்களைத் தேவனோடே ஒப்புரவாக்கவும்.

3. நமக்கு நித்திய பேரின்பத்தைச் சம்பாதிக்கவும்.

4. நம்முடைய துன்பங்களிலும் வியாகுலங்களிலும், நமக்கு இரங்கி நமக்காக பரிதபிக்கிறவர் என்று விளக்கவும்.

5. நாமும் அவரைப்போல பாடுபடும்படி நமக்கு மாதிரியைக் காண்பிக்கவுமே.



## II. அவர் பொந்தியுப்பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டார்

கிறிஸ்துவானவர் பாடுபட்டகாலத்தைக் குறிப்பிடும்படி அவன் பேர் பிரமாணத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1. அவன்பேர் பொந்தியுப்பிலாத்து.

பொந்தியு என்பது குடும்பப்பேர். பிலாத்து என்பது சுயபேர்.

2. அவன் உத்தியோகம், தேசாதிபதியாக (புராக்கியுரேற்றராக) யூதேயாவை ஆண்டு, சகல வருமானங்களையும் தண்டல் செய்து, சகல அதிகாரங்களையும் உடையவனாகவிருந்தான். மரணத்தீர்ப்புக் கொடுக்கவும் அவனுக்கு அதிகாரமுண்டு. அவன் ரோமனாயிருந்தபடியால் இயேசுவானவரை சிலுவையில் அறையும்படி மரணத் தீர்ப்பு செய்தான். கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றிச் சொல்லிய தீர்க்கதரிசனம் அதால் நிறைவேறினது.

3. அவன் அநியாயமாய் தன் சுயமனச்சாட்சிக்கு விரோதமாய் இயேசுவைச் சிலுவையில் அறையும்படித் தீர்ப்புச்செய்தான்.

(1) விசாரணையில் அவர்பேரில் ஒரு குற்றத்தையும் காணவில்லை.

(2) அவன் மனைவி அந்த நீதிமானுக்கு ஒன்றும் செய்யவேண்டாம், இன்று சொப்பனத்தில் அவர் நிமித்தம் வெகு பாடுபட்டேன் என்று ஒரு ஆளிடத்தில் சொல்லியனுப்பினாள்.

4. அவன் குணம்.

அதிகப் பெருமையும் பேராசையுமுள்ளவனாயிருந்தான். பரிதானக்காரன், பட்சபாதமுள்ளவன், திருஷ்டாந்தமாக.

(1) இராயனுடைய சுரூபம் பதிந்திருந்த காசு, தங்கள் தேசத்தில் வழங்கக்கூடாதென்று யூதர்கள் விரோதம் செய்தபோது, அவர்களை அதிகமாய்த் துன்பப்படுத்தினான்.

(2) தேவாலயத்திலிருந்த அவர்கள் பொக்கிஷப் பெட்டியைப் பலவந்தமாய்த் திறந்து பணத்தை எடுத்து, அதைக்கொண்டு ஒரு வாய்க்கால் வெட்டுவித்தான்.

(3) சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளுடனே கலந்துபோட்டான்.

யூதர்கள் அவன்பேரில் அதிகக் கோபமாயிருந்தபடியால், அவர்களைச் சமாதானப்படுத்த மனதாய்ப் பரபாசை விடுதலைசெய்து, இயேசுவைச் சிலுவையில் அறையும்படி ஒப்புவித்தான்.

**பொந்தியுப்பிலாத்துவின் பேர் காட்டப்படவேண்டியது அவசியம் என்ன?**

1. கிறிஸ்துவானவர் பாடுபட்ட காலத்தைக்குறித்து நமக்கு நிச்சயமிருக்கவும்;

2. கிறிஸ்துவானவர் குற்றமற்றவர் என்றும், அவர் மரித்தது நிச்சயமென்றும் அவன் கொடுத்த சாட்சி, வேதத்திலும் அவன் எழுதி வைத்த கட்டளைகளிலும் பதிந்திருக்கவும்;

3. இன்னவகையான மரணமாய்க் கிறிஸ்துவானவர் மரிப்பார் என்று வேதத்தில் அடங்கிய தீர்க்கதரிசனம் நிறைவேறினதைக் காட்டவுமே.

## சிலுவையில் அறையுண்டார்.

I. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா சிலுவையில் அறையப்படவேண்டியதாயிருந்தது.

II. இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டார்.

III. சிலுவையில் அறைந்து கொல்லப்படுகிற மரணம் எப்படிப்பட்டது.

### I. மேசியா சிலுவையில் அறையப்பட வேண்டியதாயிருந்தது.

1. முன்னடையாளங்களைப் பார்க்கில் (ஆதி. 22. அதி.) ஈசாக்கு கட்டைகளைச் சுமந்தான். கிறிஸ்துவானவர் சிலுவையைச் சுமந்தார். வெண்கல சர்ப்பம் (எண். 21. அதி. யோவா. 3. அதி.) கம்பத்தில் உயர்த்தப்பட்டது. கிறிஸ்துவானவர் சிலுவையில் உயர்த்தப்பட்டார். பஸ்கா ஆட்டுக்குட்டி. (யாத். 12. அதி.) அதைப் பொரிக்கக் கட்டுகையில் அது சிலுவையைப்போலிருக்கும். பஸ்கா ஆட்டுக்குட்டியின் எலும்பு முறிக்கப்படலாகாது. கிறிஸ்துவானவருடைய எலும்புகளும் முறிக்கப்படவில்லை.

2. தீர்க்கதரிசனங்களைப்பார்க்கில் "என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்."

"அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்ப்பார்கள்."

### II. இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டார்.

வழக்கத்தின்படியே பட்டணத்துக்கு வெளியே போர்ச்சேவகர் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். முன்பு அவர் வாரினால் அடிக்கப்பட்டு, பின்பு அவர் சிலுவையைச் சுமந்துகொண்டு போனார். அவர் சிலுவையில் அறையப்பட்டதைக்குறித்துச் சத்துருக்களும் மித்துருக்களும் ஒப்புக்கொண்டு சாட்சி பகர்ந்திருக்கிறார்கள்.



ஆகவே, கிறிஸ்து சிலுவையில் அறையப்படவில்லை; சிரேனேனர் சீமோன் அதில் அறையப்பட்டான் என்று பாசிலிதோ என்பவன் போதித்த கொள்கை நிராகரிக்கப்படுகிறது.

### III. சிலுவையின் மரணம் எத்தன்மையுள்ளது.

1. அது யூதரால் செய்யப்பட்ட ஆக்கினையல்ல.

2. அது ரோமரால் செய்யப்பட்ட ஆக்கினை.

(1) அந்நியருக்கு அளிக்கும் தண்டனை.

(2) ஈனமானவர்களுக்கு அளிக்கும் தண்டனை.

(3) கொடிய நோவை அளிக்கும் தண்டனை.

கிறிஸ்துவானவருடைய சிலுவையில் எழுதிவைத்த மேல்விலாசத்தைப் பார்க்கையில், ராஜதுரோகம் என்ற குற்றத்துக்காக அவர் சிலுவையில் அறையப்பட்டார்.

அவருடைய ராஜ்யமோ இவ்வுலகத்துக்குரியதல்ல.

இராயனுடையதை இராயனுக்குக் கொடுங்கள் என்று போதித்தார்.

கிறிஸ்துவானவர் சிலுவையிலே அறையப்படவேண்டிய அவசியம் என்ன?

1. மரத்திலே தொங்கி நமக்காகச் சாபமாகவும்; (உபா. 21. 33. கலா. 3. 13.)

2. நமக்கு விரோதமாயிருந்த ஆக்கினைத்தீர்ப்பாகிய கட்டளையைச் சிலுவைமரத்தில் ஆணியடிக்கவும்;

3. மாம்ச சிந்தையாகிய பாவத்தை நாம் சிலுவையில் அறையவும்;

4. நமக்கு நேரிடும் பாடுகளை நாம் பொறுமையாய்ச் சகிக்கவும்;

5. அவரைப்போல நாமும் நம்மைத் தாழ்த்தி அவரைப் பின்பற்றவும்;

6. நம்முடைய இரட்சகர் மெய்யாய் மரித்தார் என்ற சத்தியத்தை அறியவுமே.

## மரித்தார்.

I. மேசியா மரிக்கவேண்டியதாயிருந்தது.

II. இயேசு மரித்தார்.

III. அவருடைய மரணத்தின் விசேஷித்த தன்மை.

## I. மேசியா மரிக்கவேண்டியதாயிருந்தது.

1. அடையாளங்களால் அது ரூபகாரப்படுகிறது.

(1) ஈசாக்கு. அவன் கட்டைகளின்மேல் கிடத்தப்பட்டது தேவனுக்குப் போதுமான பலியாக இருந்தது.

(2) பஸ்கா ஆட்டுக்குட்டி மேசியாவின் மரணத்துக்குப் போந்த அடையாளமாயிருந்தது.

(3) பாவம்போக்கும் பலிகள் பாளயத்துக்குப் புறம்பே தகனிக்கப்பட்டன.

2. தீர்க்கதரிசனங்களால், அது ரூபகாரப்படுகிறது (ஏசா. 53. 7, 10.) யூதர் ஒரு மேசியா மரிப்பார் என்று சொன்னார்கள்.

ஒரே மேசியாவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் என்று நாம் ரூபித்திருக்கிறோம்.

## II. நம்முடைய இயேசு மரித்தார்.

1. அவர் மரண சங்கதி.

(1) சத்துருக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது

(2) சூரியன் இருண்டது, கன்மலைகள் பிளந்தன, கல்லறைகள் திறந்தன. இவ்வித காரியங்கள் அவர் மரணத்துக்குச் சாட்சியாயிருக்கின்றன.

(3) ஜலமும் இரத்தமும் குத்தப்பட்ட அவர் விலாவிலிருந்து புறப்பட்டன.

2. அவர் மரணத்தின் தன்மை.

(1) ஜீவனுக்கு மூலகாரணம் ஆத்துமா

(2) ஜீவனுக்கு லட்சணம் அசைவும் உணர்வும்

இவ்விரண்டும் ஒழிவதே மரணம்.

(3) உடலும் உயிரும் ஒன்றித்து நிற்பது ஜீவியமும், அவற்றின் பிரிவு சரீர மரணமுமாம்.

(4) இயேசுவானவர் இந்த நிலைமைக்குட்பட்டார். (லூக். 23. 46.)

(5) பாதகர்கள் வருத்துவித்த பாடுகளினால் அவர் மரிக்க வேண்டியதாயிருந்தது.

கிறிஸ்துவானவர் மனோற்சாகமாய் தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கவில்லையா என்று ஆட்சேபிக்கலாம். அவர் மனிதருக்காக நிபந்தனைகளை நிறைவேற்ற ஒப்புக்கொண்டார்.



மனிதர் அந்த நிபந்தனைகளை நிறைவேற்ற தவறினதினால், மரணம் நேரிடவேண்டியதாயிருந்தது. ஆனால் நம்முடைய ஆண்டவர் அசாவசியமாய் முந்திக்கொண்டு தம்மை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கவில்லை.

## III. கிறிஸ்துவானவருடைய மரணத்தின் விசேஷித்த தன்மை.

1. கிறிஸ்துவானவருக்கு இரண்டு தன்மைகளுண்டு.

(1) மனிததன்மை; சரீரமும் ஆத்துமாவும்.

(2) மனுடவதாரத்தில் தேவதன்மையும் மனித தன்மையும் ஐக்கியமானது.

2. அவருடைய மரணத்தில்.

(1) ஆத்துமா சரீரத்தை விட்டுப் பிரிந்தது.

(2) அவருடைய தேவதன்மை மனிததன்மையை விட்டுப் பிரியாமல், அவருடைய சரீரத்தோடும் ஆத்துமாவோடும் சம்மந்தப்பட்டிருந்தது.

“என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்” என்று சொல்வானேன்.

தெய்வீகம் தம்மை விட்டுப் பிரிந்ததினாலேயல்ல, தம்முடைய அகோரமான பாடுகளினால் தமது மனித சுபாவத்துக்கு வேண்டிய ஆதரவும் தேற்றரவும் அவருக்குத் தெய்வீகத்தால் இல்லாதபடியால் அப்படிச் சொன்னார்.

### கிறிஸ்துவானவர் மரித்தார் என்பதில் நாம் கற்றுக்கொள்ளும் போதனை.

அவருடைய மரணம் அவர் நிறைவேற்றவேண்டிய மத்தியஸ்த தொழிலுக்கு விசேஷித்த காரியமாம்.

1. தீர்க்கதரிசியாக.

(1) தம்முடைய உபதேசத்தின் சத்தியத்தை நிலைநிறுத்தினார்.

(2) நாம் தேவனிடத்தில் விசுவாசம் வைக்கவும், உபத்திரவத்தில் பொறுமையுள்ளவர்களாயிருக்கவும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, சத்துருக்களிடத்தில் அன்புகூரவும் மாதிரியைக் காட்டினார்.

2. ஆசாரியராக.

(1) நமதுவிஷயத்தில் நம்மைப் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று மீட்டு, நமதுபேரில் கோபம்கொண்டிருந்த தேவனோடே நம்மை ஒப்புரவாக்கி, அவருடைய ஆசாரியச் செய்கையினால் விசே

யும் பயனையும், அதால் நமக்குக் கிடைக்கும் சுயாதீனத்தையும் பாக்கியத்தையும் நமக்கு நிச்சயப்படுத்தவும் மரித்தார்.

(2) அவர் விஷயத்தில் அவர் தகுந்த வற்ற பிரதான ஆசாரியரும், அவருடைய பலி பூரணமுள்ளதும் என்று விளக்கக் காட்டினார்.

3. இராசாவாக.

(1) தற்காலத்தில் அவருக்கு இருக்கிற அதிகாரத்தைச் செலுத்தவும்.

(2) பிற்காலத்தில் தமது அதிகாரத்தைப் பின்னும் செலுத்தவும்.

---

## அடக்கம்பண்ணப்பட்டார்.

I. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா அடக்கம்பண்ணப்படவேண்டியதாயிருந்தது.

II. இயேசு அடக்கம்பண்ணப்பட்டார்.

I. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா அடக்கம்பண்ணப்படவேண்டியதாயிருந்தது.

அடக்கம் செய்வது யூதருடைய வழக்கம்.

சுகந்தவர்க்கமிட்டு பதம்பண்ணிவைப்பது எகிப்தியருடைய வழக்கம்.

தகனிப்பது இந்துக்கள், கிரேக்கர், ரோமர்களுடைய வழக்கம்.

1. அவர் அடக்கம் முன்னடையாளத்தால் குறிக்கப்பட்டது. (யோனு. மத். 12. 10.)

2. தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்டது (சங். 16. 9, 10. ஏசா. 53. 8, 9.).

II. இயேசு அடக்கம்பண்ணப்பட்டார்.

1. அடக்கச்சங்கதி. சிலுவையில் அறையப்பட்டவர்கள் பொதுப்பட அடக்கம் பண்ணப்படுவதில்லை. அவர்கள் பிரேதம் பறவைகள் மிருகங்களுக்கு ஆகாரமாகச் சிலுவையிலே விட்டுவிடப்பட்டது.

ஒருவரும் அவைகளை இறக்கி அடக்கம் செய்யாதபடிக்குக் காவலாட்கள் அவைகளைக் காப்பதுண்டு.

(1) ஆனாலும் யூதருடைய மனுவின் பேரிலும். (யோவா. 19. 21.).

(2) யோசேப்பு கேட்டுக்கொள்ளுதலின் பேரிலும், நிக்கொதேமு என்பவன் உதவியின்பேரிலும்.



(3) பிலாத்துவின் அநுமதியின்பேரிலும் இயேசு அடக்கம் பண்ணப்பட்டார்.

2. அடக்கம்பண்ணப்பட்ட வகை.

(1) அவருடைய சரீரம் சுகந்தவர்க்கமிடப்பட்டது. துய்யதான மெல்லிய புடவைகளில் சுற்றப்பட்டது.

(2) அது புதிய கல்லறையில் வைக்கப்பட்டு, ஒரு பெரிய கல், கல்லறையின் வாயிலே வைக்கப்பட்டது.

(3) தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினவர்கள் யோசேப்பும் நிக்கொதேமும்.

### இயேசுவானவர் அடக்கம்பண்ணப்பட்டதில் நாம் கற்றுக்கொள்ளும் போதனைகள்.

1. கர்த்தர் மரித்ததும் உயிர்த்தெழுந்ததுமான இரண்டு பிரதான சத்தியங்களையும் இந்த உபதேசம் திருஷ்டாந்தப்படுத்துகிறது.

2. நாம் ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டதை நினைவுகூருகிறோம்.

3. நாம் தகுந்தபடி கிறிஸ்தவர்களை அடக்கம் பண்ணவேண்டியது. ரோமர் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொண்டபின்பு, அவர்கள் பிரேதங்களைச் சுட்டெரிப்பதை நிறுத்திவிட்டார்கள்.

---

## 5. உபதேசம்.

### அவர் பாதாளங்களில் இறங்கி, மூன்றும் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார். *

---

இந்த வார்த்தைகள் கி. பி. 400 அக்குலியன் விசுவாசப் பிரமாணத்திலிருந்தது, கி. பி. 1552. அங்கிலேய சபை விசுவாசப் பிரமாணத்தில் காணப்பட்டன. அதோடே 1 பேது. 3. 19–க்கு வியாக்கியானமும் சேர்க்கப்பட்டிருந்தது. கி. பி. 156–ல் அந்த வியாக்கியானம் நீக்கப்பட்டது.

## "பாதாளங்களில் இறங்கினார்."

I. இயேசுவானவர் பாதாளங்களில் இறங்கின சத்தியத்தைப்பற்றியும்.

II. பாதாளங்களில் இறங்கினார் என்பதின் கருத்தைப்பற்றியும்.

III. பாதாளங்களில் இறங்கின நோக்கத்தைப்பற்றியும் பார்ப்போமாக.

### I. கிறிஸ்துவானவர் பாதாளங்களில் இறங்கின சத்தியம்.

1. இதில் மூன்று காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

(1) அக்குலியன் பிரமாணத்தில் அப். 2. 27. எபே. 4. 9ஐ தழுவி, அவர் பாதாளங்களில் இறங்கினார் என்று போடப்பட்டிருக்கது.

(2) அக்குலியன் பிரமாணத்தில் அடக்கம்பண்ணப்பட்டார் என்ற வார்த்தை யில்லை.

இங்கிலிஷ் பிரமாணத்தில் அடக்கம்பண்ணப்பட்டார். பாதாளங்களில் இறங்கினார் என்ற இரு வாசகங்களும் வருகின்றன. ஆதலால் அவர் பாதாளங்களில் இறங்கினார் என்பது வேறே, அடக்கம் பண்ணப்பட்டார் என்பது வேறே என்று துலங்கும்.

(3) பாதாளங்களில் இறங்கினார் என்ற வார்த்தைகள் வேதத்தில் தெளிவாய்ச் சொல்லப்படவில்லை. ஆனால் விசுவாசப் பிரமாணமானது வேதத்தின்பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதின் பொருள் உள்ளபடி வேதத்தில் அடங்கியிருக்கவேண்டும்.

2. அவர் பாதாளங்களில் இறங்கினார் என்ற உபதேசத்தை உறுதிப்படுத்த பூர்வீகத்தார் மூன்று விசேஷித்த வாக்கியத்தை எடுத்துக் காட்டினார்கள்.

(1) (எபே. 4. 9.) "பூமியின் தாழ்வான இடங்கள்" என்பதைச் சிலர் நரகம் என்றும், வேறு சிலர் இந்தப் பூமியென்றும், வேறு சிலர் சரீரத்தைவிட்டுப் பிரிந்த ஆத்துமாக்கள் இருக்கிற ஸ்தலமென்றும் சொன்னார்கள். சபைப் பிதாக்களில் அநேகர் எண்ணினபடி கிறிஸ்துவானவர் பாதாளங்களில் இறங்கினார் என்பதை ஒருவேளை குறிக்கலாம். ஆனால் அவர்கள் சொல்லிய அர்த்தம் இந்த வாக்கியத்தால் குறிக்கப்பட்டிருக்கிறதென்று தோன்றவில்லை. வாக்கியமே கருகலானது.



௧. இந்த வாக்கியத்தால், அவர் இறங்கினது அவருடைய மரணத்துக்குப் பின்பு என்பதற்குத் தெளிவில்லை.

௨. பாதாளங்கள் என்பது ஆதேசோ அல்லது கெஹென்னாவோ என்பதும் தெளிவில்லை.

௩. அது இவ்வுலகத்தைக் குறிக்கலாம்.

௪. பாதாளங்களில் இறங்கினார் என்பது அவர் மனுடவதாரம் பண்ணினதையாவது அவர் அடக்கம்பண்ணப்பட்டதையாவது குறிக்கலாம்.

(2) 1 பேது. 3. 18, 19.

௧. இந்த வாக்கியங்களில் ஆவி என்பது கிறிஸ்துவின் ஆத்துமாவென்றும், காவலுள்ள ஆவிகள் என்பது நரகவாசிகள் என்றும், காலம் என்பது கிறிஸ்துவின் மரணத்துக்கும் அவர் உயிர்த்தெழுதலுக்கும் இடையேயுள்ள நேரம் என்றும் குறிக்கமாட்டாது; ஏனெனில்.

௨. ஆவி என்பது, ஆத்துமாவைக் குறியாது. காலம் என்பது கிறிஸ்துவானவருடைய மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையிலுள்ள நேரத்தைக் குறிக்கவுமாட்டாது.

௩. ஆவி என்பது, அவருடைய தெய்வீகத் தன்மையையும், காலம் என்பது நோவாவின் நாட்களையும் குறிக்கும்.

கிறிஸ்துவானவர் தமது தேவதன்மையில் நோவாவின் காலத்திலிருந்தவர்களுக்குப் பிரசங்கித்தார் என்பது அதின் கருத்து.

(3) (சங். 16. 8–10. அப் 2. 25, 31.) கிறிஸ்துவானவருடைய ஆத்துமா உயிர்த்தெழுதலில் பாதாளத்தில் விடப்படவில்லை. அவர் மரணத்துக்கு முந்தி அது அங்கே போகவில்லை. ஆகவே இரண்டுக்கும் இடையிலே அது அங்கே போயிருக்கவேண்டும்.

### II. பாதாளங்களில் இறங்கினார் என்பதின் கருத்து. இதைப்பற்றிப் பலர் பலகருத்தாக வியாக்கியானப்படுத்தினதுண்டு.

1. இராண்டல். இயேசுவானவர் தாமே பாதாளங்களில் இறங்காமல் அவருடைய புண்ணியபலமே நரகத்துக்கு எட்டினது என்று சொன்னான். "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்." இதால் அவருடைய ஆத்துமா பாதாளத்திலிறங்கி மறுபடியும் வந்துவிட்டதாகத் தோன்றுகிறது. கிறிஸ்துவின் புண்ணியபலன் அவ்விடத்துக்குப் போயிருக்குமானால் இப்படிச் சொல்லவேண்டியதில்லையே.

2. கல்வின். கிறிஸ்து நரகத்துக்குப் போய், அவ்விடத்தில் நரகவாசிகள் படவேண்டிய நரகாக்கினைகளை எல்லாம் பட்டுச் சகித்தார் என்றான்.

(1) கிறிஸ்துவானவர் நரகவாசிகளுக்குரிய ஆக்கினையை நரகத்தில் உத்தரித்தாரென்றால் அது பொய்யாகும்.

ஏனென்றால் நரகவேதனை மனச்சாட்சியின் வேதனையாம்.

க. கிறிஸ்துவானவர் குற்றமற்றவர். மனச்சாட்சியின் வேதனை அவருக்கு இல்லை.

உ. அவருக்கு அவநம்பிக்கையுமில்லை.

(2) கிறிஸ்துவானவர் அடைந்த மனவேதனை, நரகவாசிகள் அடையும் வேதனைக்கு ஒப்பாக இருந்தது. அந்த மனவேதனை அவருடைய மரணத்துக்குமுன் அவருக்குண்டானது. இந்த வாக்கியத்தில் காட்டிய காரியமோ அவர் அடக்கம்பண்ணப்பட்டதற்குப் பின்புண்டானது.

3. என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர் என்ற வாக்கியத்தை வேறே வகையாய் விஸ்தரிப்பாருண்டு. அவர்கள் "ஆத்துமா" என்பது கிறிஸ்துவின் சரீரமென்றும், "பாதாளம்" என்பது அவர் அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையென்றும் சொல்லுவார்கள். ஆனால்,

(1) கர்த்தர் அடக்கம்பண்ணப்பட்டார் என்றபின் அவர் பாதாளத்தில் இறங்கினார் என்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறபடியால் அந்த வியாக்கியானம் உதவாது.

(2) ரூபினு, பாதாளத்தில் இறங்கினார் என்ற வாசகத்தை விசுவாசப் பிரமாணத்தோடே சேர்த்தபோது மேற்படி வியாக்கியானத்தைச் செய்தபோதிலும் அதை அங்கீகரிக்க ஏதுவில்லை.

(3) ரூபினு தானே கிறிஸ்துவானவர் அடக்கம் வேறே, அவர் பாதாளங்களில் இறங்கினது வேறே என்று சொல்லியுமிருக்கிறான்.

(4) விசுவாசப்பிரமாணத்திலும் இரண்டும் பிரத்தியேகமானதென்று காட்டியிருக்கிறது.

4. பாதாளம் என்பது ஒரு இடத்தைக் குறிக்காமல், ஒரு நிலைமையைமாத்திரம் குறிக்கும் என்றும், கிறிஸ்து அந்த நிலைமைக்குட்பட்டார் என்றும் சொல்வார்கள்-

(1) அப்படியானால் அது கூறியது கூறல் என்ற குற்றத்துக்கு இடங்கொடுக்கும்.

(2) இந்த நூதன கருத்துக்கு வேத ஆதாரமில்லை.

(3) அது மரித்தோர் நிலைமையைக் குறிக்குமானால், அதற்கு முன்னே மரித்தார் என்றும், பின்பு அந்த நிலைமைக்கு இறங்கினார் என்றும் சொல்லவேண்டியதில்லையே.



(4) ஆதேஸ் என்பது ஒரு இடத்தைக் குறிக்குமென்று, பூர்வ சபையின் பிதாக்கள் எல்லாரும் எண்ணினார்கள்.

5. இவ்வுலகத்துக்கும் பரத்துக்கும் பிரத்தியேகமான இடத்துக்கு கிறிஸ்துவின் ஆத்துமா இறங்கினது. அதாவது மனித ஆத்துமாக்கள் இருக்கிற ஸ்தலத்துக்குப் போனது என்று ஒப்புக்கொள்ள நியாயமுண்டு.

(1) சரீரத்தைவிட்டுப் பிரிந்த ஆத்துமா சாகாவரம் பெற்றது.

(2) அது ஓரிடத்திலிருக்கக் கூடியது.

(3) அது உணர்ச்சியுள்ளது.

(4) சரீரத்தைவிட்டுப் பிரிந்த ஆத்துமாக்கள், நீதிமான்கள் அநீதிமான்கள் என இரண்டு பிரிவைச் சேர்ந்தவைகள்.

(5) அவர்கள் இருக்கிற இடம் இவ்வுலகத்துக்குப் பிரத்தியேகமான இடம்.

(6) அந்த இடத்துக்குக் கிறிஸ்துவானவருடைய ஆத்துமா போனது.

(7) திருச்சபைப் பிதாக்கள் அப்படியே ஒப்புக்கொண்டார்கள்.

கிறிஸ்துவுக்கு மனுஷீகத்துக்குரிய ஆத்துமா இருந்ததில்லையென்று சாதித்த அப்பாலினேரியுவின் கொள்கை இதால் நிராகரிக்கப்படுகிறது.

## III. கிறிஸ்துவானவர் பாதாளத்தில் இறங்கின நோக்கம்.

1. சிலர், சொற்பமான இன்பத்தைமாத்திரம் அனுபவிக்கிற உத்தம ஆத்துமாக்களை மோட்சத்துக்குரிய பேரின்பத்துக்கு உயர்த்தும்படி கிறிஸ்துவானவர் ஆத்துமாக்களிருக்கிற பொது ஸ்தலமாகிய பாதாளத்துக்கு இறங்கினார் என்று அபிப்பிராயமாய்ச் சொல்லுவார்கள்.

(1) லாசரு ஐசுவரியவான் என்பவர்களைப்பற்றிய உவமையில் நல்லவர்கள் இன்பத்தையும், பொல்லாதவர்கள் துன்பத்தையும் மரித்தவுடன் அநுபவிக்கிறார்கள் என்றறியலாம்.

(2) இவர்களுடைய இன்பதுன்பத்தின் பரிபூரணம் ஆத்துமாவோடே சரீரம் சேர்க்கையாகி நியாயத்தீர்ப்புக்குப் பின்பு உண்டாகும்.

(3) ஆகவே மேற்சொல்லிய அபிப்பிராயம் சரியல்ல.

2. சிலர் ஆதேஸ் என்பது நிர்ப்பாக்கியமுள்ள இடம் என்று வைத்துக்கொண்டு, கிறிஸ்துவானவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க

வும் அப்போது விசுவாசிப்பவர்களை இரட்சிக்கவும், இதற்குமுன் ஏற்கனவே அவரை விசுவாசித்திருந்தவர்களை மோட்சகரை ஏற்றவும் அவ்விடத்துக்கு இறங்கினார் என்றார்கள்.

ஆதேசிலிருக்கும் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்பது தப்பறையான கொள்கையாயிருக்கிறது.

(1) சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க இறங்கினார்.

க. (1 பேது. 3. 16.) கிறிஸ்துவானவர் பிரசங்கிக்க இறங்கினார் என்பதைக் குறிக்கமாட்டாது.

உ. அப்படிப்பட்ட பிரசங்கம் சுவிசேஷ தன்மைக்கும் நோக்கத்துக்கும் விரோதமானது.

ங. விசுவாசிகள் கிறிஸ்துவின்மூலமாய் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

ச. அவிசுவாசிகள். (லூக். 16. 31.)

(2) பொல்லாதவர்களை இரட்சிக்க இறங்கினார்.

க. (அப். 2. 24.) வாசகப்போங்கை விபரீதமாய்க் கருத்துக்கொண்டதே இதற்கு ஆதாரம்.

உ. பொல்லாதவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்ற உபதேசம் நிராதாரமுள்ளது:

ங. அந்த உபதேசம் நித்திய தண்டனையைப்பற்றிய விஷயத்தில் ஒவ்வாததாயிருக்கிறது. எப்படியெனில்,

a. இந்த ஜீவியம் பரீட்சை நிலையாயிருக்கிறது.

b. கிறிஸ்துவானவர் மரணத்துக்கு முன்னுள்ள பாவிகளின் நிலைமை அவர் மரணத்துக்குப் பின்னுள்ள பாவிகளின் நிலைமையைவிட சிறந்ததல்ல.

c. மரணத்துக்குப்பின்பு குணப்படுதல் கிடையாது.

d. எல்லாரும் அவனவன் தன் சரீரத்தில் செய்த கிரியைகளுக்குத்தக்க பலனைப் பெறவேண்டியதாயிருக்கிறது. (2 கொரி. 5. 10.)

(3) நீதிமான்களை மோட்சகரையேற்ற இறங்கினார்.

ஸ்கூல்மென் என்னப்பட்ட சாஸ்திரிகள் இந்த உபதேசத்தைச் சாதாரணமாய் ஒப்புக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் அதற்குச் சொன்ன நியாயங்களாவன.

1. மரித்துப்போன விசுவாசிகளின் ஆத்துமாக்கள் தேவனைக் காணவில்லை.



2. கிறிஸ்துவானவர் தமது மரணத்தினால் மோட்ச ராஜ்யத்தைத் திறந்தருளினார் என்பதே.

இது சுத்தாங்க உபதேசமல்ல.

க. இதற்குப் பூர்வீக அத்தாட்சியில்லை.

சில பிதாக்கள் உயிர்த்தெழுதலுக்குமுன் நீதிமான்கள் மோட்சகரை ஏறமாட்டார்களென்று எண்ணினார்கள்.

சிலர் ஆபிரகாமின் மடியென்பது பாதாளத்தைக் குறியாதென்றார்கள்.

சிலர் கெட்டுப்போன சில ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும் என்றார்கள். கி. பி. 500 வரையும் விசுவாசிகள் எல்லாரும் மோட்சகரை ஏற்றப்பட்டார்கள், பொல்லாதவர்கள் விட்டுவிடப்பட்டார்கள் என்று ஒருவரும் நம்பவில்லை.

உ இந்த உபதேசம் சந்தேகத்துக்குரியது.

முற்பிதாக்களுடைய ஆத்துமா பாதாளத்திலிருந்தது நிச்சயமில்லை. ஆகையால் கிறிஸ்துவானவர் அங்கே அவர்களை இரட்சிக்கப்போனது நிச்சயமில்லை.

பாதாளத்திலிருக்கிற ஆத்துமாக்கள் இப்போது சீரான நிலைமையிலிருக்கிறார்கள் என்று எண்ண ஏதுவில்லை.

ஆகவே கிறிஸ்து அவர்களை மோட்சகரை ஏற்றவில்லை.

3. வேறுசிலர் அவர் சாத்தானோடு போர்செய்து, அவனுடைய வல்லமைகளை ஜெயிக்கும்படி நரகத்தில் இறங்கினார் என்று சொல்வார்கள்.

(1) இந்த வியாக்கியானம் கொலோ. 2. 12–15. எபே. 4. 8, 9. பேரில் செய்யப்பட்ட வியாக்கியானம்.

(2) அந்த வியாக்கியானம ஒப்புக்கொள்ளப்படத்தக்கதல்ல.

க. (கொலோ. 2. 15.) நரகத்தைக் குறியாமல் சிலுவையைக் குறிக்கும்.

உ. (எபே. 4. 8, 9.) பூமியின் தாழ்வான இடங்கள் என்பது நரகத்தையும், உன்னதத்துக் கெழுந்தருளினார் என்பது அவர் உயிர்த்தெழுவதையும் குறியாது.

ங. சபையின் பிதாக்களுடைய அபிப்பிராயமும் அதல்ல. அவர்கள், விசுவாசித்த ஆத்துமாக்களை உயர்த்தினார் என்றும், அவிசுவாசிகளான ஆத்துமாக்களை இரட்சித்தார் என்றும் சொன்னார்கள்.

ச. (அப். 2. 27.) மூலவாக்கியத்தின் கருத்துமல்ல.

4. கிறிஸ்துவானவர் பாதாளத்துக்கு இறங்கின நோக்கம்.

(1) மரண பிரமாணத்துக்குத் திர்ப்தியுண்டாகவும் மரித்த மனிதர்களுடைய நிலைமைக்குட்படவும்.

(2) மரண பிரமாணத்துக்குப் பூரண திர்ப்திசெய்து, பாவத்தினுலுண்டாகிய பூரண பயனினின்று நம்மை இரட்சிக்கவுமே.

## அவர் மூன்றும்நாள் மரித்தோரிலிருந்து எழுந்தருளினுர்.

இந்தச் சத்தியம் ஆதிமுதல் சபையில் விசுவாசிக்கப்பட்டு, எல்லாப் பிரமாணங்களிலும் எழுதப்பட்டிருக்கது.

I. கிறிஸ்துவானவர் எழுந்தருளினுர்.

II. அவர் மரித்தோரிலிருந்து எழுந்தருளினுர்.

III. அவர் மூன்றும்நாள் எழுந்தருளினுர் என்பதைப்பற்றிப் பார்ப்போமாக.

### I. கிறிஸ்துவானவர் எழுந்தருளினுர்.

1. மேசியா எழுந்தருளவேண்டியதாயிருந்தது.

(1) தாவீதின் குமாரஞக.

க. தாவீதின் பாடுகளும் வெற்றி சிறப்புகளும், அவருக்கு முன்னடையாளமாகக் குறிக்கப்பட்டது.

உ. தாவீது தீர்க்கதரிசனமாக அவரைக் குறித்து முன்னுரைத்தான். (சங். 2. 6, 7; 16. 10. அப். 2. 29. ஏசா. 55. 3.)

(2) பொதுவான முன்னடையாளங்களால் குறிக்கப்பட்டது.

க. யோசேப்பு பகைக்கப்பட்டு, துன்பமடைந்து உயர்த்தப்பட்டான்.

உ. ஈசாக்கு பலியிடப்பட்டு, உயிரடைந்தான்.

2. இயேசுவானவர் எழுந்தருளினுர் என்பதற்கு மூவகை சாட்சியுண்டு.

(1). மனிதர் சாட்சி. பக்தியுள்ள ஸ்திரீகள். (மத். 28. 9.)

ஐந்நூறு சகோதரர். (1 கொரி. 15. 6.)

ரோமப் போர்ச்சேவகர். (மத். 28. 3, 4, 11.)

அப்போஸ்தலர். (அப். 1. 3; 4. 33.)

க. அப்போஸ்தலர் இயேசுவானவரின் உயிர்த்தெழுதலைப் பற்றி வஞ்சிக்கப்பட்டவர்களல்ல.



அவரைத் தொட்டார்கள், அவரோடே பேசினுர்கள், புசித்தார்கள், ஒருநாளல்ல பலநாள் ஆண்டவரைக் கண்டார்கள், உபதேசத்தைக் கேட்டார்கள்.

கட்டளைகளைப் பெற்ருர்கள்.

உ. அப்போஸ்தலர் மற்றவர்களை வஞ்சிக்கத்தக்கவர்களுமல்ல. அவர்கள் குணங்களைக் கவனிக்கும்போதும், அவர்கள் ஆகமங்களைச் சிந்திக்கும்பொழுதும், இந்த உயிர்த்தெழுதலின்பேரில் அவர்கள் காட்டின சத்திய உபதேசங்களைச் சிந்திக்கும்பொழுதும் அவர்கள் மற்றவர்களை வஞ்சிக்கத்தக்கவர்களல்ல.

ந. இந்தக் காரியத்தைப்பற்றி அவர்கள் சாட்சிகொடுத்ததினுலே லௌகீக பிரயோசனம் அடையாமல், துன்பங்களையும் பாடுகளையும் உத்தரித்துத் தங்கள் ஜீவனையும் ஒப்புக்கொடுத்தார்கள்.

ச. அவர்கள் செய்த அற்புதங்களைக் கவனிக்கையில் அவர்கள் மற்றவர்களை வஞ்சிக்கமாட்டார்கள் என்றறியலாம்.

தேவன், பொய்யை ஸ்திரப்படுத்த, அற்புதம் செய்யும் சக்தியை ஒருவருக்கும் கொடுக்கமாட்டார்.

(2) தேவதூதர் சாட்சி, (மத். 28. 2. யோவா. 20. 12. லூக். 24. 5.)

(3) தேவசாட்சி. (யோவா. 15. 26, 27.)

### II. அவர் மரித்தோரிலிருந்து எழுந்தருளினுர்.

1. உயிர்த் தெழுதலென்றுலென்ன?

முன்னே உயிரோடிருந்து பின்பு மரணத்திஞலே விகாரப்பட்ட சரீரமானது, மறுபடியும் முன்போலவே அதேசரீரமாக உயிர்ப்பிக்கப்படுகிறதேயாம்.

(1) ஆகையால், அது புதுசிருஷ்டிப்பல்ல, நித்திரையுமல்ல.

(2) உருவழிவு என்பது சரீரமும் ஆத்துமாவும் பிரிந்துபோவதேயாம்.

2. மேற்சொல்லிய உயிர்த்தெழுதலுக்குரிய இலட்சணங்களின்படியே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார்.

• அவர் மெய்யான மனிதனுயிருந்தார், மெய்யாய் மரித்தார்.

அவர் உயிர்த்தெழுதலில் அவருடைய சுயமான ஆத்துமாவே அவருடைய சுயமான சரீரத்திலே மறுபடியும் சேர்க்கையானது.

(1) சாட்சி அநுமானத்திஞல் அது பிரத்தியட்சமான காரியமென்றறியலாம்.

க. சரீரவிஷயத்தில்.

அதே சரீரம். எந்தச் சரீரத்திலே மரித்தாரோ, அந்தச் சரீரத்திலேயே எழுந்தார். (லூக். 24. 37–39.)

அதே தன்மையான சரீரம். (லூக். 24. 39. யோவா. 20. 27.)

உ. ஆத்தும விஷயத்தில்.

a. அதே ஆத்துமா மரணத்தின் அந்தக்கரணங்களும், ஐம்புலன்களும் பிரத்தியட்சமாய் விளங்கின.

b. அதே தன்மையான ஆத்துமா அவர் செய்த அற்புதங்களினாலும் அவர் பரமேறினதினாலும் விளங்கின

(2) காரணானுமானத்தினால் அதாவது அவர் உயிர்த்தெழுதலுக்குக் காரணர்.

க. கிறிஸ்துவே நிமித்தகாரணர். ௧.

அவர் புண்ணியபலனே நிமித்தகாரணம்.

உ. பிதா மூலகாரணர், அவர் சர்வவல்லவர். அவர்மாத்திரம் மரித்தோரை எழுப்பக்கூடும்.

ங. பிதாவுக்குரிய தேவத்துவம் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் இருக்கிறபடியால், பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவனே கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடே எழுப்பினவர் என்று நிதானிக்கத்தக்கது.

## III. இயேசுவானவர் மூன்றாம் நாளில் எழுந்தருளினார்

1. மேசியா மூன்றுநாளைக்குப் பின்; அதாவது மூன்றாம்நாளில் உயிர்த்தெழும்ப வேண்டியதாயிருந்தது. அது முன்னடையாளக் குறிப்பினால் ரூபகாரப்படுகிறது.

(1) யோனா மீன்வயிற்றிலிருந்தகாலம் மூன்றுநாள். (மத். 12. 43. யோனா. 1. 17.)

(2) பஸ்காபண்டிகையில் அனுப்பின முதற்பலனாகிய கதிர்க்கட்டு, ஓய்வுநாளுக்குப் பின்றைநாளில் அசைவாட்டப்பட்டது. (லேவி 23. 10–12. ரோ. 11. 16.)

2. இயேசுவானவர் அப்படியே உயிர்த்தெழுந்தார்.

(1) எவ்வளவு காலத்துக்குப்பின்.

இராப்பகல் மூன்று நாட்களுக்குப்பின்.

க. அவர் மரித்தவுடனே உயிரடைந்திருப்பாரானால், அவர் மரித்த நிச்சயம் விளங்காது



உ. அவர் மரித்து அநேக நாட்களுக்குப் பின்பு எழுந்திருந்தால், எழுந்தவர் இயேசுவோ அல்லவோ என்ற சந்தேகம் தோன்றும்.

ங. ஆகவே சேவகர் அவர் கல்லறையைக் காத்துக்கொண்டிருக்கும்போதே, அவர் மூன்றாம்நாளில் எழுந்தருளினார்.

ச. மேலும் துயரப்பட்டுக்கொண்டிருந்த தமது சீஷர்களுக்கு ஆறுதலளிக்கவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க உத்தரவளிக்கவும், பரிசுத்த ஆவியானவரை அனுப்பவும் அவர் எழுந்தருளினார்.

(2) எந்தநாளில் உயித்தெழுந்தார்.

மூன்றாம் நாளில்.

அந்த நாள் ஆயத்தநாளிலிருந்து கணக்கிடப்பட்டது.

க. அந்த ஆயத்தநாள் ஓய்வுநாளுக்கு முந்தினநாள் என்றும், (மாற். 15. 42.)

பஸ்கா ஓய்வுநாளுக்கு முந்தினநாளென்றும் (யோவா. 19. 14.) சொல்லப்பட்டிருக்கிறது.

உ. இயேசுவானவர் உயிர்த்தெழுந்தநாள் வாரத்தின் முதல் நாள். ஆகவே யூதர்களுடைய ஓய்வுநாள் நின்றுபோக, கிறிஸ்தவர்கள் அநுசரிக்கும் கர்த்தருடைய நாள் அவரோடே எழும்பினது.

ங. எழுநாளில் ஒருநாள் ஓய்வுநாளாக ஆசரிக்கப்பட்டது. சிருஷ்டிப்பின் காலமுதலுண்டானது.

ச. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதை நினைவுகூரும்படி அந்த விடுதலைகாலமுதல் எழாம்நாள் ஓய்வுநாளாக ஆசரிக்கப்பட்டது.

ரு. இப்போது பிந்தினதாகிய யூதருடைய ஓய்வுநாள் நீக்கப்பட்டது. முந்தினதாகிய சிருஷ்டிப்பின் ஓய்வுநாள் கிறிஸ்துவின் சபையிலே கர்த்தருடைய நாளாகக் கொண்டாடப்படுகிறது.

சு. யூதருடைய ஓய்வுநாள் நீக்கப்பட்டதும், கிறிஸ்தவ ஓய்வுநாள் ஏற்படுத்தப்பட்டதும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலும் அப்போஸ்தலருடைய அனுஷ்டிப்பினாலும் விளங்குகிறது. (யோவா. 20. 19, 26.).

அது கர்த்தருடைய நாள் என்னப்பட்டது (வெளி. 1. 10.). நம்முடைய அறிக்கைக்கும் விசுவாசத்துக்கும் அடையாளமாக அந்த நாளை அனுசரித்துவருகிறோம்.

### கிறிஸ்துவானவர் மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார் என்று நாம் விசுவாசிக்கவேண்டிய அவசியம்.

1. நம்முடைய விசுவாசம் பலப்பட;

2. நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்ற நிச்சயத்தை அடைய;

3 நாமும் இனிமேல் உயிரடைவோம் என்ற நம்பிக்கையில் நிச்சயமுடையவர்களாயிருக்க;

கிறிஸ்து அதற்கு மூலகாரணமாயும் மாதிரியுமாயிருக்கிறார்.

4 நாம் பாவமாகிய மரணத்தினின்று உயிர்த்துப் புதிதான ஜீவனுள்ளவர்களாகப் பிழைக்கவுமே.

## 6. உபதேசம்.

### அவர் பரமண்டலத்துக்கேறி சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார்.

இந்தப்பிரமாணத்தில் தேவன் என்ற வார்த்தையும் சர்வவல்லவர் என்ற வார்த்தையும் பிற்றியகாலத்தில் சேர்க்கப்பட்டன. இங்கே இரண்டு காரியங்கள் அடங்கியிருக்கின்றன. அவையாவன:

கிறிஸ்துவானவர் பரமேறினதும், அங்கே வீற்றிருக்கிறதுமே.

### "அவர் பரமண்டலத்துக்கேறினார்."

I. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா பரமண்டலத்துக்கு ஏறவேண்டியதாயிருந்தது.

II. நம்முடைய இயேசு மெய்யாய்ப் பரமண்டலத்துக்கு ஏறினார்.

III. அவர் ஏறின பரமண்டலத்தின் தன்மை.

#### I. மேசியா பரமண்டலத்துக்கு ஏறவேண்டியதாயிருந்தது.

1. அது முன்னடையாளத்தால் குறிக்கப்பட்டது.

பாவநிவிர்த்தியின் திருநாளில் பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்தான். (லேவி. 16. 2. எபி. 9. 11, 12.)



2. தீர்க்கதரிசன ஆகமங்களில் உரைக்கப்பட்டிருக்கிறது. (சங். 68. 18. மீகா. 2. 13.)

#### II. இயேசுவானவர் மெய்யாய்ப் பரமண்டலத்துக்கு ஏறினார்.

1. அவர் பரமேறின தன்மை.

(1) அவர் பரமேறினார் என்பது கண்ணியமான நிலைமைக்கு உயர்த்தப்படுவதைமாத்திரம் குறியாது. அல்லது அவர் தேவதன்மையும் மனிததன்மையும் சேர்க்கையாயிருப்பதையும் குறியாது.

(2) அவர் சரீரத்தோடே பூமியைவிட்டுப் பரலோகத்துக்கு ஏறி, அந்தச் சரீரத்திலேயே அவ்விடத்திலிருப்பதைக் குறிக்கும்.

2. அவர் பரமேறினதற்குரிய சாட்சி.

(1) அப்போஸ்தலர் கண்கண்ட சாட்சிகள். (லூக். 24. 50, 51. அப். 1. 9, 10.)

(2) தேவதூதர் சாட்சி. (அப். 1. 10, 11.)

(3) ஆகவே அப்பெலித்தா, கிறிஸ்துவின் சரீரம் ஆகாயத்தில் கரைந்துபோயிற்று என்று போதித்த கொள்கை நிராகரிக்கப்படுகிறது.

#### III. அவர் ஏறின பரமண்டலத்தின் தன்மை.

1. அது ஆகாயத்தைக் குறியாது. (எபி. 4. 14.)

2. அது தெய்வீக ஆசனத்தையும் மிகவும் உன்னத பரலோகத்தையும் குறிக்கும்.

ஆகவே செலூசியேனர், மனிக்கேயர், எர்மோகெனே இவர்கள் கிறிஸ்துவின் சரீரம் சூரியனுக்கு அப்பால் செல்லவில்லையென்று போதித்த கொள்கை நிராகரிக்கப்படுகிறது.

#### இதால் நாம் கற்றுக்கொள்ளும் போதனை.

1. நம்முடைய விசுவாசம் உறுதிப்படுகிறது.

2. நம்முடைய நம்பிக்கை ஸ்திரமடைகிறது.
கவனிப்பு.—நமக்கு முன்னோடினவர். (எபி. 6. 19, 20.)
முதல் கனி. (ஏசா. 28. 4.)

3. நம்முடைய ஆசை விருப்பங்கள் பரவசமாகிறது.

4. பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் பொழிந்தருளப்படுவதற்கு முன்குறிப்பாக எழுந்தருளினார்.

## வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்.

I. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா வீற்றிருக்கவேண்டியது.

II. நாம் மேசியாவாக அங்கீகரிக்கிற இயேசுவானவர் வீற்றிருக்கிறார்.

III. அவர் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்பதின் பொருள்.

I. மேசியா வீற்றிருக்கவேண்டியது. அதற்கு,

1. முன்னடையாளம். யோசேப்பு. (ஆதி. 41. 40, 42. 43.)

2. தீர்க்கதரிசனம். (சங். 110. 1.)

(1) யூதர்கள் இந்தத் தீர்க்கதரிசனத்தை வேறேவகையாய் அர்த்தம்பண்ணினார்கள்.

க. பேசப்பட்டவர். அதாவது சங்கீதத்தின் பொருள். எசேக்கியா, தாவீது, ஆபிரகாம், செருபாபேல், இஸ்ரவேல் இவர்களைக் குறிக்கும் என்றார்கள்.

உ. பேசுகிறவர். அதாவது சங்கீதத்தை எழுதினவர். ஆபிரகாமின் உக்கிராணக்காரனாகிய எலியேசர் என்று சிலரும், தாவீதின் பாடகர் என்று வேறு சிலரும் சொல்லுகிறார்கள்.

(2) யூதர்கள் சொன்ன வியாக்கியானத்துக்கு உத்தரவு.

க. தாவீது அந்தச் சங்கீதத்துக்கு ஆக்கியோன். ஆகவே என் ஆண்டவர் என்பது அவனைக் குறியாது.

உ. அது எசேக்கியா, ஆபிரகாம் முதலியவர்களைக் குறிக்காது. அவர்கள் தாவீதுக்கு ஆண்டவன் என்று சொல்லக்கூடாது. அவர்கள் மெல்கிசேதேக்கின் வண்ணமான ஆசாரியருமல்ல.

ங. நம்முடைய இரட்சகருடைய காலத்திலிருந்த ரபிமார் இந்தச் சங்கீதம் மேசியாவைக் குறிக்குமென்றார்கள். அவர் மரணத்துக்குப் பின்னுள்ள சில ரபிமாரும் அப்படியே சொல்லியிருக்கிறார்கள்.

II. நாம் மேசியாவாக அங்கீகரிக்கிற இயேசுவானவர் தேவனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார்.

1. அதுவே அவர் பரமேறினதின் நோக்கம். (மாற். 16. 19. எபே. 1. 20. அப். 2. 34, 36.)

2. இயேசுவானவரும் அதைப்பற்றி நம்பிக்கையோடே பேசியிருந்தார். (லூக். 22. 69.)



III. வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்பதின் பொருள்.

இதில் இரண்டு காரியங்கள் அடங்கியிருக்கின்றன. "வலதுபாரிசம்," "வீற்றிருப்பது."

1. வலதுபாரிசம்.

(1) அதின் அர்த்தம்.

க. திவ்விய வல்லமையைக் குறிக்கும்.

உ. அனந்த மகிமை. (1 இரா. 2. 19.)

ங. பரம பேரின்பம். (சங். 16. 11.)

(2) அவை இயேசுவுக்கும் உரியன.

க. அவருக்கு திவ்விய வல்லமையுண்டு. (மத். 26. 64. மாற். 13. 26.)

உ. அனந்த மகிமையுண்டு. (எபி. 1. 3.).

ங. பூரண பேரின்பத்தை உடையவராயுமிருக்கிறார்.

2. வீற்றிருக்கிறார்.

(1) அதின் அர்த்தம்.

க. வீற்றிருக்கிறார் என்பது அவருடைய சரீரம் உட்கார்ந்திருப்பதைமாத்திரம் குறியாது. (ரோ. 8. 34.)

வேதத்தில் சில இடங்களில் நிற்பதையும் அது குறிக்கும். (அப். 7. 56.)

உ. அது நிலையாயிருப்பதையும்.

ங. ஓய்ந்திருப்பதையும்.

ச. ஆதிக்கம் ஆளுகையையும் குறிக்கும்.

(2) அவை இயேசுவுக்கும் உரியன. அவர் இவ்வித உத்தியோகத்தைத் தரித்துக்கொண்டு அதற்குரிய தொழிலை நடத்திவருகிறார்.

க. அவர் மகத்தானவண்ணம் அதில் பிரவேசித்தது.

a. அவருடைய கீழ்ப்படிதலுக்குப் பலனாக. (பிலி. 2. 8–10.)

b. தாவீதுக்கு வாக்குத்தத்தமாய்ச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேற. (மத். 28. 18.)

அது தாவீதில் நிறைவேறவில்லை. ஏனெனில் நியுந்தனை அவனில் திர்ப்திகரமாய் முடியவில்லை.

c. அது கிறிஸ்துவில் நிறைவேறினது.

தாவீதும் அவன் ராஜ்யமும் அவருக்கு முன்னடையாளமாக மாத்திரம் இருந்தது. (எசே. 34. 23.)

d. தாவீது இரண்டுதரம் அபிஷேகம்பண்ணப்பட்டது. கிறிஸ்துவின் மனுடவதாரம் செய்தபோதே ராஜாவாகப் பிறந்ததையும் அவர் தேவனுடைய வலதுபாரிசத்திலே ராஜாவாக வீற்றிருப்பதையும் குறிக்கும்.

3. ராஜா உத்தியோகத்தைச் செலுத்தினார்.

அதாவது தமது சத்துருக்களைக் கீழ்ப்படுத்தினார்.

(1) சத்துருக்களை.

* உலக சத்துருக்கள். யூதர், ரோமர்.

ஆத்தும சத்துருக்கள். பாவம். (ரோ. 5. 21.)

சாத்தான். (யோவா. 12. 31. எபே. 2. 2.)

மரணம். (ரோ. 5. 14.)

(2) சத்துருக்களை ஜெயிப்பதில் தமது அன்பை விளக்கும்படி தம்முடைய ஜனங்களின் இரட்சிப்புக்குத் தடையாயிருக்கிறவைகளையெல்லாம் நீக்கிவிடுவதைக் குறிக்கும்.

தமது நீதியை விளக்க, பாவம், பிசாசு, மரணம் என்றவைகளின் ராஜ்யத்தை அழிப்பதைக் குறிக்கும்.

4. அந்த உத்தியோகம் எவ்வளவுகாலம் நிலைக்கும்.

(1) தமது சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப் போடும்வரையும். (1 கொரி. 15. 25.)

(2) அப்போது அவருடைய மத்தியஸ்த தொழில் நின்றுபோகும். (1 கொரி. 15. 24, 28.)

(3) அவர் மத்தியஸ்த ராஜாவாயிராமற்போனாலும், தம்முடைய ஜனங்களின்பேரில் அவர் ராஜாவாய் ஆளுகை செய்வார்.

இந்த அதிகாரம் அவர் பாடுகளின் பயன்.

நீசேயின் பிரமாணத்தில் அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை யென்று சொல்லியிருக்கிறது.

ஆகவே குமாரன் தெய்வீக தன்மையிலிருந்து தோன்றி தமது தொழிலை நிறைவேற்றினபின்பு மறுபடியும் தெய்வதன்மையோடே ரஞ்சித்துப்போனார் என்ற மார்செல்லியஸ் என்பவனுடைய கொள்கை நிராகரிக்கப்படுகிறது.



**கிறிஸ்துநாதர் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கவேண்டியது ஏதெனில்,**

1. ஜெயத்தினாலும் சுதந்தரத்தினாலும் அவர் நமக்கு ராஜாவாயிருக்கிறபடியால் நாம் அவருடைய குடிகளாக நம்முடைய கடமைகளை அவருக்குச் செய்யவும்,

2. நம்மைக் காத்து ஆளுகிறார் என்ற நிச்சயமுண்டாகவும்.

3. அவர் வேண்டுதலினால் உண்டாகும் பயன் நமக்குப் பலிக்கவுமே.

---

## பிதாவைப்பற்றிச் சொல்லிய காரியம்.

## சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவன்.

---

I. தேவன் சர்வவல்லவர் என்பதையும்.

II. சர்வவல்லவர் என்பதில் அடங்கிய கருத்தையும் பார்ப்போமாக.

I. தேவன் சர்வவல்லவர்.

1. தேவதூதர் சாட்சி. (லூக். 1. 37.)

2. கிறிஸ்துவானவருடைய சாட்சி.

3. சித்தாந்தம்.

விகற்பமாயிராத காரியங்கள் எவையும் செய்ய அவரால் ஆகும்.

அவர் செய்யக்கூடாதவைகள் விகற்பமாயிருக்குமாதலால் அது அவருடைய சர்வவல்லமைக்குப் பின்னமாகாது.

II. சர்வவல்லவர் என்பதில் அடங்கிய கருத்து.

1. தேவன் செய்யக்கூடியதெல்லாவற்றையும் செய்ய வல்லமையுள்ளவர். ஏனெனில்,

(1) அவர் மற்றெல்லா வல்லமைக்கும் ஊற்றாயிருக்கிறார்.

(2) அவருடைய சித்தம் எதிர்க்கப்படக்கூடாதது.

(3) அவருடைய வல்லமை சமஸ்தத்தின்பேரிலும் உள்ளது.

(4) ஆகவே ஒன்றுக்கொன்று விரோதமாயிராத எதையும் செய்ய அவர் சர்வ சக்தியுள்ளவர்.

2. விகற்பமாயிருக்கிற காரியங்கள் கூடாதவைகள். அதால் அவருடைய சர்வவல்லமைக்கு பின்னமுண்டாகாது. ஒரு காரியம் விகற்பமானது என்று சொல்லுகையில் அந்தக் காரியம் ஒரே நேரத்தில் இருக்கவும்வேண்டும். இல்லாதிருக்கவும்வேண்டும். அப்ப

டியே தேவன் ஒரு காரியத்தை ஒரே நேரத்தில் இருக்கவும் இல்லாதிருக்கவும் செய்யக்கூடாது.

இரண்டும் இரண்டும் ஐந்து என்று பண்ணவும்கூடாது.

(1) அவர் தமது இயற்கையான இலட்சணங்களுக்கு விரோதமானதைச் செய்யார்.

அவர் சுயம்புவாயிருப்பதால் மரிப்பது கூடாதகாரியம்.

(2) அவர் பூரண பரிசுத்தராயிருப்பதால் அவர் ஒருவனையும் வஞ்சிக்கமாட்டார்.

3. அவர்மாத்திரம் சர்வவல்லவர்.

பிதா சர்வவல்லவர், குமாரனும் அப்படியே, பரிசுத்த ஆவியும் அப்படியே. இங்கே பிதாவைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. அது அவருடைய வல்லமையின் வலது பாரிசத்துக்கு அடுத்ததாயும் ஏற்றதாயுமிருக்கிறது.

### பிதாவானவர் சர்வவல்லவர் என்று விசுவாசிக்கவேண்டிய அவசியம்?

1. நமக்குள்ளே பிதாவைப்பற்றிய பயபக்தியை உண்டுபண்ண.

2. நம்முடைய விசுவாசத்தை உறுதிப்படுத்த, தேவன் பொய் சொல்லார். அற்புதம் தேவன் உண்டென்று ரூபிக்கிறது.

3. அவர் தாம் செய்யும் வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லவர் என்பதை நமக்கு நிச்சயப்படுத்த.

4. நம்முடைய தியானங்களில் அனலை உண்டாக்க

## 7. உபதேசம்.

### அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

I. கிறிஸ்துவானவர் மறுபடியும் வருவார்.
II. அவர் பரமண்டலத்திலிருந்து வருவார்.
III. அவர் நியாயந்தீர்க்க வருவார்.
IV. உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்பதைப் பார்ப்போமாக.



I. கிறிஸ்துவானவர் மறுபடியும் வருவார்.

1. கிறிஸ்து மகிமையோடே வருவார் என்ற தீர்க்கதரிசன வாக்குத்தத்தங்களிருந்தன. (தானி. 7. 13, 14.)

2. இயேசு மேசியா அப்படி வருவதாய் வாக்குரைத்திருக்கிறார்.

(1) இயேசு மறுபடியும் வருவார். (யோவா. 14. 3, 28.)

(2) அவர் வரும் விதம். தாம் எறிப்போனவண்ணமே மறுபடியும் வருவார். (அப். 1. 11. வெளி. 1. 7.)

II. அவர் எவ்விடத்திலிருந்து வருவார். மகிமையின் ஸ்தலமாகிய பரமண்டலத்திலிருந்து. (அப். 3. 21. 1 தெச. 4. 16. பிலி. 3. 20.)

III. அவர் வரும் நோக்கம். நியாயந்தீர்க்க.

1. நியாயத்தீர்ப்புண்டு. அதற்குரிய மூன்று நியாயங்கள்.

(1) மனிதருக்குரிய இயல்பையும் தத்துவத்தையும் கவனிக்கையில்,

க. மனச்சாட்சியானது நல்வினை, தீவினைக்குரிய சாட்சியாயிருக்கிறதினாலே, அந்தச் சாட்சி விளங்கவேண்டிய நியாயத்தீர்ப்பும் இருக்கவேண்டியது.

உ. மனச்சாட்சியானது இம்மையில் ஒரு நியாயாதிபதியாயும்.

ந. மறுமையில் சாட்சியாயும் விளங்கும்.

(2) உலகத்தைச் சிருஷ்டித்து ஆண்டு நடத்தும் கடவுள் ஒருவர் இருக்கிறபடியால் அவர் உலகத்தை நியாயந்தீர்க்கவேண்டியதென்று விளங்குகிறது.

க. தேவன் நீதியபர்.

உ. இம்மையில் நல்லவர்கள் துன்பத்தையும், பொல்லாதவர்கள் இன்பத்தையும் அனுபவிக்கிறதுண்டு.

ந. இப்படிப்பட்ட தடுமாற்றம் பூமியில் தோன்றுகிறபடியால் நியாயாதிபதி ஒருவர் இல்லை என்றாவது அவர் இருந்தாலும் நீதியுள்ள நியாயாதிபதியல்ல வென்றாவது சொல்லவேண்டியதாய் நேரிடுகிறது.

ச. தேவன் ஒருவர் உண்டென்றும், அவர் யாவரையும் நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்றும் விளங்குகிறபடியால் அவர் நன்மை தீமைக்குத்தக்க பலனையளிக்கும் நியாயத்தீர்ப்புநாள் உண்டென்றும், இம்மையில் விளங்காத நீதி மறுமையில் விளங்கும் என்றும் பிரத்தியட்சமாய்த் தோன்றுகிறது.

(3) வேதமும் அதைக்குறித்துச் சாட்சியிடுகிறது. (ஆதி. 4.7. யூதா. 14, 15 வச. எபி. 6. 1, 2.)

அஞ்ஞானிகள் சாட்சி. (அப். 17. 31, 32.)

2. வரப்போகிற நியாயாதிபதி.

(1) இயல்வேதத்தின்படி தேவன் நியாயாதிபதியாயிருப்பார்.

(2) அருள்வேதத்தின்படி தேவகுமாரன் நியாயாதிபதியாயிருப்பார்.

க. அவர் தேவனாயிருப்பதால் சுபாவப்படியான பாத்தியதையின்படி.

உ. மனிதகுமாரனை அவர் அதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருப்பதால்,

1. திருத்துவத்தில் அவர்மாத்திரம் மனுஷகுமாரனாயிருக்கிறார்.
2. அவர் தம்மைத் தாழ்த்திக்கொண்டதற்குப் பலனாக.
3. நியாயாதிபதியானவர் மோசேக்கு ஒ[illegible]ாகப் பிரத்தியட்சமாய்க் காணப்படும்படி.
4. அவர் அப்படி இருப்பார் என்பது [illegible]வருடைய உயிர்த்தெழுதலால் நிச்சயப்படுத்தப்பட்[illegible]து.
5. வேதத்திலுள்ள பல உவமைகளில் அறிவி[illegible]கப்பட்டிருக்கிறது.

விதைக்கிறவன் உவமை. (மத். 13. 12.)
கோதுமையையும் களைகளையும்பற்றிய [illegible] (மத். 13. 30.)
கடலிலே போடப்பட்ட வலையின் உவமை (மத். 13. 48.)
கன்னிகைகளைப்பற்றிய உவமை. (மத். 25. 19.)
மேய்ப்பனைப்பற்றிய உவமை. (மத். 25. 32.)

3. நியாயத்தீர்ப்பின் இலட்சணம்.

(1) நியாயத்தீர்ப்பு என்பது சகல மனிதரும் தங்கள் ஆத்துமாவிலும் சரீரத்திலும் என்றென்றைக்கும் இன்பத்தையாவது துன்பத்தையாவது அனுபவிக்கும்படி செய்யப்படும் கடைசியான தீர்மானமாம்.

(2) அது எப்படி நடத்தப்படும்.



க. ஒரு நியாயாசனமுண்டு. (2 கொரி. 5. 10.)

உ. எல்லா மனிதரும் அதற்கு முன்பாக நிறுத்தப்படுவார்கள். (மத். 25. 32.)

ங. எல்லாருடைய நல்வினையும் தீவினையும் வெளிப்படும். (1 கொரி. 4. 5.)

ச. அவரவர் கிரியைகளுக்கேற்றபடி தீர்ப்புக் கொடுக்கப்படும். (மத். 25. 34, 41.)

ரு. தீர்ப்பு செலுத்தப்படும்.

IV. நியாயந்தீர்க்கப்படுகிறவர்கள் யார்? எல்லா மனிதரும் உயிருள்ளோரும் மரித்தோரும் இவர்கள் யார்?

1. சிலர் உயிருள்ளோர் என்பது ஆத்துமாக்களையும் மரித்தோர் என்பது சரீரங்களையும் குறிக்கும் என்பார்கள். இது ஒவ்வாத அர்த்தம்.

(1) ஆத்துமாவும் சரீரமும் சேர்ந்த மனிதர் நியாயந்தீர்க்கப்படுவார்களே[illegible]ாழிய, ஆத்துமாவும் சரீரமும் வெவ்வேறாக நியாயந்தீர்க்கப்பட[illegible]ாது.

(2) நியாயத்தீர்ப்புநாள் வரும்போது எல்லா மனிதரும் மரித்தி[illegible]ப்பார்களென்று நிச்சயமில்லை.

(3) ஆகவே உயிருள்ளோர் மரித்தோர் என்பவர்கள் ஆத்துமமும் சரீரமும் என்ற மனித வகுப்புகளைக் குறிக்கமாட்டாது.

ம[illegible]ிதர்களையே முழுமையுமாகக் குறிக்கும்.

[illegible]லர் அந்த வாசகம் நீதிமான்களையும் அநீதிமான்களையும் [illegible]தும் என்பார்கள். இது சத்தியமென்றாலும் இங்கே அந்த அ[illegible] கொடாது.

(1) ஆவிக்குரிய வகையாய்ப் பிழைத்திருக்கிறவர்களையும் மரித்திரு[illegible]றவர்களையும் சுட்டும் என்பதற்குக் குறிப்பில்லை.

(2) இயல்பான கருத்தே போதுமானதாயிருக்கிறது.

(3) வேதாகமத்தில் மரித்தோர் என்பது உள்ளபடி மரணமானவர்களையே குறிக்கும் என்றறியலாம்.

3. கிறிஸ்துவானவர் நியாயந்தீர்க்க வருமுன்னதாக மரித்தவர்களையும், அவர் வரும்போது உயிரோடிருக்கிறவர்களையும் குறிக்கும் (1 தெச. 4. 15, 17. 1 கொரி. 15. 51.)

## இந்த உபதேசத்திலே நாம் கற்றுக்கொள்ளும் போதனை.

1. பூமியிலே நீதி பூரணமாய் விளங்காமல் சந்தேகத்தை உண்டு பண்ணுகிற காரியங்களுக்கு நியாயத்தீர்ப்பு நாள் உண்டு என்பது நல்ல உத்தரவாயிருக்கிறது.

2. பாவத்தைக்குறித்து உத்தமமாய் மனஸ்தாபப்பட நம்மை ஏவுகிறது.

3. நித்தியஜீவனைப் பெறுவோம் என்கிற நிச்சயம் நமக்குண்டாகிறது.

# 8. உபதேசம்.

## பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன்.

I. பரிசுத்த ஆவியானவரின் தன்மை.

II. அவருடைய தொழில்.

### I. பரிசுத்த ஆவியானவரின் தன்மை.

ஆவி உண்டென்பதைப்பற்றி ரூபிக்கவேண்டியதில்லை.

1. சதுசேயர் சிருஷ்டிக்கப்பட்ட ஆவிமாத்திரம் இல்லை என்று சாதித்தார்கள். (அப். 23. 8.)

2. எபேசுவிலுள்ள யோவான்ஸ்நானகன் சீஷர்கள் ஆவியின் வரத்தைப்பற்றிய அறிவில்லாதிருந்தார்கள். (அப். 19. 2.)

1. அவர் தனியேக தன்மையுள்ளவர்.

(1) பிதாவும் குமாரனும் தனியேக தன்மையுள்ளவர்களாயிருப்பதுபோல பரிசுத்த ஆவியானவரும் இருக்கிறார். ஆகவே,

க. அவர் ஒரு சக்தியுமல்ல.

உ. அவர் ஒரு குணமுமல்ல.

(2) வேதத்தில் அவர் தனியேக தன்மையுள்ளவரென்று காட்டியிருக்கிறது.

க. ஒரு ஆளுக்குரிய இலட்சணங்கள் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.



1. அசுத்த ஆவிகளுக்கு எதிரிடையாக பரிசுத்தஆவி என்னப்படுகிறார். (1 சாமு. 16. 14. 2 நாளா. 18. 21.)

2. ஆளுக்குரிய கிரியைகள் அவரால் நடத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

துக்கப்படுத்துதல். (எபே. 4. 30.)

பரிந்துபேசுதல். (ரோ. 8. 26.)

ஆராய்கிறது, அறிகிறது. (ரோ. 8. 27.)

வெளிப்படுத்துகிறது. (அப். 10. 19.)

ஏற்படுத்துகிறது. (அப். 13. 2.)

போதித்துச் சாட்சியிடுகிறது. (யோவா. 14. 26.)

ஆட்சேபனை. இதெல்லாம் ஜீவவஸ்துவைப் பற்றிய வார்த்தைகள் என்றாலும், தேவ ஆவியானவர் என்பது பவுல், அன்பைப் பற்றிச் சொல்வதுபோல ஒரு உருவகமாக காரணத்தையாவது காரியத்தையாவது குறிக்கலாமே.

உத்தரவு. பரிசுத்த ஆவியானவரைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற சில காரியங்கள் தேவனுடைய கிரியைகளைக் குறிக்கும் உருவகமாகாது.

திருஷ்டாந்தமாகப் பரிந்துபேசுதல். (ரோ. 8. 26.)
பிதாவினிடத்திலிருந்து வருகிறவர் அவரால் அனுப்பப்படுகிறவர். (யோவா. 15. 26; 16. 27.)

சுயமாய்ப் பேசாமல் கேள்விப்பட்டவைகளைப் பேசுகிறவர். (யோவா. 16. 13.) மகிமைப்படுத்துகிறவர். (யோவா. 16. 14.)

இரண்டாவது காரியமாக அது மனிதனைக் குறிக்கவுமாட்டாது. திருஷ்டாந்தமாக பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்பேரில் அமர்ந்தார். பிதாவாலும் குமாரனாலும் அனுப்பப்படுகிறவர்.

கிறிஸ்துவினிடத்திலிருந்து பெற்று அப்போஸ்தலருக்குக் காண்பிக்கிறது.

உ. சொசினியர் ஒரு ஜீவ வஸ்துவுக்கில்லாத சில இலட்சணங்கள் ஆவிக்குச் சொல்லப்பட்டிருப்பதால் அவைகள் இலட்சணங்களைக் குறிக்குமேயொழிய ஒரு வஸ்துவைக் குறியாது என்கிறார்கள்.

ஆவியானவர் கொடுக்கப்பட்டார், ஊற்றப்பட்டார், அணைக்கப்பட்டார், ஆவியால் நிரப்பப்பட்டார்கள் என்ற வாசகங்கள் பரிசுத்த ஆவியானவர் ஒரு வஸ்துவல்ல என்பதை ரூபிக்காது.

1. கொடுக்கப்படுதல் ஒரு வஸ்துக்குரியது.

2. மற்றது ஆவியானவருடைய கிரியைகளையும் பயன்களையும் குறிக்கும். அவர் இந்தப் பயன்களுக்குக் காரணர் ஆனதால் ஆவி என்று அழைக்கப்படுகிறார்.

ங. ஆகவே பரிசுத்த ஆவியானவர் இலட்சணமல்ல,

1. ஒரு வஸ்துவாயிருக்கிறார்.

2. இதால், சொசினியருடைய கொள்கையும் யூதருடைய கொள்கையும் நிராகரிக்கப்படுகிறது.

2. அவர் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துவல்ல, நியாய இலக்கணத்தின்படி இதைப் பார்ப்போம்.

(1) பூர்வ சாதனம். தேவனுக்குள்ளிருக்கிற தேவ ஆவியானவர் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்து அல்லவென்று சொசினியர் ஒத்துக்கொள்ளுகிறார்கள். (1 கொரி. 2. 11.) உத்தரசாதனம். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆவியாயிருக்கிறார்.

சாத்தியம். ஆகவே அவர் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துவல்ல.

(2) பூர்வ சாதனம். யாருக்கு விரோதமாய் மன்னிக்கப்படாத பாவம் செய்யப்படுமோ அவர் ஒரு வஸ்துவாயும் சிருஷ்டிக்கப்படாத வஸ்துவாயும் இருக்கவேண்டும்.

உத்தர சாதனம். பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய்ச் செய்யப்படும் பாவம் மன்னிக்கப்படமாட்டாது. (மத். 12. 31, 32.)

சாத்தியம். ஆகவே, பரிசுத்த ஆவியானவர் ஒரு வஸ்துவாயும் சிருஷ்டிக்கப்படாத வஸ்துவாயு மிருக்கிறார்.

ஆட்சேபனை. பரிசுத்த ஆவியானவர் தேவனாயிருப்பதால் அவருக்கு விரோதமாய்ச் செய்யப்படும் பாவம் மன்னிக்கப்படக் கூடாதது என்ற பொருளா?

உத்தரவு. இது சாதனத்தையும் சாத்தியத்தையும் கீழது மேலதாக்குகிறதாயிருப்பதால் அது நியாயமில்லாத ஆட்சேபனை. சாதனமும் சங்கதியும் மன்னிக்கப்படாத பாவம்.



அந்தச் சாதனத்திலிருந்து பிறக்கும் சாத்தியம் இவ்விய வஸ்து.

(3) பூர்வ சாதனம். சிருஷ்டிக்கப்பட்டவர்கள் எல்லாரும் தேவனாக தேவகுமாரனால் உண்டாக்கப்பட்டு, மனிதனாக தேவகுமாரன் கால்களின்கீழே வைக்கப்பட்டிருக்கிறார்கள். (யோவா. 1. 3. 1 கொரி. 15. 27.)

உத்தர சாதனம். தேவனுடைய ஆவியானவர் உண்டாக்கப்பட்டவருமல்ல, மனிதனான தேவகுமாரன் கால்களின்கீழே வைக்கப்பட்டிருக்கிறவருமல்ல. (யோபு, 26. 13. 1 கொரி. 12. 11.)

சாத்தியம். ஆகவே பரிசுத்த ஆவியானவர் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துவல்ல.

(4) பூர்வ சாதனம். கிறிஸ்துவானவர் உற்பவித்ததற்குச் செயலாயிருந்தவர் சிருஷ்டிக்கப்பட்டவரல்ல. (ஏனெனில் அதால் அவர் தேவகுமாரன் என்று அழைக்கப்படுகிறார்.)

உத்தர சாதனம். கிறிஸ்துவானவர் பரிசுத்த ஆவியானவரின் செயலால் உற்பவித்தார். (லூக். 1. 35.)

சாத்தியம். ஆகவே பரிசுத்த ஆவியானவர் சிருஷ்டிக்கப்படாத வஸ்துவாயிருக்கிறார்.

(5) ஆகவே, ஆரியானர், மக்கெதோனியர் என்பவர்களின் பூர்வ தப்பறையும், சொசினியருடைய தற்கால தப்பறையும் இதால் நிராகரிக்கப்படுகிறது.

3. அவர் மெய்யாய்த் தேவனாயிருக்கிறார்.

(1) இந்தச் சாத்தியம் சொசினியரும் மக்கெதோனியரும் அவரவர் ஒப்புக்கொள்ளுகிற சங்கதியினால் உண்டாகிறது. எப்படியெனில் சொசினியர் தேவனுடைய ஆவி தேவனுக்குள் இருக்கிறதென்றும், அது தேவனுடைய சர்வ வல்லமையென்றும், மக்கெதோனியர் தேவனுடைய ஆவி ஒரு வஸ்துவென்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

(2) பூர்வ சாதனம். மோசேயுடனே பேசினவர் யெகோவா. (யாத். 34. 34.)

உத்தர சாதனம், மோசேயுடனே பேசினவர் பரிசுத்த ஆவியானவர் (2 கொரி. 3. 15, 17. அப். 28. 27. எசா. 6. 9.) நல்ல திருஷ்டாந்தம்

சாத்தியம். ஆகவே பரிசுத்த ஆவியானவர் யெகோவா.

**ஆட்சேபனை.** கர்த்தர் என்பது (2 கொரி. 3. 15.). தேவனைக் குறியாமல் கிறிஸ்துவையும், ஆவி என்பது நியாயப்பிரமாணத்தின் மறைவான கருத்தையும் குறிக்கும் என்பார்கள்.

**உத்தரவு.** யாத்திராகமத்தில் மூலத்திலே யெகோவா என்றிருக்கிறது. ஆவி என்பது நியாயப்பிரமாணத்தின் கருத்தைக் குறிக்குமென்பது வாக்கியத்துக்குப் பொருந்தாததாயிருக்கிறது.

(3) பூர்வ சாதனம். அனனியா யாருக்கு விரோதமாய்ப் பொய்சொன்னானோ அவர் தேவன். (அப். 5. 4.)

உத்தர சாதனம். அவன் பரிசுத்தஆவிக்கு விரோதமாய்ப் பொய் சொன்னான். (அப். 5. 3.)

சாத்தியம். ஆகவே, அவர் தேவன்.

இதைப்பற்றி சோசினியர் "தேவன்" பரிசுத்த "ஆவி" என்ற பதங்கள் வெவ்வேறே வேற்றுமைகளில் வழங்கப்பட்டிருக்கிறது என்று ஆட்சேபிக்கிறார்கள்.

**ஆட்சேபனை.** அனனியா பரிசுத்தஆவியை வஞ்சித்தானல்லவா? வாக்கியத்தின் கருத்து அதல்ல.

**உத்தரவு.** அதால் நியாயத்துக்கு விகற்பம் நேரிடாது.

**ஆட்சேபனை.** தேவனுடைய தூதர்கள், சிருஷ்டிகள் என்பதற்குச் சந்தேகமில்லை. இங்கே பரிசுத்தஆவி என்று சொல்லப்பட்டிருக்கிறதுபோல, அவர்களும் பரிசுத்தஆவிகள் எண்ணப்படுகிறார்கள்.

**உத்தரவு.** இது சத்தியமல்ல.

(4) பூர்வசாதனம். ஒரு கட்டிடத்துக்குள் வாசம்பண்ணி அதை ஆலயமாக்கிக்கொள்ளுகிறவர் தேவன்.

உத்தர சாதனம். பரிசுத்த ஆவியானவர் அப்படி வாசம்பண்ணி மனித சரீரத்தை தேவனுடைய ஆலயமாக்குகிறார். (1 கொரி. 6. 19.)

சாத்தியம். ஆகவே, பரிசுத்த ஆவியானவர் தேவன்.

(5) பூர்வ சாதனம். பிதாவைப்போல் திவ்விய இலட்சணங்கள் யாருக்கு இருக்கிறதோ அவர் தேவன்.

உத்தர சாதனம். பரிசுத்த ஆவியானவருக்குத் திவ்விய இலட்சணங்களுண்டு.

சாத்தியம். ஆகவே பரிசுத்த ஆவியானவர் தேவன்.



(6) பூர்வசாதனம். செயல்களினிமித்தம் அதாவது சிருஷ்டிப்பு, ஆதரிப்பு, விசுவாசிகளை மறுஜென்மப்படுத்துதல் இவைகளினிமித்தம் யார் திவ்விய வணக்கம் பெறவேண்டியவராயிருக்கிறாரோ, அவர் தேவன்.

உத்தரசாதனம். பரிசுத்த ஆவியானவர் அந்தச் செயல்களை நடப்பிக்கிறார்.

சாத்தியம். ஆகவே அவர் தேவன்.

4. பரிசுத்த ஆவியானவர் பிதாவுமல்ல, குமாரனுமல்ல.

(1) அவர் பிதாவல்ல, அவர் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவரும் அவரால் அனுப்பப்படுகிறவருமாயிருக்கிறார். ஆகவே அவர் பிதாவுக்குப் பிரத்தியேகமானவர். (யோவா. 15. 26.)

(2) அவர் குமாரனுமல்ல.

அவர் குமாரனுடையதில் எடுத்து, அதைக்கொண்டு அவரை மகிமைப்படுத்துவதால் அவர் குமாரனல்ல. (யோவா. 16. 14.)

அவருக்குப் பிரத்தியேகமானவர்.

மேலும் பரிசுத்த ஆவியானவர் குமாரன் போனபின்பு அனுப்பப்படுகிறவர்; ஆகையால் அவர் பிரத்தியேகமானவர். (யோவா. 16. 7.)

(3) அவர் பிதாவுமல்ல குமாரனுமல்ல. அவர் அடிக்கடி பிதாவோடும் குமாரனோடும் சேர்த்துச் சொல்லப்பட்டிருந்தாலும் பிதாவுக்கும் குமாரனுக்கும் பிரத்தியேகமானவராகவே சொல்லப்பட்டிருக்கிறார். (மத். 3. 16. எபே. 2. 18. கலா. 4. 4–6. யோவா. 14. 26; 15. 26. மத். 28. 19.)

(4) ஆகவே பரிசுத்தஆவியும் பிதாவாகிய தேவனும் ஒன்று என்று போதித்த செபெல்லியரின் கொள்கை இதால் நிராகரிக்கப்படுகிறது.

5. பரிசுத்த ஆவியானவர் திரித்துவத்தில் மூன்றாவதானவர். இது காலவித்தியாசத்தைக் குறிக்காமல் ஒருவருக்கொருவரிருக்கிற ஐக்கிய சம்பந்தத்தாலுண்டான அந்தஸ்து நிலைமையைமாத்திரம் குறிக்கும்.

அவர்கள் ஒருவருக்கொருவரிருக்கிற சம்பந்தத்தினால் அப்படிச் சொல்லப்படுகிறார்.

6. பரிசுத்த ஆவியானவர் பிதாவிலிருந்தும் குமாரனிலிருந்தும் புறப்படுகிறார்.

(1) பிதாவிலிருந்து புறப்படுகிறவர் என்று தெளிவாய் உரைக்கப்பட்டிருக்கிறது. (யோவா. 15. 26.)

(2) அவர் குமாரனிலிருந்து புறப்படுகிறவர் என்பது வேதாகமத்திஞல் அறியக்கூடிய சத்தியம்.

க. அவர் பிதாவிலிருந்து புறப்படுகிறபடியால் பிதாவின் ஆவி என்று சொல்லப்பட்டிருக்கிறார் (மத். 10. 20.). அவர் குமாரனுடைய ஆவி என்றும் அழைக்கப்படுகிறார் (ரோ. 8. 9. கலா. 4. 6. பிலி. 1. 19.). அப்படியாகில் அவர் குமாரனிலிருந்தும் புறப்படுகிறவராயிருக்கவேண்டும். (யோவா. 20. 22.)

உ. அவர் பிதாவிலிருந்து புறப்படுகிறவர்; ஆதலால் அவரால் அனுப்பப்படுகிறவர் என்று சொல்லப்பட்டிருக்கிறார். அவர் குமாரனாலும் அனுப்பப்படுகிறவர்; ஆதலால் அவர் குமாரனிலிருந்தும் புறப்படுகிறவராயிருக்கவேண்டும். அவர் தமது சீஷர்கள்மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னதில் பரிசுத்தஆவி தம்மிலிருந்தும் புறப்படுகிறவர் என்பதைக் காட்டினார்.

கவனிப்பு:—கிரேக்குச் சபையார் பரிசுத்தஆவி பிதாவினிடத்திலிருந்துமாத்திரம் புறப்படுகிறவர் என்று சாதிக்கிறார்கள். வெகுகாலத்துக்குப் பின்பு, அவர் குமாரனிடத்திலிருந்தும் புறப்படுகிறவர் என்ற கொள்கையை லத்தீன் சபையார் நிசேயா விசுவாசப்பிரமாணத்தில் சேர்த்தார்கள். இது இந்த இரண்டு சபைகளுக்கும் தீராத பிரிவினையை உண்டாக்கிற்று.

II. அவருடைய தொழில். அவர் சுத்திகரிப்பின் தொழிலை நடத்துகிறார்.

அவருடைய தொழில் இருவகைப்படும்.

1. புறத்துக்கிரியை.

(1) தேவசித்தத்தைத் தீர்க்கதரிசிகளுக்கும் அப்போஸ்தலருக்கும் வெளிப்படுத்தினதும்.

(2) அப்படி வெளிப்படுத்தின உபதேசங்களை வரிவடிவான வேதவாக்கியங்களாக எழுதிவைக்கப் பண்ணினதுமே. ஆகவே மோக்ஷிக்கொள்ளும் கிருபை யில்லையென்று மறுக்கிற பெலாகியர் சொசினியருடைய கொள்கை இதால் கண்டிக்கப்படுகிறது.

2. அகத்துக் கிரியை.

(1) வேதசத்தியங்களை மனிதர் அறிந்து உணரும்பொருட்டு அவர்கள் உள்ளத்தைப் பிரகாசிப்பிக்கிறார்.

(2) மனிதருடைய ஆகாத சிந்தையைச் சீர்திருத்திப் புதுப்பிக்கிறார். (தீத். 3. 5. யோவா. 3. 5.)



(3) விசுவாசிகள் நடக்கவேண்டிய வழியிலே நடத்துகிறார்.

(4) அவர்களை கிறிஸ்துவோடே ஐக்கியப்படுத்துகிறார்.

(5) புத்திர சுவிகாரத்துக்குரிய சலாக்கியத்தை அளிக்கிறார். (எபே. 1. 13, 14. 2 கொரி. 1. 22.)

(6) தேவ ஊழியக்காரரை நியமிக்கிறார். (எபே. 4. 12, 13.)

கவனிப்பு.—பரிசுத்த ஆவியானவருக்கு "பெராகினிற்றூஸ்" என்ற பேருண்டு. இந்த வார்த்தை, மூலத்தில் ஐந்து இடங்களில் வரும். யோவான் சுவிசேஷத்தில் நாலு இடங்களில் அது தேற்றரவாளன் என்றும், யோவான் நிருபத்தில் அது பரிந்துபேசுகிறவர் என்றும் திருப்பியிருக்கிறது. அதின் அர்த்தம்.

(க) பரிந்துபேசுகிறவர். அதாவது கிறிஸ்தவர்களுக்காக அவர்களுடைய சத்துருக்களுக்கு விரோதமாய் நியாயம் எடுத்துக்காட்டுவதைக் குறிக்கும். இந்த அர்த்தப்படி மகமதியர் அது மகமதுவைக் குறிக்கும் என்கிறார்கள். மகமது பரிந்துபேசுகிறவனாயிராமல் பட்டயத்தைக் கையாடுகிறவனாகவிருந்தான்.

(உ) அனுதாபப்படுகிறவர் அதாவது குற்றம் சாட்டப்பட்டவர்கள் பாரிசத்தில் நின்று அவர்களுக்காகப் பரிந்துபேசுதலைக் குறிக்கும். குமாரனும் பரிசுத்தஆவியும் நமக்காகப் பரிந்துபேசுகிறவர்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

## இந்த உபதேசத்தினால் நாம் கற்றுக்கொள்ளும் போதனை

1. நாம் பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம்பெற்று, திரியேகருடைய நாமத்திலே ஆசீர்வதிக்கப்படுகிறபடியால், பிதா குமாரன் உண்டு என்று விசுவாசித்து அறிக்கையிடுவதுபோல, பரிசுத்தஆவியும் உண்டு என்று விசுவாசித்து அறிக்கையிடவேண்டியவர்களாயிருக்கிறோம்.

2. சுவிசேஷத்தின் ஞானநன்மைகளையெல்லாம் அவருடைய வரப்பிரசாதங்களினால் நாம் அடையவேண்டியவர்களா யிருக்கிறோம்.

3. அவருடைய உதவியினால் நாம் பரிசுத்தமாக்கப்பட்டுத் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டியவர்களாயிருக்கிறோம்.

4. அவருடைய சகாயத்தினாலே விசுவாசத்தில் உறுதிப்படவும், பிறருக்குப் பிரயோசனப்படவும் வேண்டியவர்களாயிருக்கிறோம்.

5. திருச்சபை நிலைபெற்றோங்கும்படி உத்தம தேவஊழியக்காரரை ஏற்படுத்துகிறது, அவருடைய தொழிலாயிருக்கிறபடியால் பரிசுத்தஆவி உண்டென்று விசுவாசிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

# 9. உபதேசம்.

## பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

இந்த உபதேச பிரமாணம்.

1. இங்கே ஒன்பதாவதாக வருகிறது; அநேக பிரமாணங்களில் அது கடைசியாக வரும்.

2. "பொதுவான பரிசுத்தவான்களுடைய ஐக்கியம்." இவைகள் பிந்தி சேர்க்கப்பட்டன.

## பொதுவாயிருக்கிற பரிசுத்த சபை.

இதை மூன்றுபங்காக வகுத்துப் பார்ப்போம்.

I. சபை இன்னது.

II. சபை நிலைகொண்டிருப்பது.

III. சபை பரிசுத்தமும் பொதுவுமானது.

I. சபை இன்னது.

1. பாயிரமாக கவனிக்கவேண்டியது

(1) சபை என்பது κυριακος அல்லது εκκλησια என்ற பதங்களிலிருந்து வந்ததல்ல.

(2) இங்கே சொல்லப்பட்டிருக்கிற சபையானது.

க. தேவதூதரையும், மனிதரையும் சேர்த்துக்குறியாது.

உ. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களையும், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களையும் குறியாது.

ங. கிறிஸ்தவர்களான விசுவாசிகளைமாத்திரம் குறிக்கும்.

(3) சபை இன்னதென்பதை வேதவாக்கியங்களைக்கொண்டு ரூபிக்கலாம் (மத். 16. 18. பார்க்கில் அது பிந்தி ஸ்தாபிக்கப்படுவதையும் அப். 2. 47. வாக்கியத்தில் அது ஸ்தாபிக்கப்பட்டிருந்ததையும் அறியலாம்.) துவக்கத்தில் அது ஒருமையிலும், பின்பு அதுவளர வளர பன்மையிலும் சொல்லப்பட்டிருக்கிறது.



2. சபை ஒன்றாகவும் அநேகமாகவும் சொல்லப்பட்டிருப்பதால்.

(1) அதின் ஒருமையையும் பன்மையையும் கவனிக்கவேண்டும்.

εκκλησια என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில்,

க. இராசாங்க காரியமாய்க் கூடும் கூட்டத்தைக் குறிக்கும். (அப். 19. 32, 41.)

உ. ஜனங்கள் கூடிவருகிற இடத்தையும், கூடிவந்த ஜனங்களையும் குறிக்கும். (1 கொரி. 11. 18–20.)

ங. கிறிஸ்தவர்கள் கூடிவருதலைக் குறிக்கும்.

ச. கர்த்தருடைய வீட்டார், அழைக்கப்பட்டவர்கள் இவர்களையும் குறிக்கும். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதும் சபையைக் குறிக்கும்.

(2) ஒருமை பன்மையில் வழங்கப்பட்டது.

க. தேவனுடைய சபைகளுக்கும் புறஜாதியாரான சபைகளுக்கும் பன்மையும்; ஒரு வீட்டில் கூடி ஆராதிக்கிற ஜனங்களுக்கு ஒருமையும் வழங்கப்பட்டிருக்கிறது.

உ. ஒரு தேசத்திலுள்ள சபைகளுக்குப் பன்மையும், ஒரு பட்டணத்திலுள்ள சபைக்கு ஒருமையும் வழங்கப்பட்டிருக்கிறது. திருஷ்டாந்தம், கலாத்திய சபைகள், கொரிந்து சபை.

ங. பிந்தியகாலத்தில் இந்தச் சபைகள் பொதுவான சபையாக அழைக்கப்பட்டது.

3. ஒரே சபை என்பதற்குரிய நியாயங்கள்.

(1) ஒரே அஸ்திபாரத்தில் கட்டப்பட்டிருக்கிறது.

(2) திருச்சபையார் யாவருக்கும், ஒரே விசுவாசமிருக்கிறபடியால் விசுவாச ஐக்கியத்தில் ஒன்றாயிருக்கிறார்கள்.

(3) ஒரேவித ஞானமுமான திரவியங்களை அனுபவிக்கிறார்கள்.

(4) ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

(5) ஆவியில் ஒருமைப்பட்டு ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூருகிறார்கள்.

(6) ஆளுகையும் பராமரிப்பும் யாவருக்கும் பொதுவாயிருக்கிறது.

II. சபை நிலைகொண்டிருப்பது.

1. உலகமுடிவு பரியந்தம் எப்போதும் நிலைநிற்கும்.

2. சபை இனிமேலும் நிலைத்திருக்கும் என்பது விசுவாச விஷயத்துக்குரியது. (மத். 16. 18; 28. 19, 20)

III. சபைக்குரிய இலட்சணங்கள். அதாவது அது பொதுவானதும் பரிசுத்தமுமுள்ளதாயிருக்கிறது.

1. சபை பொதுவாயிருக்கிறது.

சுவிசேஷத்தின் ஆதிநியாயங்களைக் கைக்கொண்டு, பதிதருடைய புரட்டுக்களையும், பிரிவினைக்காரருடைய தப்பிதமான எண்ணங்களையும் தள்ளி அப்போஸ்தலருடைய உபதேசங்களை பழுதுபடாமல் கைக்கொள்ளும் சபையே பொதுவான அல்லது கத்தோலிக் சபையாம்.

(1) கத்தோலிக் அல்லது பொதுவான என்ற பதம், ஆதிச்சபை பிதாக்களால் பொதுவாகச் சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களுக்குப் பேராக வழங்கப்பட்டது. அவைகள் "பொதுவான நிருபங்கள்" என்று இப்போதும் அழைக்கப்படுகின்றன.

(2) ஆண்களும் பெண்களும் கூடி ஆராதிக்கும் கூட்டத்துக்குப் பொதுவான சபையென்று பேர் வழங்கிவந்தது.

(3) அந்தந்த இடங்களிலுள்ள சபைகளுக்கு மாற்றாக பொதுவான சபை என்னப்பட்டது.

(4) பொதுவான சபை என்பதில் குறிக்கப்படுகிற காரியங்கள்.

க. அது உலகத்தார் யாவருக்கும் பொதுவாயிருக்கிறது.

உ. இரட்சிப்புக்குரிய சகல சத்தியங்களையும் அது போதிக்கிறது

ஙு. எல்லா ஜனங்களும், எல்லாக் கட்டளைகளுக்கும் முழுமனதுமாய்க் கீழ்ப்படியவேண்டும் என்று போதிக்கிறது.

ச. அதில் எல்லா இஷ்டப் பிரசாதங்களும் சகல ஞான நன்மைகளுமிருக்கிறது.

பொதுவாயிருக்கிற பரிசுத்த சபை உண்டு என்று ஏன் விசுவாசிக்கவேண்டியதென்றால்,

1. நித்திய ஜீவனைப் பெறுவதற்கு அது ஜீவவழியாயிருக்கிறது

2. தப்பிதமான உபதேசங்களினாலும், நாம் சபைக்குப் புறம்பாகாதபடிக்கும், தகாத பிரிவினைகளால் சபையைவிட்டு நீங்கிப்போகாதபடிக்கும் அது ஒன்றான சபையாயிருக்கிறது.



3. இனிமேல் பேரின்ப சுகமடைய நாம் பரிசுத்தவான்களாயிருப்பது தீராத அவசியமானபடியால் அது பரிசுத்த சபை என்று விசுவாசிக்கவேண்டும்.

2. அது பரிசுத்தமுள்ளது.

(1) பொதுவாயும் வெளியாயும் பரிசுத்தமுள்ளது.

க. அழைப்பினால். பரிசுத்தமான நிலைமைக்கு அழைக்கப்பட்டிருக்கிறபடியாலும்.

உ. அதற்குரிய ஆராதனைகளும் நியமங்களும் பரிசுத்தமுள்ளதாயிருக்கிறபடியாலும்.

ஙு. அதிலே சேர்ந்திருக்கிற கிறிஸ்தவன், தான் பரிசுத்தமுள்ளவனாய் நடப்பேனென்று வாக்குக் கொடுத்திருப்பதாலும், அதை நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறபடியாலும்.

ச. அதில் சேருகிறவர்களை தேவன் பரிசுத்தம்பண்ணி, அவர்களை மோட்சவாசிகளாக்கப் பிரியசித்தமுடையவராயிருக்கிறபடியாலும்

ரு. தலையாகிய கிறிஸ்து பரிசுத்தமாயிருக்கிறதுபோல், அவருடைய சரீரமாகிய சபையும் பரிசுத்தமாயிருக்கவேண்டிய கடமையுள்ளதாயிருக்கிறபடியாலும் அது பரிசுத்தமுள்ளது.

(2) விசேஷமாயும் உள்ளாயும் சபை பரிசுத்தமுள்ளது.

இருதயத்தில் அருளப்படும் உள்ளான பரிசுத்தத்தினால் (எபே. 5. 26, 27.), இந்த சபை நிலைகொண்டிருக்கிறது என்றாலும் அது புறம்பான சபைக்கு ஒப்பாய் அவ்வளவு விரிவுள்ளதல்ல.

(3) வெளியரங்க சபையையும் அந்தரங்க சபையையும் ஒன்றுக்கொன்று ஒத்திட்டுப்பார்க்கில் அது பரிசுத்தமுள்ளது.

க. சபையிலே இந்த ஜீவகாலத்தில் பல ஜனங்கள் சேர்ந்திருப்பார்கள். அதை கோதுமையையும், களைகளையும்பற்றிய உவமையினால் அறியலாம். ஆகவே தொனத்தியருடைய கொள்கை நிராகரிக்கப்படுகிறது.

உ. இனிமேலும் பற்பல நிலைமையுள்ளோர் அதிலிருப்பார்கள். அவர்களில் சிலர் முழுவதுமாய்க் கிறிஸ்துவின் சபையைவிட்டு நீக்கப்படுவார்கள். அந்தரங்க சபையைச்சேர்ந்த மெய்விசுவாசிகள் இப்போதும் பரிசுத்தராயிருக்கிறார்கள். இனிமேல் பூரணமாய் பரிசுத்தராயிருப்பார்கள்.

ஙு. அப்படி இருந்தும் சபை இரண்டல்ல ஒன்றே.

(4) ...ருக்கும். ஆகவே சபை பரிசுத்தமுள்ளது.

க. சபை தனக்குரிய ஆராதனைகளினாலும், நியமங்களினாலும் பரிசுத்தமுள்ளதாயிருக்கிறது.

உ. உத்தம விசுவாசிகளாகிய தேவ பக்தியுள்ளவர்களால் மெய்யான பரிசுத்தமுள்ளதாயிருக்கிறது.

ங. மரித்துப்போன உத்தம விசுவாசிகளினாலே குறைவற்ற பரிசுத்தமுள்ளதாயிருக்கிறது.

ச. மறுமையிலே அது முற்றிலும் பரிசுத்தமுள்ளதாயிருக்கும்.

## பரிசுத்தவான்களுடைய ஐக்கியம்.

இந்தப் பங்கு பிந்தியகாலத்தில் சேர்க்கப்பட்டது.

1. இது பரிசுத்தவான்கள் தங்கள் ஆஸ்திகளைப் பொதுவாய் வைத்து அநுபவிப்பதைக் குறியாது. (அப். 2. 44, 45. 2 கொரி. 8. 13.)

(1) இது என்றைக்கும் பரிசுத்தவான்களைக் கட்டுகிறதல்ல.

(2) அந்த வழக்கத்தை சபையானது நீக்கிவிட்டது.

2. பரிசுத்தவான்களின் ஐக்கியம்.

(1) தன்மையில் அல்லது பரிசுத்தத்தில் வரையறையாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கும், மற்றவர்களுக்குமிருக்கிற அந்நியோந்நியத்தைக் குறிக்கலாம்.

(2) அல்லது பரிசுத்தவான்களுக்குள் சுதாவில்மாத்திரம், அல்லது சுதாவிலும் நிலைமையிலும் வரையறையாயிருக்கும் அந்நியோந்நியத்தைக் குறிக்கலாம்.

I. பரிசுத்தவான்களைப்பற்றியும்,

II. பரிசுத்தவான்களுடைய ஐக்கியத்தைப்பற்றியும் பார்ப்போம்.

I. பரிசுத்தவான்கள் யார்?

1. பரிசுத்தவான்களார்?

(1) பரிசுத்த பண்டங்களல்ல. (யாத். 28. 38.)

(2) தேவனல்ல. (ஏசா. 41. 16. எரே. 51. 5.)

(3) ஆலயக்கூடாரமல்ல.

(4) தேவதூதர்களல்ல. (மத். 25. 31.)

(5) சபையைச்சேர்ந்த மெய்யான அவயவங்கள்.



2. அவர்கள் ஏன் "பரிசுத்த மனுஷர்கள்" என்றழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

(1) புறம்பான அழைப்பினால், அதாவது உலகத்தினின்று பிரித்தெடுக்கப்பட்டுத் தேவனுக்கென்று பிரதிஷ்டையாக்கப்படுகிறதைக் குறித்தும், அது பொருள்களையும் மனிதனையும் பற்றும்.

க. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் எல்லாரும் பரிசுத்தவான்கள் என்றும்.

உ. புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் பெற்ற எல்லாக் கிறிஸ்தவர்களும் பரிசுத்தவான்கள் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

(2) உள்ளான இலட்சணத்தைப் பார்க்கில்.

க. விசுவாசத்தினாலும்.

உ. நடக்கை எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருப்பதாலும்.

3. பரிசுத்தவான்களின் வகுப்பு.

(1) கிறிஸ்துவுக்கு முன்னுள்ள பரிசுத்தவான்கள், கிறிஸ்தவ பரிசுத்தவான்கள்.

(2) அவர்களிருக்கிற இடம், அவர்கள் நிலைமை, பூமியிலே போராடுகிறவர்களாயும், ஆதேசிலே எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறவர்களாகவும், பரத்திலே வெற்றி சிறந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

II. பரிசுத்தவான்களுடைய ஐக்கியம்.

1. வேறே தன்மையுள்ளவர்களோடே ஐக்கியம்

(1) தேவனோடே.

க. தேவனுடைய பிதாவோடே உடந்தையாகி அவருக்குப் புத்திரராயிருக்கிறார்கள். (2 பேது. 3. 14. 1 யோவா. 1. 3.)

உ. தேவனுடைய குமாரனோடே அந்நியோந்நியமாகி அவரில் ஜீவனுள்ள அவயவங்களாயிருக்கிறார்கள்.

ங. தேவனுடைய பரிசுத்த ஆவியானவர், அவர்களுக்குள் வாசம்பண்ணுகிறபடியால் அவர்கள் அவருக்கு ஆலயமாயிருக்கிறார்கள்.

(2) தேவதூதரோடே, தேவதூதர் தங்கள் பணிவிடையினாலே பரிசுத்தவான்களோடே ஐக்கியமாயிருக்கிறார்கள். (எபி. 1. 14.)

2. மனிதரோடே.

(1) பூமியிலே மார்க்க சலாக்கியங்களை யநுபவிக்கிற சபையின் அவயவங்களோடே.

(2) உத்தம பரிசுத்தவான்களோடே.

க. பூமியிலிருக்கிற உத்தம பரிசுத்தவான்களுடன் அவர்கள் கிறிஸ்துவின் ஞானசரீரத்தில் அவயவங்களாயிருக்கிறார்கள்.

உ. பரலோகத்திலிருக்கிற பரிசுத்தவான்களுடன், நித்திய பேரின்பத்தைப்பற்றிய நடபிக்கையில் ஐக்கியமாயிருக்கிறார்கள்; அதற்கு பரிசுத்தஆவியானவர் அச்சாரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறார்.

ங. அவர்கள் நமது விஷயமாய்ச் செய்யும் ஊழியங்கள் வெளிப்படுத்தப்படவில்லை

ச. பரிசுத்தவான்களை நோக்கி ஜெபம்பண்ணலாமென்று போதிக்கிற ரோமான்மார்களுடைய உபதேசம் நூதனமும் அசத்தியமுமுள்ளது.

## பரிசுத்தவான்களுடைய ஐக்கியம் உண்டென்று நாம் விசுவாசிக்க வேண்டியது ஏதேனில்.

1. நாம் பரிசுத்தஜீவியம் செய்யும்படி நம்மை ஏவவும்.

2. பரிசுத்தமுள்ள தேவனுக்கு நாம் சரியானபடி நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கவும்.

3. பூமியிலிருக்கிற பரிசுத்தவான்களுக்கு அன்புபாராட்டி, பரலோகத்துக்குப் போயிருக்கிற பரிசுத்தவான்களைக் கனத்தோடே நினைக்கவும்.

4. விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்யவுமே.

# 10. உபதேசம்.

## பாவமன்னிப்பு உண்டென்று விசுவாசிக்கிறேன்.

திருச்சபைக்கும் பரிசுத்தவான்களின் ஐக்கியத்துக்கும் அடுத்தாய்ப் பாவமன்னிப்பைக் குறித்துச் சொல்லியிருப்பதால், அந்தச் சபையின் அங்கியொக்கியத்தைச்சேர்ந்த உத்தம விசுவாசிகளுக்குப் பாவமன்னிப்பு உண்டு.

இந்த உபதேசத்தைக்குறித்து இரண்டு காரியங்களைக் கவனிக்க வேண்டும்.



I. பாவமன்னிப்பு இன்னது.

II. திருச்சபையார் இந்த நன்மை அடைந்து அநுபவிக்கிறவிதம் இன்னது.

I. பாவமன்னிப்பு இன்னது.

1. பாவத்தின் தன்மை இன்னதென்று கவனிக்கவேண்டும்.

(1) பிரமாண விரோதம் பாவம். (1 யோவா. 3. 4.)

(2) பிரமாணமானதென்ன? மனச்சாட்சியினால் நேராய் வெளிப்படுத்தப்படுகிற சட்டமாம். அல்லது மனச்சாட்சிக்கு வெளிப்படுத்தப்பட்டு, அறிவிக்கப்பட்டதுமான சட்டமாம். மனச்சாட்சி அதை சரியென்று ஒப்புக்கொள்ளுகிறது.

(3) பிரமாணத்தை மீறுகிறவகை ... தகாததைச் செய்வது, செய்யத்தக்கதை செய்யாமலிருக்கிறது, கெட்டவழக்கங்கள், தகாத எண்ணங்கள்.

2. பாவத்தின் குற்றம்.

பிரமாணங்கள் நிபந்தனைகளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ரட்சை, சிட்சை.

(1) குற்றமென்றாலென்ன?

அது பாவமல்ல, பாவத்தின் பயனும். அது தண்டனைக்குள்ளானது. பாவம் சற்றுநேரம் நடப்பிக்கப்படுகிறதாம். குற்றமோ நிலையாயிருக்கும்.

(2) அது வேதம் முழுவதிலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

3. பாவ நிவாரணம்.

அது தேவனுக்கே உரியது. அது பாவியானவனுக்கு அருளப்படும் திவ்விய கிரியை.

(1) அது கிடைக்கும் வழிவகை, முன்னடையாளத்தால் விளக்கப்பட்டது.

இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பில்லை.

க. கிறிஸ்துவானவர் மரித்தார்.

உ. அவர் பாவத்துக்காக மரித்தார்.

ங. அவர் பாவத்துக்காக மரித்தார்; ஆனால் தம்முடைய பாவத்துக்காக அல்ல.

ச. அவர் பாவத்துக்காக மரித்தார்; தம்முடைய பாவங்களுக்காக வல்ல மனிதருடைய பாவங்களுக்காக மரித்தார்.

௫. அவர் பாவங்களுக்காக மரித்தார்; தம்முடைய பாவங்களுக்காக அல்ல, நம்மைத் தண்டனையினின்று விலக்கி இரட்சிக்கும்படி தாமே மனதார சுயமாய் நம்முடைய பாவங்களுக்காகப் பாடுகளை உத்தரித்தார்.

(2) ஆகவே பாவமன்னிப்பில் அடங்கிய காரியங்கள்:

கோப மூட்டப்பட்ட தேவனோடே ஒப்புரவாகுதல், நீதிக்குத் திருப்திசெய்தல்.

கிறிஸ்துவானவர் தேவனானதால் அவர் தம்மை, மீட்கும்பொருளாகச் செலுத்தினது அவருடைய மகத்துவ தன்மைக்கேற்றபடி சர்வ புண்ணியமுள்ளது.

4. சுருக்கமாய் பாவமன்னிப்பு என்பதில் மூன்று காரியங்கள் அடங்கியிருக்கின்றன.

(1) சகல மனிதரும் பாவிகளாயிருக்கிறார்கள்.

இதுவே அவர்கள் முன் நிலைமை.

(2) கிறிஸ்துவானவர் திருப்தியுண்டாக்கத் தம்மை பதிலீடாக மரணத்துக் கொப்புக்கொடுத்தார். இது புண்ணிய காரணம்.

(3) கிறிஸ்துவினிமித்தம் எல்லா மனிதரும் தேவனால் அங்கீகரிக்கப்படுகிறார்கள். இது ஆசீர்வாதமான பயன்.

II. திருச்சபையார் இந்த நன்மை அடைந்துஅனுபவிக்கிறவிதம்.

1. திருச்சபையிலே காட்டப்பட்டிருக்கிறது.

(1) மோசேயின் பிரமாணம் பூரண கீழ்ப்படிதலுக்கு மாத்திரம் நித்தியஜீவனை வாக்கு அளித்தது.

அப்போது மன்னிக்கப்பட்ட பாவங்கள் கிறிஸ்துவின் உத்தரவாத புண்ணியத்தைப்பற்றி நின்றது.

(2) பாவமன்னிப்பு சுவிசேஷத்தின் உபதேசமாயிருக்கிறது.

2. பாவமன்னிப்பை அடையும்விதம்.

(1) உத்தம மனஸ்தாபத்தோடும், மெய்யான விசுவாசத்தோடும் ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்குப் பாவமன்னிப்பு கிடைக்கும்.

(2) அவர்கள் திருச்சபையிலே நிலைத்திருந்து, ஞானஸ்நானத்துக்குப் பின்பு அவர்கள் செய்கிற பாவங்கள், கிறிஸ்துவின் உத்தரவாத பலியைப் பற்றிக்கொண்டு உத்தம மனஸ்தாபப்பட்டுக் குணப்படுகிறதினாலே மன்னிக்கப்படும்.



(3) ஆகவே ஒரே உத்தமகுணப்படுதல்மாத்திரம் உண்டென்று ரோமவைத்தியர் அறிக்கையிடுகிற கொள்கை இதினால் நிராகரிக்கப்படுகிறது.

III. பாவமன்னிப்பு உண்டென்று நாம் ஏன் விசுவாசிக்கவேண்டும்?

1. நமக்கு ஆறுதலுண்டாகும் பயம் தெளிய.

2. தேவதயவை சரியானபடி அறிந்து, மெய்க்கிறிஸ்தவர்களுக்குரிய சலாக்கியத்தை உணர.

3. தேவன் செய்த அளவற்ற நன்மைக்கு நன்றிசெலுத்தி அவரில் அன்புகூர.

4. கிறிஸ்துவுக்கு நாம் நித்திய கடனாளிகளாயிருக்கிறோம் என்ற உண்மையை உணர.

5. பாவமன்னிப்புக்கென்று நமதுமேல் விழுந்த கடமையாகிய குணப்படுதலையுடையவர்களாயிருக்கும்படி எச்சரிக்கையாயிருக்கவேண்டும் என்று உணர.

# II. உபதேசம்.

## சரீர உயிர்த்தெழுதல் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

திருச்சபையிலே இந்த உபதேசம் எப்போதும் அங்கீகரிக்கப்பட்டுவந்தது. பூர்வசபையின் விசுவாசப் பிரமாணங்களில் சிலவற்றில் "மாம்ச உயிர்த்தெழுதல்" என்றும், சிலவற்றில் "இந்த மாம்ச உயிர்த்தெழுதல்" என்றும் காட்டியிருக்கிறது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கவனித்தபோது, இந்த உபதேசத்தைக்குறித்தும் பார்த்தோம். ஆனால் அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் நம்முடையதற்கும் வித்தியாசமுண்டு. அவருடையது அழிவைக் காணவில்லை.

I. உயிர்த்தெழுதலாவது என்ன? அதாவது சரீர உயிர்த்தெழுதல்.

II. உயிர்த்தெழுதலின் சட்டம் என்ன? அதாவது அந்தந்த சரீர உயிர்த்தெழுதல்.

III. உயிரோடெழுந்திருக்கப் போகிறவர்கள் யார்? அதாவது எல்லாரும்.

IV. உயிர்த்தெழுதல் எப்போது நடக்கும்? அதாவது இனிமேல்.

1. உயிர்த்தெழுதலாவது என்ன?

அழிந்துபோன சரீரம் திரும்பவும் உருவாக்கப்பட்டும், ஆத்துமாவோடே இணைக்கப்பட்டும் ஒருகை ஜீவாத்துமாவாயிருப்பதேயாம்.

1. உயிர்த்தெழுதலும் திருஷ்டிப்பும் சம்பவிக்கக் கூடியதல்லவென்று பூர்வீக ஞானிகள் சொன்னார்கள். திருஷ்டிப்பு நடக்கக்கூடிய காரியம் என்று முன்னே குறித்திருக்கிறோம்.

ஆகவே ஞானிகள் உயிர்த்தெழுதலைப்பற்றிச் சொல்லியதும் தப்பிதம்; உயிர்த்தெழுதல் நடக்கிறதும் கூடாதென்றால் அது,

(1) எழுப்புகிறவருடைய அறிவு, வல்லமை குறைவினால் சம்பவிக்கவேண்டும். ஆனால் அவர் அளவற்ற ஞானமும் வல்லமையுமுடையவர்.

(2) எழுப்பப்படுகிறவர்கள் அழியாத நித்திய ஆவியை உடையவர்கள். அவர்கள் சரீரம் மறைந்தாலும் விகாரப்பட்டுப்போனாலும் அந்த அணுக்களைத் திரும்பச் சேர்த்து ஒன்றாகத் திரட்டிக்கொள்ளலாம்.

2. உயிர்த்தெழுதல் சம்பவிக்கக்கூடிய காரியம்.

(1) இந்த ஜீவகாலம் அழியாத ஆத்துமாவையும் அழியும் சரீரத்தையுமுடைய சிருஷ்டிகளுக்குத் தக்கதான நீடிய காலமுள்ளதல்ல.

(2) மனிதர் சுயாதீன சித்தமுடையவர்களாயும், சரீர அவயவமுடையவர்களாயுமிருக்கிறார்கள். ஆகவே நீதியினிமித்தமாக உயிர்த்தெழுதல் நடக்கக்கூடியது.

க. தேவதூதர் சுயாதீன சித்தமுடையவர்கள். ஆனால் அவர்களுக்குச் சரீரமில்லை. ஆகவே அவர்களுக்கு உயிர்த்தெழுதல் இருக்காது.

உ. மிருகங்களுக்குச் சரீரமிருந்தும் சுயாதீன சித்தமுடையவைகளல்ல. ஆகவே அவைகளுக்கு உயிர்த்தெழுதல் அவசியமில்லை.

ரு. மனிதர் சுயாதீனராயும் சரீரத்தை யுடையவர்களாயுமிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஜீவியத்தில் சரியான பலன் அளிக்கப்படாததால் நீதியினிமித்தியமாக உயிர்த்தெழுதல் நடக்கக்கூடியது.

(3) சாட்சிப்பிரமாணங்களின் ஒப்புமையைப் பார்க்கில் உயிர்த்தெழுதல் சம்பவிக்கக்கூடியது.

க. சூரியன் இராப்பகலாய்த் திரிகிறது.

உ. மாரிகாலம் கோடைகாலம் மாறிமாறி வருகிறது.



3. வேதத்தில் குறைவறத் தெளிவாய் உரைக்கப்பட்டிருக்கிறது.

(1) பழைய ஏற்பாட்டில். (யோபு. 19. 25–27. தானி. 12. 2.)

(2) புதிய ஏற்பாட்டில். கிறிஸ்துவானவர் அதைப் போதித்து ரூபித்திருக்கிறார் (மத். 22. 31, 32.). பவுல் அப்போஸ்தலன் போதித்திருக்கிறான். (அப். 23. 6; 24. 20, 21.)

(3) திருஷ்டாந்தங்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

க. பழைய ஏற்பாட்டில் மூன்று திருஷ்டாந்தங்கள்.

சாரிபாத் ஊர் விதவையின் மகன். (1 இரா. 17. 22.)

சூனேமியாளின் மகன். (2 இரா. 4. அதி.)

அடக்கம்பண்ணப்பட்ட மனிதன் (2 இரா. 13. 21.)

உ. புதிய ஏற்பாட்டில் மூன்று திருஷ்டாந்தங்கள்.

யவீரின் மகள். (மாற். 5. 41, 42.)

நாயினூர் விதவையின் மகன். (லூக். 7. 15.)

லாசரு. (யோவா. 11. 43, 44.)

ரு. கிறிஸ்துவானவர் தாமும் உயிரோடே எழுந்தருளினார். அவர் உயிர்த்தெழுதலின் முதற்பலனாக எழுந்தார்.

(a) எல்லாரும் உயிர்த்தெழுவார்கள்.

1. கர்த்தர் சகல மனிதர்மேலும் அதிகாரமுடையவர்.

2. அது கடைசி நியாயத்தீர்ப்புக்கு முந்தி நடக்கும்.

(b) தேவனுடைய பரிசுத்தவான்கள் உயிர்த்தெழும்புவார்கள்.

1. அவர்கள் அவருடைய அவயவங்களாயும், அவர் அவர்களுக்குச் சிரசாயுமிருக்கிறார்.

2. அவர்களுடைய சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாயிருக்கிறது. (ரோ. 8. 11. 1 கொரி. 3. 16.)

II. உயிர்த்தெழுதலின் சட்டம். அந்தந்தச் சரீரமே உயிர்த்தெழும்பும்.

1. வேதாகமம் அப்படியே சாட்சியிடுகிறது. (ரோ. 8. 11. 1 கொரி. 15. 53.)

2. உயிர்த்தெழுதல் என்பதில் அந்தக் கருத்து அடங்கியிருக்கிறது.

3. உயிர்த்தெழுதல் உண்டாகும் இடத்தைக் கவனிக்கையில் அதாவது (பூமியின் தூளிலிருந்து) அது நடக்கக் கூடியது.

4. நன்மை தீமை செய்த அந்தச் சரீரத்தில் நியாயத்தீர்ப்படையவேண்டிய திருக்கிறதாலும்.

5. சாகாமல் மறுரூபமாக்கப்பட்டுப் போகிறவர்களுடைய சரீரத்தை ஒப்புமையாகக் கவனிக்கையிலும்.

6. பழைய புதிய ஏற்பாடுகளில், உயிரோடே எழுப்பப்பட்டவர்களுடைய காரியத்தைப் பார்க்கையிலும் அந்தந்தச் சரீரமே எழுந்திருக்கும் என்று அறியலாம்.

7. பூர்வீக ஒரிஜனுடைய கொள்கையும், தற்கால சொசினியருடைய கொள்கையும் இதால் நிராகரிக்கப்படுகிறது.

## III. உயிரோடே எழுந்திருக்கப் போகிறவர்கள்.

இது பழைய ஏற்பாட்டில் தீர்மானிக்கப்பட்டிராத ஒரு காரியம்; எனெனில் கிறிஸ்துவானவர் எடுத்துக்காட்டின நியாயத்தில் (யாத். 3. 6. மத். 22. 32.), அது ஜனங்களின் நன்மையை அதாவது தேவனுடைய பரிசுத்தவான்களைப் பற்றினதாயிருந்தது. தானியேல், 12. 2-ல் அதின் தோகையைக் காட்டுகிறது. அநேகர் என்பது நல்லார் பொல்லார் எல்லாருமல்ல என்றாலும், ஆகவே நாம் ரூபகாரப்படுத்தவேண்டியது.

1. நீதிமான்களும் அநீதிமான்களும் எழுந்திருப்பார்கள். இது பழைய புதிய ஏற்பாடுகளால் ரூபிக்கப்பட்டிருக்கிறது. (தானி. 12. 2 அப். 24. 15. யோவா. 5. 29.)

2. சகல நீதிமான்களும் அநீதிமான்களும் எழுந்திருப்பார்கள். இது புதிய ஏற்பாட்டால்மாத்திரமே ரூபிக்கப்பட்டிருக்கிறது. (1 கொரி. 15. 22. அப். 24. 15. யோவா. 5. 28, 29.)

## IV. உயிர்த்தெழும்புங் காலம் இனிமேல்நடக்கும்.

1. பூர்வீகத்தில் இமநேயும் பிலேத்தும், உயிர்த்தெழுதல் சம்பவித்தாயிற்று என்று சொல்லி, இனிமேல் சரீரம் உயிர்த்தெழும்பாது என்றார்கள் (2 தீமோ. 2. 17, 18.). பாவ நிலைமையிலிருந்து புண்ணிய நிலைமைக்கு வருவதே உயிர்த்தெழுதலைக் குறிக்கும் என்பது அவர்கள் கொள்கை.

2. வெளிப்படுத்தல் அருளப்பட்ட காலமுதல், இந்தக் காரியம் மாறாத பிரமாணமாக ரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது.

## உயிர்த்தெழுதல் உண்டென்று விசுவாசிக்கவேண்டிய அவசியம்.

1. தேவனுடைய ஞானமும், வல்லமையும், இரக்கமும், நீதியும் விளங்கி அவர் நாமம் மகிமைப்பட.



2. மீட்பின் கிரியையைப்பற்றி நாம் சரியானபடி மதிக்க.

3. மரணத்துக்கு அஞ்சாதிருக்கவும், மற்றவர்கள் மரணத்துக்கு அதிகமாய்த் துயரப்படாதிருக்கவும் வெ.

4. பாவத்தைவிட்டு விலகி, பரிசுத்தமானதை நாடி, துன்பங்களில் ஆறுதல் அடைய.

# 12. உபதேசம்.

## நித்தியஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

சரீரம் உயிர்த்தெழுதல் என்பது நீதிமான்கள் அநீதிமான்களின் உயிர்த்தெழுதலைக் குறிப்பதுபோல நித்தியஜீவன் என்பது இருவகைப்பேருக்கும் உரித்தானது; அதாவது நீதிமான்கள் நித்திய பேரின்பம் அடையவும், அநீதிமான்கள் நித்திய ஆக்கினையடையவும் எழுந்திருப்பார்கள்.

I. பொல்லாதவர்களின் பிற்கால நிலைமை. ஆக்கினையடைய எழுந்திருப்பார்கள்.

II. நல்லவர்களின் பிற்கால நிலைமை. பேரின்பமடைய எழுந்திருப்பார்கள்.

## I. பொல்லாதவர்களின் பிற்கால நிலைமை, ஆக்கினையடைய எழுந்திருப்பார்கள்.

மனிதர் நிர்மூலமாகி சூனியமாய்ப் போவதையாவது, அல்லது வேதனைகளுக்கு முடிவுண்டாகுவதையாவது குறிக்குமென்று சிலர் இந்த உபதேசத்தை மறுப்பதுண்டு.

1. பொல்லாதவர்கள் நியாயத்தீர்ப்பு நாளுக்குப் பின்பு சூனியமாய்ப் போகமாட்டார்கள். இது [illegible] 25. 41-46ல் ரூசப்படுகிறது.

(1) அக்கினி அதாவது த[illegible]னை நித்தியமாயிருக்கும். ஆகவே தண்டிக்கப்படும் பொல்லாதவர்க[illegible] நித்தியமாயிருப்பார்கள்.

ஜீவன் நித்தியமுள்ளது. ஆகவே தண்[illegible]னையும் நித்தியமாயிருக்கும்.

(2) "நித்தியம்" எல்லையில்லாக் காலம். அவியா[illegible]க்கினி. (மத். 3. 12. மாற். 9. 43, 44. வெளி. 14. 11.)